தரம் 10

# தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)




இலத்திரனியற் பரவற் துறை
**தேசிய கல்வி நிறுவகம்**
மஹரகம, ஸ்ரீ லங்கா

**Web**| www.nie.lk **Email**| info@nie.lk

# தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**


ஊடகக் கல்விச் செயற்றிட்டம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா

இணையத்தளம்: www.nie.lk மின்னஞ்சல் : info@nie.lk

**தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும்**
தரம் - 10
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2015

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

ஊடகக் கல்விச் செயற்றிட்டம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

*அச்சுப்பதிப்பு :*
தேசிய கல்வி நிறுவகம்

# கற்றலும் கற்பித்தலும்

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்ளின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பிணியினை அகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல்/ கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைசெயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்யூசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.
  அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்
  செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களை பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்டுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தை எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்ததலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் /தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் (உளப்பாங்கு (Att tute), பகுப்பாய்வு (Anolysis), செயல் செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Account-ability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றென். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் குணபால நாணயக்கார**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# பிரதிப்பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

மனிதன் ஆதிகாலம் முதலே முறைமையான கல்விச் செயன்முறை மீது கவனஞ் செலுத்தி வந்துள்ளன. கல்வியின் இலக்குகள், கற்றல் முறைகள் தொடர்பாக அன்று முதல் இன்று வரையில் பல்வேறு அணுகுமுறைகளின் வழியே கண்டறிந்துள்ளவையும் எண்ணிலடங்கள் எவ்வாறாயினும் கல்வியின் பொது எதிர்பார்ப்பு, ஒவ்வொருவரையும் பூரண ஆளுமை கொண்டதாக உருவாக்குவதாகும். அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் சமூகத்திறன்கள் நிரம்பப் பெற்ற, தமது உள்ளார்ந்த ஆற்றல்களை உச்ச அளவுக்கு விருத்தி செய்து கொண்ட தனியாள்களை உருவாக்குவதற்குப் பொருத்தமான கல்வியை வழங்குவதற்காக முன்னோடியாக எமது நிறுவனம் பங்களிப்புச் செய்கின்றது.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடும் ஆசிரிய ஆசிரியைகள், கல்வியின் குறிக்கோள்கள், கற்றல் செயன்முறை, மதிப்பீடு ஆகிய மூன்று அம்சங்களிலும் சம அளவு கவனஞ் செலுத்துவது அவசியமாகும். அதற்குத் தேவையான வழிகாட்டல் இந்த ஆசிரியர் வழிகாட்டியினால் வழங்கப்படுகின்றது. இவ்வழிகாட்டியை முனமாதிரியாகக் கொண்டு, உங்களுக்குத் தனித்துவமான மாணவர் மையக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையொன்றினை நீங்கள் திட்டமிட்டுக் கொள்ளலாம்.

மாணவரின் விருத்தி , கல்வி முறைமையில் புத்தறிவைப் பிறப்பித்தல் போன்ற பல்வேறு எதிர்பார்ப்புக்களை முதன்மையாகக்கொண்டு ஆராய்ச்சிப் பணியிலும் ஆசிரியர் ஈடுபடுவது இன்றிமையாதாதாகும். வெற்றிகரமாக ஒவ்வோர் ஆசிரியரும் ஒவ்வொரு ஆராய்ச்சியாளர் ஆவார். நீங்கள் எற்கனவே நடத்திவரும் ஆராய்ச்சிப் பணிகளை மேலும் முறையானவகை செய்யத் திடசங்கற்பங் பூணுங் காலத்தின் தேவையாகும். அதற்குத் தேவையான வழிகாட்டல்களைப் பெறுவதற்காக எமது பங்களிப்பை எப்பொழுதும் நாடலாம் என்பதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

ஆசிரியர் ஞானக்கண்ணுடையோராவர் என்றால் அது மிகையாகாது மாணவர்களது கடந்த காலத்தையும் நிகழ்காலததையும் மட்டுமன்றி எதிர்காலத்தையும் ஊடுருவி நோக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு. ஆசிரியர் ஒரு போதும் வழிகாட்டியாக முன்னால் செல்பவராவார். மற்றுமொரு போது மாணவர்கள் முன்னாற் செல்லல் தாம் பின்னால் செல்பவராவார். தெளிவான விளக்கத்துடன் நன்மனப்பாங்குகளுடனும் செயற்படும். பாண்டித்தியமிக்க ஆசிரியர் என்ற வகையில் மமாணவர்களது பல்வகைமையைக் கவனத்திற் கொண்டு அம்மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குத் தேவையான பொறுப்களை ஏற்று அவருக்கு வகை கூறும் வகையில் செயற்படும் நல்லாசிரியர்களாக விருத்தியடைவதற்கு மேன்மேலும் ஆற்றல் திட்டடட்டும் என வாழ்த்துகின்றோம்.

**பீ. சனத் பூஜித்த**

பிரதிப் பணிப்பாளர் நாயகம்

ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பீடம்

## கலைத்திட்டக்குழு

| | |
|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | **பேராசிரியர் குணபால நாணயக்கார**<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| | **வீ. சனத் பூஜித**<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| | **திரு. சிட்னி ஜயவர்தன**<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| **மேற்பார்வை** | **திரு. டீ.ஏ. ஜயலால்**<br>பணிப்பாளர் - தொழினுட்பத்துறை, தே.க.நி. |
| **மேற்பார்வையும் ஒழுங்கமைப்பும்** | ஏ. நீலமணி<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **பாடவிடய ஆலோசனை** | பேராசிரியர் சந்திரசிறி ராஜபக்ச (PhD)<br>மானுடத் தொடர்பாடல் கற்கைகள் பிரிவு<br>களனிப் பல்கலைக்கழகம் |
| | கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம் (PhD)<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>ஊடகக் கற்கைகள்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| | கலாநிதி உதித கயா ஷான் குணசேகர (PhD)<br>கட்புல ஆற்றுகைக் கலைகள் கற்கைகள் பிரிவு<br>களனிப் பல்கலைக்கழகம் |
| | சேனானி ஹரிச்சந்திர (MCMS)<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>சிங்களக் கற்கைகள் பிரிவு<br>ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் |
| | சிவப்பிரியா ஸ்ரீராம், விரிவுரையாளர் (BA)<br>மொழிகள் மற்றும் தொடர்பாடல் துறை<br>திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம் |
| **எழுத்தாளர் குழு** | ஏ. நீலமணி (MPhil), சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>தேசிய கல்வி நிறுவகம் |
| | நயனா தீப்தி குணவர்த்தன (MA), பாடப் பணிப்பாளர்<br>மேல் மாகாணக் கல்வியமைச்சு |
| | இந்திக அமரசிங்ஹ (MA, PGDE), ஆசிரிய சேவை<br>மார/ கோக்கல மத்திய மகா வித்தியாலயம்<br>ஹக்மன |

| | |
|---|---|
| | சந்திரிகா சுரவீர (MA, PGDE), ஆசிரிய சேவை<br>மே. மா/ ஜய சமுத்திர தேவி பெண்கள் வித்தியாலயம்<br>நுகேகொடை |
| | எம்.ஏ. திலினி உத்பலா சேனாரத்ன (BA, PGDE),<br>ஆசிரிய சேவை,<br>மே. மா/ ஜயவித்தியாகரப் பெண்கள் வித்தியாலயம்<br>மஹரகம |
| | எஸ்.டீ. சிரிபிரேந்ரன் (MA), ஆசிரியர் சேவை 3<br>களு/ ஜீலான் மத்திய கல்லூரி, பானதுரை |
| **மொழி பரிவர்த்தனை** | அரச மொழி கரும திணைக்களம், ராஜகிரிய |
| **தமிழாக்கம்** | சிவப்பிரியா ஸ்ரீராம்<br>விரிவுரையாளர்<br>மொழிகள் மற்றும் தொடர்பாடல் துறை<br>திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம் |
| **அட்டைப்படம்** | சதுர மதுஸங்க |
| **கணினி வடிவமைப்பு** | எம்.என்.எப். றிஹானா, தேசிய கல்வி நிறுவகம் |
| **பல்வேறு உதவிகள்** | எஸ். அழககோன்<br>ஆரியதிலக பெர்ணாந்து |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்தவதற்குரிய அறிவுரைகள்

தரம் 10 தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இக்கையேடு, ஆசிரியர்களால் பின்பற்றக் கூடிய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பற்றிய வழிகாட்டல்களையும் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு முறைகள் பற்றிய அடிப்படை வழிகாட்டல்களையும் உள்ளடக்கியுள்ளது.

கற்பித்தற் செயற்பாடுகளுக்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலானது ஆசிரியர்களால் நாற்பது நிமிடப் பாட வேளையை மட்டும் மையப்படுத்திப் பின்பற்றக் கூடியதொன்றல்ல என்பதைக் கருத்திற் கொள்க.

பாடத்திட்டத்திலே காணப்படும் பாடத் தேரச்சிகளைக் கருத்திற் கொண்டு, ஆசிரியர்களால் தயாரிக்கப்படக்கூடிய கற்பித்தல் முறைகள் பாட உள்ளடக்கத்திலே ஒரு பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தமது மாணவர்களது தேர்ச்சி மட்டம், பிரதேசம் பற்றிய விபரம், பாடசலையின் கற்றல் கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய அவதானத்துடன் வழங்கப்பட்டுள்ள பாட அலகிலிருந்து பாடத்தைத் தயாரிக்க வேண்டும். ஆசிரியர்கள் தமது ஆக்கத்திறமைகள் மற்றும் பல்வேறு கற்றல் கற்பித்தல் முறைகள் என்பவற்றைப் பயன்படுத்திப் பாடத்தைத் தயார் செய்வது உசிதமானது. இங்கு மாணவர்களை மையப்படத்திய கற்றல் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கது.

மாணவர் தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அல்லது பிரயோகப் பயிற்சிகள், அவசியமாகின்ற பாடங்களிலே பாடவேளைக்கு மட்டுப்படுத்திய கற்றல் கற்பித்தலில் மாணவர்களை ஈடுபடுத்தாது உரிய அனுமதியுடன் அதிக பிரயோக செயற்பாடுகளை நடாத்துக.

**எழுத்தாளர் குழு**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii-iv |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| கலைத்திட்டக் குழு | vi-vii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுரைகள் | viii |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | |
| அறிமுகம் | x |
| தேசிய பொது இலக்குகள் | xi |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | xii |
| பாடத்திட்டத்தின் குறிக்கோள்கள் | xiv |
| பாடத்திட்டம் | xv |
| கற்றல் கற்பித்தற் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | 01 - 64 |

# அறிமுகம்

பாடசாலைக் கல்வியிலே தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடம் அறிமுகம் செய்யப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இப்பாடமானது தரம் 10 இலிருந்து ஆரம்பமாகி, க.பொ.த. (சா.த) மற்றும் க.பொ.த. (உ.த) பாடப்பரப்பை இலக்காகக் கொண்டமைந்துள்ளது.

இப்பாடமானது துரித கதியில் மாற்றமடையக் கூடிய ஒன்றாகவும், உலகத்தோடு மிகவும் சமீப தொடர்பை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகவும் பிரயோகச் செயற்பாடுகளை அதிகமாகக் கொண்ட ஒரு பாடமாகவும் அமைந்துள்ளது. இதற்காக பாடத்தைக் கற்பிக்கும்போது மாணவர்களை கற்றல் சூழலுக்கு இசைவாக்குதல், சுய கற்றல் மற்றும் பிரயோகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் என்பன அவசியமானது. அத்தோடு மாணவர்கள் தம் ஆக்கத்திறமைகளை விருத்தி செய்யவும், இணைப்பாட விதானத் திறன் விருத்தியினைப் பெறவும் உசிதமான செயற்பாடுகளை நடாத்தல் வேண்டும்.

ஆசிரியர் வழிகாட்டலுக்காகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டமானது 2012 இல் அமுல்படுத்தப்பட்ட பாடத்திட்டமாகும். அதனடிப்படையில் விடய அறிவு, ஆக்க ரீதியான மற்றும் பிரயோக ரீதியான கற்பித்தலில் ஈடுபடும் திறன் என்பன விரும்பத்தக்கது.

இப்பாடத்தைக் கற்கும் மாணவர்கள் பாட உள்ளடக்கங்களை மனனஞ் செய்தல் ஒரு போதும் அனுமதிக்க முடியாததொன்றாகும். தொடர்பாடலின் வளர்ச்சியோடு, குறுகிச் செல்லும் உலகிற்கு இசைவாக, அறிவு, திறன், மனப்பாங்கு சுய மற்றும் பொது நலனைக் கருத்திற் கொண்டு பல்வேறு தொடர்பாடல் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவரை உருவாக்குவது ஆசிரியரது தலையாய கடமையாகும். தொடர்பாடலின் அடிப்படையாகத் திகழும் ஆட்களிடைத் தொடர்பாடலின் பங்குதாரர்களை உருவாக்குவதும் எமது எதிர்பார்புகளில் ஒன்றாகும்.

**செயற்றிட்டக்குழு**

## கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல் ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகிய வற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங் களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. **வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**
   - அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
   - பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
   - அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
   - அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
   - பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. **சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**
   அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**
   அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. **"கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**
   விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
## 10 - 11 ஆந்தர பாடத்திட்டத்தின் குறிக்கோள்கள்

1. தொடர்பாடல் மற்றும் ஊடகச் சூழலின் பரிணாம வளர்ச்சி பற்றிய முறைமையான விளக்கத்தைப் பெறல்
2. விமர்சனப் பாங்கான, மதினுட்பங் கொண்ட ஊடகவியலாளர்கள் என்ற வகையில் தேவையான அறிவு, மனப்பாங்குகள், திறன்களை விருத்தி செய்தல்
3. சீரான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புதலும் அதனைக் கொண்டு நடத்துவதற்காக தனியாட்களின் தொடர்பாடல் ஊடகத் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்
4. ஒருவரிடத்திலுள்ள ஆக்கரீதியான ஊடகப் பாவனை மற்றும் மொழிப் பாவனைத் திறன்களை விருத்தி செய்தல்
5. ஊடகவியல் கட்டமைப்புக்களுக்குரிய தொடர்பாடற் சிறப்பம்சங்களை ஆராய்தல்
6. ஊடகவியற் செய்முறையின் தொடர்பாடல் ரீதியான கோட்பாட்டு அடிப்படைகள் பற்றிய விளக்கம் பெறல்
7. தொடர்பாடல் மற்றும் ஊடகவியல் செய்முறையின் கோட்பாட்டு அடிப்படைகள் பற்றிய விளக்கம் பெறல்
8. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கையை, ஏனையபாடங்களோடு இணைத்த வகையில் கற்றுக்கொள்வதும் பொருத்தமான மனப்பாங்குகளை வளர்த்தலும் ஊக்கமளித்தலும் வழிகாட்டலும்
9. அன்றாட வாழ்க்கைக்கும் தொழில்சார்ந்த வாழ்க்கைக்கும் பயனுடைய தொடர்பாடல், ஊடகவியல் தொழினுட்பம் மற்றும் சாதனங்கள் தொடர்பான விளக்கமும் பெறல்
10. சர்வதேச மற்றும் சுதேச தொடர்பாடல் ஊடகவியல் வலையமைப்பினுள் தனது தனித்துவத்தைக் கட்டியெழுப்பியவாறு பொறுப்புள்ள ஒரு பிரசை என்ற வகையில், சனநாயக ரீதியில் செயற்படுவதற்குத் தேவையான ஊடகவியல் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 வெவ்வேறு விதமான தொடர்பாடல் வகைகளை ஒப்பீட்டு ரீதியில் இனங் கண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில் சமயோசி தமாகப் பயன்படுத்துவார். | 1.1 தொடர்பாடல் முறையின் தன்மைகளை எளிய வரைவிலக்கணத்தினூடாகவும் மாதிரியினூடாகவும் விளக்கு வார். | **1.0 தொடர்பாடல் பாகுபாடு (15 பாடவேளைகள்)**<br>1.1 தொடர்பாடல் அறிமுகம்<br>(1) தொடர்பாடல் பற்றி லாஸ்வெல் வரைவிலக்க ணமும் அடிப்படை அம்சங்களும்<br>(2) ஷனன் மற்றும் வீவர் இனது தொடர்பாடல் மாதிரி - (1949)<br>(3) தொடர்பாடலின் அடிப் படையான பணிகள்<br>(4) புலக்காட்சி, தொடர்பாடல், தடைகள் (Gate Keeper) ஆரம்ப நிலைச் செய்தித் தேர்வு எண்ணக்கரு | 1. தொடர்பாடல் என்றால் என்ன என்பதை விளக்கு வார். அதன் கருத்தாக் கத்தை விரிவாக்குவார்.<br>2. தொடர்பாடல் என்பது ஓர் செயல்முறை என்பதைக் குறிப்பிடுக. அதன் மூலக்கூறுகள் தொடர்பான விளக்கத்தை வழங்குக.<br>தொடர்பாடுபவர்→ தகவல் செய்தி → ஊடகம் → பெறுனர் → பின்னூட்டம் → இடையூறு → அனுபவம் → பின்னணி → சந்தர்ப்பம் → தாக்கம்<br>3. தொடர்பாடல் என்பது இருவழிச் செயன்முறை என்பதை உதாரணங் களுடன் விளக்குவார்.<br>4. தொடர்பாடலின் நோக்கங் களை விளக்குவார்.<br>5. தொடர்பாடல் செயன் முறையினை வினைத்திறன் மிக்க வகையில் மேற் கொள்வதற்குரிய வழி முறைகளைக் குறிப்பிடு வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.2 ஒருவரது எண்ணங்களின் நடத்தையானது தொடர்பாடற் செய்முறையுடன் தொடர்புறும் விதத்தைப் பகுத்தாய்வார். | 1.2 அகமுகி/ ஆளுள்தொடர்பாடல்<br>(1) தனியாளின் மனப்பான்மை களும் எதிர்வினைகளும்<br>(2) தூண்டல் - துலங்கல் தன்மை<br>(3) எண்ணங்களைக் கையாளல்<br>(4) தொடர்பாடற் செய்முறையின் தொடக்கம் | 6. தொடர்பாடல் செயன் முறையின் போது வாயிற் காப்பாளர் கருத்துச் செயற்படும் விதத்தினை இனங்காணுவார்.<br><br>1. நபரொருவரினுள் ஆளுள் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றிய உயிரியல் விஞ்ஞானக் கருத்துக் களை ஆய்வு செய்வார்.<br>2. ஆளுள் தொடர்பாடல் ஒழுங்கான முறையில் நடைபெறுவதால் ஏற்படும் நன்மைகளை விளக்குவார்.<br>3. மனித நடத்தைகளை/ பழக்க வழக்கங்களைக் கட்டுப்படுத்து வதற்காக ஆளுள் தொடர்பாடல் பிரயோகிக்கப்படும் விதம் பற்றிக் கலந்துரையாடு வார்.<br>4. தொடர்பாடல் செயன் முறையின் ஆரம்பக் கட்ட மாக விளங்கும் ஆளுள் தொடர்பாடலின் முக்கியத் துவம் பற்றிக் கலந்துரை யாடுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | 5. சிறப்பான வாழ்க்கை ஒன்றிற்காக ஆளுள் தொடர்பாடலை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை ஆராய்வார்.<br>6. ஆளுள் தொடர்பாடல் நிகழும் பல்வேறு சந்தர்ப்பங்களை இனங்காணுவார். | |
| | 1.3 வாய்மொழி, வாய்மொழியல்லாத முறைகளைப் பயன்படுத்தி, ஆட்களிடைத் தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார். | 1.3 ஆட்களிடைத் தொடர்பாடல்<br>(1) இருவருக்கு இடையே அல்லது பலருக்கு இடையே நிகழு கின்றமை<br>(2) சமூக இருப்பின் இன்றியமையாத ஓர் அம்சம்<br>(3) ஆட்களிடைத் தொடர்பாடலின் சிறப்புக்கள்<br>(4) ஆட்களிடைத் தொடர்பாடலுக்கான தொழிநுட்பச் சாதனங்கள்<br>(5) இருவருக்கிடையிலான தொடர்பாடல் | 1. ஆட்களிடைத் தொடர்பாடல் (Inter-personal communication) என்றால் என்ன என்பதை சரியாக விளக்குவார்.<br>2. ஆட்களிடைத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>3. ஆட்களிடைத் தொடர்பாடலின் வலிமையை மதிப்பிடுவார்.<br>4. ஆட்களிடைத் தொடர்பாடல் விருத்திக்குப் பின்பற்ற வேண்டிய வழிவகைகளைப் பரிசீலனை செய்வார்.<br>5. சமூகத்தின் இருப்பிற்கு ஆட்களிடைத் தொடர்பாடல் உதவும் விதம் பற்றி விளக்குவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | 6. ஆட்களிடைத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தக்கூடிய தொழினுட்பச் சாதனங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி ஆட்களிடைத் தொடர்பாடல் சம்பவங்களை நடித்துக் காட்டுவார்.<br>7. சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் விதமாக ஆட்களிடைத் தொடர்பாடல் பயன்படுவதை மதிப்பிடுவார். | |
| | 1.4 வாய்மொழி மூலம், தொழினுட்பக் கருவிகளுடனோ கருவிகளின்றியோ ஒரு தொகுதி ஆட்களுடன் தொடர்பாடுந்திறனை வெளிக்காட்டுவார். | 1.4 சமூகத் தொடர்பாடல்<br>(1) கூட்டுத் தொடர்பாடலின் தன்மை<br>(2) கூட்டத்தினருக்கும் பேசுபவருக்கும் இடையில் தொடர்பு<br>(3) தொழிநுட்ப சாதனங்களின் பயன்பாடு<br>(4) கூட்டுத்தொடர்பாடலின் சிறப்புக்கள் | 1. குழு/ கூட்டுத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குவார்.<br>2. குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றி விளக்குவார்.<br>3. குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே தொடர்பாடற் செயற்பாடு நிகழும் விதத்தினைப் பரிசீலனை செய்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | 4. குழு/ கூட்டுத் தொடர்பாடலின் வெற்றிக்குப் பங்களிக்கும் காரணிகளைக் கண்டறிவார்.<br>5. குழு/ கூட்டுத் தொடர்பாடல் வெற்றிக்குக் காரணமாகும் உபாயங்களைப் பயன் படுத்துவார்.<br>6. குழு/ கூட்டுத் தொடர் பாடலின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார்.<br>7. ஒவ்வொரு கூட்டுத்தொடர் பாடல் சந்தர்ப்பத்திலும் தொடர்பாடலின் வகிபாகம், நோக்கம் என்பவற்றைக் காட்சிப்படுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 1.5 தொழில்நுட்ப விருத்தியின் விளைவாக வெகுசனத் தொடர்பாடல் செயற்படும் விதத்தையும் அது சமூக வயப்பட்டுள்ள விதத்தையும் பகுத்தாய்வார். | 1.5 வெகுசனத் தொடர்பாடல்<br>(1) வெகுசனத் தொடர்பாடலின் தன்மை<br>(2) வெகுசனத் தொடர்பாடலுக்கும் வெகுசன ஊடகங்களுக்குமிடையிலான தொடர்பு<br>(3) வெகுசனத் தொடர்பாடலான சமூகத் தேவையும் செல்வாக்குகளும்<br>(4) குவிகை ஊடகங்கள் (Convergent Media) | 1. வெகுசனத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குவார்.<br>2. வெகுசனத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவார்.<br>3. வெகுசன ஊடகங்களின் விசேட பண்புகளை இனங்காணுவார்.<br>4. வெகுசனத் தொடர்பாடலின் நோக்கங்களை இனங்காணுவார்.<br>5. வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் ஊடகங்களைக் காட்சிப்படுத்துவார்.<br>6. வெகுசன ஊடகங்களின் பலம், பலவீனம் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துவார்.<br>7. வெகுசன ஊடகப் பாவனையின் முக்கியத்துவத்தை கலந்துரையாடுவார்.<br>8. புதிய ஊடகங்களின் வருகையால் ஊடகக் குவிகை அல்லது ஊடகமையச் செயற்பாடு ஏற்பட்ட விதம் பற்றி பரிசீலிப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 தொடர்பாடலின் வெவ்வேறு வடிவங்களை உரியவாறு பயன்படுத்தி வினைதிறனான தொடர்பாடலில் ஈடுபடும் திறனை வெளிக்காட்டுவார். | 2.1 வாய்மொழிமூல வாய்மொழி மூலமல்லாத தொடர்பாடலை, நடைமுறையில் தமது வாழ்வில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக் கூடிய விதத்தை வெளிப்படுத்துவார். | **2.0 தொடர்பாடல் வடிவங்கள் (12 பாடவேளைகள்)**<br>2.1 வாய்மொழி மூல, வாய்மொழி மூலமல்லாத தொடர்பாடல்<br>(1) வாய்மொழி மூல, வாய்மொழி மூலமல்லாத தொடர்பாடல் தன்மை<br>(2) வாய்மொழி மூல தொடர்பாடல் மொழித் திறன்கள்<br>(3) வாய்மொழியல்லாத தொடர்பாடல் காரணிகள் (உடல், சூழல், சமூக காரணிகள்)<br>(4) வாய்மொழி மூல, வாய்மொழி மூலமல்லாத தொடர்பாடல் தேர்ச்சிகள் | 1. வாய்மொழி மூல மற்றும் வாய் மொழியற்ற தொடர்பாடல்களின் தன்மை, இயல்புகளை ஒப்பிட்டு இனங்காணுவார்.<br>2. ஆதி காலம் முதல் தற்காலம் வரை பயன்படுத்தி வரும் வாய்மொழியற்ற தொடர்பாடல் வடிவங்களை காலக்கிரமத்திற்கேற்ப பகுத்தாய்வார்.<br>3. வெகுசன ஊடகங்களின் விசேட பண்புகளை இனங்காணுவார்.<br>4. வாய்மொழியற்ற தொடர்பாடல் வடிவங்களை தகவல்கள் மூலம் விபரிப்பார்.<br>5. வாய்மொழித் தொடர்பாடலின் வெற்றிக்காகப் பயன்படும் உபாயங்களைப் பகுத்தாய்வார்.<br>6. வினைத்திறன் மிக்க ஓர் தொடர்பாளராகச் செயற்படுவதற்குத் தான் விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்களைக் காட்சிப்படுத்துவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.2 சரியாகவும் வினைத்திறனுடையதாகவும் மொழியைப் பயன்படுத்துவது தொடர்பான பரிச்சயத்தை விருத்தி செய்தவாறு வினைத்திறனான எழுத்துமூல தொடர்பாடலில் ஈடுபடுவார். | 2.2 எழுத்துமூல தொடர்பாடல்<br>(1) மொழியும் எழுதுதலும்<br>(2) வினைத்திறனான தொடர்பாடலின் இயல்புகள்<br>(3) எழுதுதல் தேர்ச்சிகள் (அலுவலக, ஆக்கியல் - Re-active) | 1. மனிதன் எழுத்துக்களை உருவாக்கிக் கொண்டதன் பின்னணியைப் படிப்படியாக விளக்குவார்.<br>2. மொழியின் இரு வடிவங்களை வேறுபடுத்தி இனங் காணுவார்.<br>3. பேச்சு மொழி, எழுத்து மொழிகளுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைக் கூறுவார்.<br>4. வினைத்திறன்மிக்க ஓர் ஆவணத்தின் இயல்புகளை இனங்காணுவார்.<br>5. ஆக்க ரீதியான பல்வேறு ஆவணங்களை உருவாக்கிக் காட்சிப்படுத்துவார்.<br>6. அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் ஆவணங்களைச் சரியான முறையில் தயார் செய்யும் திறனைப் பெறுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 கட்புல, செவிப்புலத் தொடர்பாடல் ஊடகங்களின் தன்மைகளையும் பேதங்களையும் இனங்கண்டு அவற்றை விளைதிறனுடையவாறு பயன்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார். | 2.3 கட்புல, செவிப்புல தொடர்பாடல்<br>(1) கட்புல, செவிப்புல தொடர்பாடலின் தன்மை<br>(2) கட்புல, செவிப்புல ஊடக பேதங்கள்<br>(3) கட்புல, செவிப்புல ஊடகத் தேர்ச்சிகள் | 1. கட்புல, செவிப்புல தொடர்பாடல் என்றால் யாதென இனங்காணுவார்.<br>2. ஆதிகாலம் முதல் தற்காலம் வரை பயன்படுத்தப்பட்டு வரும் கட்புல, செவிப்புலத் தொடர்பாடல் வடிவங்களின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுவார்.<br>3. தொடர்பாடலொன்றுக்காக கட்புல, செவிப்புல ஊடகங்களைப் பயன்படுத்தும் விதம், தொடர்பாடல் முறைகள் பற்றிக் குறிப்பிடுவார்.<br>4. கட்புல, செவிப்புல ஊடகங்கள் தொடர்பாடல் வகைகள் சமய, பண்பாட்டுத் தகவல்களுக்காகப் பயன்படுத்தப்படும் விதம் பற்றி ஆய்வு செய்வார்.<br>5. கட்புல, செவிப்புல ஊடகங்களைத் தொடர்பாடலுக்காக வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்துவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.4 அமைப்பொன்றின் இருப்புக்காக முறைசார்ந்த மற்றும் முறைசாரா தொடர்பாடலை வினைத்திறனுடையவாறு பயன்படுத்தக்கூடிய விதத்தைப் பகுத்தாய்வார். | 2.4 முறைசார்ந்த, முறைமையில் தொடர்பாடல்<br>(1) அமைப்பொன்றினுள், முறைசார் மற்றும் முறைமையில் தொடர்பாடலின் முக்கியத்துவமும் தன்மையும் தொடர்பும் தொழிற்பாடும்<br>(2) முறைசார்ந்த, முறைமையில் தொடர்பாடல் மாதிரிகள்<br>(3) முறைசார்ந்த, முறைமையில் தொடர்பாடல் தேர்ச்சிகள் | 1. முறைசார், முறைசாரா தொடர்பாடல்களுக்கிடையேயான வேறுபாட்டை விளக்குவார்.<br>2. முறைசார் தொடர்பாடலின் அவசியத்தை விளக்குவார்.<br>3. முறைசார் தொடர்பாடலின் போது பிரயோகிக்கப்படும் தொடர்பாடலின் மூலக்கூறுகளை இனங்காண்பார்.<br>4. முறைசாரா தொடர்பாடல் பற்றிய கருத்துக்களைக் கூறுவார்.<br>5. முறைசாரா தொடர்பாடல் நிகழும் விதம்பற்றி மாதிரிகளுக் கூடாக விளக்குவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 கணினிசார் வெளிப்பாட்டுக்காகவும் அலுவலகத்திலும் தகவல் தொடர்பாடலின் போதும், வகுப்பறையிலும் பயன்படுத்தப்படும் ஊடக சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவார். | 3.1 கணினி மூலம் அறிக்கையொன்றினைத் தயாரித்து முடிக்கும் திறனை வெளிக்காட்டுவார். | **3.0 பணிசார்ந்த ஊடக தொழில்நுட்பத் தேர்ச்சிகள் (15 பாடவேளைகள்)**<br>3.1 கணினி சார்ந்த வெளிப்பாட்டுச் சாதனங்கள்<br>(1) கணினி சார்ந்த வெளிப்பாட்டுக்குச் செய்முறையும் அதன் அவசியமும்<br>(2) கணினி சார்ந்த வெளிப்பாட்டுச் சாதனங்களை இனங்காணல்<br>(3) கணினி சார்ந்த வெளிப்பாட்டுச் சாதனங்களைப் பயன்படுத்தல் | 1. கணினி சார் வெளியீட்டு முறைகளை இனங்காண்பார்.<br>2. கணினி சார் வெளியீட்டு உபகரணப் பயன்பாட்டின் அவசியத்தை விளக்குவார்.<br>3. கணினிசார் வெளியீட்டு உபகரணங்கள் யாதென இனங் காண்பார்.<br>4. கணினிசார் வெளியீட்டு உபகரணங்களை முறையாக உபயோகிப்பார். | 03 |
| | 3.2 வெவ்வேறு ஊடக சாதனங்களைப் பயன்படுத்தி அலுவலகத்தில் தொடர்பாடலை நடைமுறைப்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார். | 3.2 அலுவலக ஊடக சாதனங்கள்<br>(1) அலுவலக ஊடகச் செய்முறையும் அதன் அவசியமும்<br>(2) அலுவலக ஊடக சாதனங்களை இனங்காணல்<br>(3) அலுவலக ஊடக சாதனங்களைப் பயன்படுத்துதல் | 1. அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் ஊடக சாதனங்களை இனங்காண்பார்.<br>2. அலுவலகத்தில் தொழிற்படும் ஊடகச் செயற்பாட்டை விபரிப்பார்.<br>3. அலுவலகத்தில் ஊடகச் செயற்பாட்டின் அவசியத்தை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>4. அலுவலகத்தில் ஊடக சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்துவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3 தகவல் பரிமாற்றச் செய்முறைக்காகப் பயன்படுத்தும் பல்வேறு ஊடாக சாதனங்களைச் சரியாகவும், முறையாகவும் பயன்படுத்துவார். | 3.3 தகவற் பரிமாற்ற ஊடக சாதனங்கள்<br>(1) தகவற் பரிமாற்ற ஊடகச் செய்முறையும் அதன் அவசியமும்<br>(2) தகவற் பரிமாற்ற ஊடக சாதனங்களை இனங்காணல்<br>(3) தகவற் பரிமாற்ற ஊடக சாதனங்களைப் பயன்படுத்தல் | 1. தொழினுட்ப வளர்ச்சியால் உலகில் துரிதகதியில் தகவல் பரிமாற்றம் நிகழ்வதை விளக்குவார்.<br>2. துரிதகதியில் தகவல் பரிமாற்றம் நிகழ்வதன் பயன்களை விளக்குவார்.<br>3. தகவல் பரிமாற்றத்திற்காகச் சமகாலத்தில் பயன்படுத்தப்படும் சாதனங்களைக் குறிப்பிடுவார்.<br>4. தகவல் பரிமாற்றத்திற்காகத் தொலைபேசியைச் சரியான முறையில் பயன்படுத்துவார். | 03 |
| | 3.4 கற்றல் - கற்பித்தல் செய்முறைக்குத் தேவையான எறிகை வகையல்லாத ஊடாக சாதனங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார். | 3.4 வகுப்பறை ஊடக சாதனங்கள் (எறிகை வகை அல்லாத)<br>(1) எறிகை வகை அல்லாத ஊடகங்களின் அவசியம்<br>(2) வகுப்பறை ஊடக சாதனங்கள் (எறிகை வகை அல்லாத)<br>(3) வகுப்பறை ஊடக சாதனப் பயன்பாடு (எறிகை வகை அல்லாத) | 1. வகுப்பறை ஊடக சாதனங்களின் அவசியத்தை விளக்குவார். (எறிகை வகை அல்லாத)<br>2. வகுப்பறையில் தொடர்பாடலை எளிதாக்கப் பயன்படும் ஊடக சாதனங்களை இனங்காண்பார். (எறிகை வகை அல்லாத)<br>3. வகுப்பறை ஊடக சாதனங்களை வகைபிரிப்பார். (எறிகை வகை அல்லாத)<br>4. வகுப்பறை ஊடகப் பயன்பாட்டுத் தேர்ச்சி பெறுவார். (எறிகை வகை அல்லாத) | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.5 கற்றல் - கற்பித்தல் செய்முறைக்குத் தேவையான எறிகை வகை ஊடக சாதனங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார். | 3.5 வகுப்பறை ஊடக சாதனங்கள் (எறிகை வகை)<br>(1) எறிகை வகை ஊடகங்களின் அவசியம்<br>(2) வகுப்பறை ஊடக சாதனங்கள் (எறிகை வகை)<br>(3) வகுப்பறை ஊடக சாதனப் பயன்பாடு (எறிகை வகை) | 1. வகுப்பறை ஊடக சாதனங்களின் அவசியத்தை விளக்குவார். (எறிகை வகை)<br>2. வகுப்பறையில் தொடர்பாடலை எளிதாக்கப் பயன்படும் ஊடக சாதனங்களை இனங்காண்பார். (எறிகை வகை)<br>3. வகுப்பறை ஊடக சாதனங்களை வகைபிரிப்பார். (எறிகை வகை)<br>4. வகுப்பறை ஊடகப் பயன்பாட்டுத் தேர்ச்சி பெறுவார். (எறிகை வகை) | 03 |
| 4.0 இலங்கையில் வெகுசன ஊடக நிறுவனங்களது உரித்தின் தன்மையைத் தேடியாய்ந்து அது ஊடகப் பயன்பாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவார். | 4.1 இலங்கையின் வெகுசன ஊடக நிறுவனங்களின் தோற்றம், உரித்து பற்றிய யதார்த்த நிலைமையைப் பகுத்தாய்வார். | **4.0 பணிசார்ந்த ஊடக தொழில்நுட்பத் தேர்ச்சிகள் (10 பாடவேளைகள்)**<br>4.1 இலங்கையின் வெகுசன ஊடக உரித்தும் தொழிற்பாடும்<br>(1) அரச, தனியார் ஊடக நிறுவனங்கள்<br>(2) செய்தித்தாள் நிறுவனமொன்றின் உள்வாரித் தொழிற்பாடு<br>(3) வானொலி நிறுவனமொன்றின் உள்வாரித் தொழிற்பாடு<br>(4) ஊடக நிறுவன உரித்தானது, பெறுநர் மீது செலுத்தும் செல்வாக்கு | 1. இலங்கையின் பிரதான ஊடக நிறுவனங்களை இனங்காண்பார்.<br>2. இலங்கையின் ஊடக நிறுவனங்களது தோற்றத்தை விபரிப்பார்.<br>3. செய்தித்தாள் நிறுவனமொன்றின் உள்வாரித் தொழிற்பாட்டை விமர்ச்சிப்பார்.<br>4. வானொலி நிறுவனமொன்றின் உள்வாரிச் செயற்பாட்டைப் பகுத்தாய்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | 5. தொலைக்காட்சி நிறுவன மொன்றின் உள்வாரிச் செயற்பாட்டை விபரிப்பார். | |
| | 4.2 வெகுசன ஊடக நிறுவன உரித்தானது ஊடகவியலாளர்களின் மீதும் பெறுநர் மீதும் செல்வாக்குச் செலுத்தும் விதத்தைப் பகுத்தாய்வார். | 4.2 வெகுசன ஊடக நிறுவன உரித்தானது, பெறுநர் மீது செலுத்தும் செல்வாக்கு<br>(1) ஊடக நிறுவன உரித்தும் நிறுவனக் கொள்கைகளும்<br>(2) ஊடக நிறுவன உரித்தும் ஊடகவியலாளர்களும்<br>(3) ஊடக நிறுவன உரித்தும் ஊடகவியலாளர்களும் பெறுநரும்<br>(4) ஊடக நிறுவன உரித்தானது, பெறுநர் மீது செலுத்தும் செல்வாக்கு | 1. வெகுசன ஊடக நிறுவனங்களது உரித்தின் இயல்பை அறிவார்.<br>2. ஊடக நிறுவனங்களது உரித்தின் அடிப்படையில் ஊடகங்களது கொள்கைகள் வேறுபடுவதை விபரிப்பார்.<br>3. ஊடக நிறுவனங்களது நோக்கை/ இலக்கை அடிப்படையாகக் கொண்டு, அதன் ஆளணியால் நிறைவேற்றப்படும் பணிகளை விளக்குவார்.<br>4. ஊடக உரித்து, ஊடகவியலாளர் மற்றும் பெறுநர்களுக்கிடையேயான தொடர்பு பற்றிக் கூறுவார்.<br>5. ஊடக உரித்து பெறுநர்மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை ஆராய்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3 வெகுசன ஊடக நிறுவனங்களின் வணிக நோக்கங்கள் மற்றும் கொள்கைகளையும் வெகுசன ஊடக நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையில் காணப்படும் பல்வேறு விதமான தொடர்புகளையும் பகுத்தாய்வார். | 4.3 வெகுசன ஊடக நிறுவனங்களும் அரசும்<br>(1) வெகுசன ஊடக நிறுவனங்களின் கொள்கைகளும் வணிகக் குறிக்கோள்களும்<br>(2) வெகுசன ஊடக நிறுவனங்களுக்கும் அரசின் குறிக்கோள்களுக்கும் இடையிலான இணைப்பு<br>(3) வெகுசன ஊடக நிறவனங்களின் தொழிற்பாட்டின்பால் அரசின் கடமைகளும் பொறுப்புக்களும்<br>(4) ஊடகங்களின் தொழிற்பாட்டின் மீது அரசின் நேரடி மற்றும் மறைமுகத் தலையீடு | 1. வெகுசன ஊடகங்கள் அவற்றுக்கே உரித்தான கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுவன என்பதை இனங்காண்பார்.<br>2. ஓர் பெறுநர் எனும் அடிப்படையில் பல்வேறு ஊடக நிறுவனங்களது கொள்கைகளை இனங்காண்பார்.<br>3. ஊடக நிறுவனங்கள் தம் வணிக நோக்கை வெளிப்படுத்தும் விதத்தைப் பகுத்தாய்வார்.<br>4. ஊடக நிறுவனங்கள் அரச நோக்கங்களை வெளிப்படுத்தும் விதத்தைப் பகுத்தாய்வார்.<br>5. வெகுசன ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசு தலையிடும் விதத்தினை இனங்காண்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 வெகுசன ஊடகத்தின் வெவ்வேறு விதமான பிரதிநிதித்துவத்தின் யதார்த்தத்தையும் சமூகத்தின் செல்வாக்கையும் வியாக்கியானஞ் செய்து காட்சிப்படுத்துவார். | 5.1 வெகுசன ஊடகங்களில் பல்வேறு விதமான வெளியீடுகளில் சமூகத்தின் தன்மை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார். | **5.0 வெகுசன ஊடகப் பிரதிநிதித்துவத்தைக் கற்றல் (12 பாடவேளைகள்)**<br>5.1 சமூகஞ் சார்ந்த பிரதிநிதித்துவத்தைக் கற்றல்<br>(1) குடும்ப அமைப்பு<br>(2) ஆண் - பெண் சமூகவியல்பு<br>(3) மக்கள் இனத்துவம்<br>(4) பிரசைத்துவம்<br>(5) மனித உரிமைகளும் பொறுப்புக்களும் | 1. ஊடகங்களின் மூலம் சமூகம் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் விதத்தை விபரிப்பார்.<br>2. ஏதேனுமொரு ஊடக நிகழ்ச்சியொன்றை உதாரணமாக எடுத்து அதன் மூலம் குடும்ப நலனுக்காக ஆற்றப்படும் சேவையைப் பகுத்தாய்வார்.<br>3. இலங்கைக்குப் பொருத்தமான ஆண் - பெண் சமூகத் தன்மை பற்றிய கருத்துக்களை வெளியிட தொலைக்காட்சி ஆற்றும் சேவையை ஆராய்வார்.<br>4. இன ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்க ஊடகம் செயற்படும் விதத்தை ஆராய்வார்.<br>5. ஊடகங்கள் மனித உரிமை பேணப்படும், மனிதக் கடமைகள் நிறைவேற்றப்படும் ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்ப ஆற்றும் வெளியீடுகளை இனங்காண்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.2 வெகுசன ஊடகங்களில் பல்வேறு விதமான வெளியீடு களில் பொருளாதாரத்தன்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார். | 5.2 பொருளாதார பிரதிநிதித்துவத் தைக் கற்றல்<br>(1) வேலையுலகு<br>(2) வெவ்வேறு தொழில்கள்<br>(3) சந்தை<br>(4) அபிவிருத்தி சார்ந்த சிந்தனை | 1. வெகுசன ஊடகங்களின் பல்வேறு வெளியீடுகள் தகவல்/ செய்திகளுடாக தொழில் உலகம் மற்றும் பல்வேறு தொழில்கள் இனங்காட்டப்படும் விதத் தைப் பகுத்தாய்வார்.<br>2. வெகுசன ஊடகத் தகவல்கள்/ செய்திகள், சந்தை பற்றிய அறிமுகத் தினை வழங்கும் விதத்தை விமர்சிப்பார்.<br>3. வெகுசன ஊடகத் தகவல் கள்/ செய்திகளின் ஊடாக அபிவிருத்திச் சிந்தனைகள் கட்டியெழுப்படும் முறையை மதிப்பிடுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.3 வெகுசன ஊடகங்களின் பல்வேறு விதமான வெளியீடுகளில் சமய, ஒழுக்க விழுமியத் தன்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார். | 5.3 சமய, ஒழுக்க விழுமியப் பிரதிநித்துவம்<br>(1) சமயம்<br>(2) ஒழுக்கமும் விழுமியங்களும்<br>(3) சமூகப் படிமங்கள்<br>(4) முரண்பாடும் சமாதானமும்<br>(5) மானுடப் பண்புகள் | 1. நாட்டின் சமய நலனுக்காக ஊடக வெளிப்படுத்தல்கள் மூலம் கிடைக்கப்பெறும் அனுசரணையை மதிப்பார்.<br>2. ஒழுக்க, விழுமிய மற்றும் மானுடப் பண்புகளின் அபிவிருத்திக்கு ஊடகம் ஆற்றும் சேவை யாதென தீர்மானிப்பார்.<br>3. நாட்டின் நலனில் அக்கறை செலுத்தும் சமூகப் படிமங்களை கட்டியெழுப்ப ஊடகங்கள் ஆற்றும் பணியை விபரிப்பார்.<br>4. முரண்பாட்டைத் தகர்க்கவும் சமாதானத்தைப் பாதுகாக்கவும் வெகுசன ஊடகங்கள் தம் வெளிப்படுத்தல்களை நிகழ்த்தும் விதத்தை ஆராய்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.4 வெகுசன ஊடகங்களின் பல்வேறு விதமான வெளியீடுகளில் அழகியல் தன்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார். | 5.4 அழகியல் பிரதிநிதித்துவத்தைக் கற்றல்<br>(1) களிப்பூட்டற் பணி<br>(2) இரசனை<br>(3) ஆக்கச் சிந்தனை<br>(4) அழகியலும் சமூகப் பிரக்ஞையும் | 1. வெகுசன ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் களிப்பூட்டல் நிகழ்ச்சிகளை வகைப்படுத்திக் காட்டுவார்.<br>2. வெகுசன ஊடகங்கள் களிப்பூட்டற் பணியை நிகழ்த்தும் முறையின் அழகியல்சார் தரத்தை விமர்சிப்பார்.<br>3. உயர் இரசனையுடைய ஏதேனுமொரு ஊடக நிகழ்ச்சியொன்றை உதாரணமாக எடுத்து அதன் பண்பை மதிப்பிடுவார்.<br>4. உயர் இரசனையுடைய நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பார்.<br>5. வெகுசன ஊடகங்கள் மத்தியில் ஓர் குறிப்பிட்ட நிகழ்ச்சியை உதாரணமாக எடுத்து அதன் ஆக்கச் சிந்தனையை ஆராய்வார்.<br>6. ஏதேனுமொரு ஊடகத்தை தெரிவு செய்து அதன் நிகழ்ச்சிகளில் சித்தரிக்கப்படும் சமூகப் பிரக்ஞையை விபரிப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 6.0 நிலைத்த புகைப்படக் கருவித் தொழில்நுட்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி ஆக்கரீதியான/ வெற்றிகரமான நிலைத்த புகைப்படமொன்றை ஆக்கும் தேர்ச்சியை வெளிப்படுத்துவார். | 6.1 வெவ்வேறு குறிக்கோள்களை அடைவதற்காகத் தொடர்பாடல் ஊடகத் துறையிலும் சமூகத்திலும் நிலைத்த புகைப்படக்கலை பயன்படுத்தப்படும் விதத்தையும் அந்தந்த ஒளிப் படங்களின் சிறப்புக்களையும் ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வார். | **6.0 நிலைத்த ஒளிப்படப் பிடிப்பு நுட்பத் தேர்ச்சிகள் (17 பாடவேளைகள்)**<br>6.1 நிலைத்த ஒளிப்படங்களும் அவற்றின் பயன்பாடும்<br>(1) நினைவுச் சின்னங்களாகப் பயன்படுத்துதல்<br>(2) அச்சு, ஊடகத்தில் பயன்படுத்துதல்<br>(3) சினிமா, தொலைக்காட்சி, ஊடகங்களில் பயன்படுத்துதல்<br>(4) நிலைத்த ஒளிப்படங்களின் இயல்புகளும் சிறப்புக்களும் | 1. நிலைத்த புகைப்படக்கலை ஒளிப்படக் கலை யாதெனஎளிமையாக விளக்குவார்.<br>2. வாய்மொழியற்ற தொடர்பாடல் ஊடகமாக நிலைத்த புகைப்படக்கலை பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மதிப்பிடுவார்.<br>3. நினைவுச் சின்னமாகப் புகைப்படப் பாவனை காணப்படுவதன் அவசியத்தை விபரிப்பார்.<br>4. அச்சு ஊடகங்களில் நிலைத்த புகைப்படப் பாவனை இடம்பெறும் விதத்தை விபரிப்பார்.<br>5. சினமா மற்றும் தொலைக் காட்சி ஊடகத்தில் நிலைத்த புகைப் படப் பாவனை பற்றி விபரிப்பார்.<br>6. நிலைத்த புகைப்படங்களின் சிறப்பம்சங்களை இனங் காண்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.2 நிலைத்த புகைப்படக்கலையின் எளிய தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்துவார். | 6.2 நிலைத்த கமராவின் எளிய தொழில்நுட்பம்<br>(1) நிலைத்த கமராவின் செய்முறை<br>(2) ஒளிப்படச் சுருள்களும் இலக்கத் (Digital) தொழில்நுட்பமும்<br>(3) ஒளிப்படங்களும் படவில்லைகளும்<br>(4) இலக்க ஒளிப்படத்துறைத் தொழில்நுட்பம் | 1. நிலைத்த புகைப்படக் கருவியின் தொழினுட்பச் செயற்பாடுகளை விபரிப்பார்.<br>2. படச்சுருள் ஒன்றைப் பரீட்சித்து அதன் தன்மையைக் கூறுவார்.<br>3. படக்களஞ்சிய ஊடகங்கள், நினைவக அட்டைகளை பரீட்சித்து அதன் தன்மையினை இனங்காணுவார்.<br>4. இலக்கப் புகைப்படத் தொழினுட்பத்தின் விசேடத்தை விளக்குவார்.<br>5. புகைப்படம் மற்றும் எதிர்ப் படலத்துக்கு இடையேயான வேறுபாட்டைக் கூறுவார்.<br>6. புகைப்படக்கருவியின் மூலம் சரியாக நிலைத்த புகைப் படங்களைப் பெற்றுக் கொள்வார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 6.3 தொழில்நுட்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி ஆக்க பூர்வமாகவும் வெற்றிகரமாகவும் நிலைத்த புகைப்படம் பிடிக்கும் திறனை வெளிக்காட்டுவார். | 6.3 தொழிநுட்பமும் ஆக்கியல் தன்மையும்<br>(1) கமராவின் தொழில்நுட்ப அம்சங்களைக் கையாளல்<br>(2) ஒளிக் கட்டுப்பாடு<br>(3) படச் சட்டகங்கள், கமராக் கோணம், புல ஆழம், நிலை நோக்குக் குறிக்கோள்கள்<br>(4) தொழில்நுட்பமும் ஆக்கியல் தன்மையும் | 1. புகைப்படக்கருவியின் அங்கங்கள் அவற்றின் செயற்பாடுகளை வேறு வேறாக விபரிப்பார்.<br>2. புகைப்படமொன்றை எடுப்பதற்காகப் புகைப்படக் கருவியைப் பல்வேறு கோணங்களிலும் பரிமாணங்களிலும் வைப்பார்.<br>3. புகைப்படமொன்றிற்குத் தேவைப்படும் ஒளியை வெற்றிகரமாக வழங்குவார்.<br>4. சரியான தொழினுட்ப உத்திகளைக் கையாண்டு ஒளிப்படம் பிடிப்பார்.<br>5. அதி உயர் வெளிப்பாடுடைய ஓர் புகைப்படத்தை உருவாக்குவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.4 நிலைத்த புகைப்படக்கலையின் ஆக்கபூர்வ விதி முறைகள் - உத்திகளைக் கையாண்டு பார்த்து விவரண மற்றும் ஆக்கரீதியான புகைப்படங்களை ஆக்கும் திறனை வெளிக்காட்டுவார். | 6.4 ஆக்கியல் முறைகளும் உத்திகளும்<br>(1) விவரண ஒளிப்படங்கள்<br>(2) ஆக்கபூர்வ ஒளிப்படங்கள்<br>(3) ஒளிப்படக் கண்காட்சிகள் | 1. விவரணப் புகைப்படமொன்றின் அம்சங்களை விளக்குவார்.<br>2. ஆக்க ரீதியான புகைப்படமொன்றுக்கும் விவரணப் புகைப்படம் ஒன்றுக்கும் இடையான வேறுபாட்டை ஒப்பிடுவார்.<br>3. ஆக்கரீதியான, விவரணப் புகைப்படங்களின் பிரயோகப் பெறுமானத்தை விளக்குவார்.<br>4. பல்வேறு ஆக்கபூர்வமான ஒளிப்படங்களைத் திரட்டுவார்.<br>5. விவரண, ஆக்கரீதியான புகைப்படப்பிடிப்பில் ஈடுபடுவார்.<br>6. விவரண, ஆக்கரீதியான புகைப்படங்களைக் காட்சிப்படுத்துவார்.<br>7. விவரண, ஆக்கபூர்வமான ஒளிப்படங்களைத் திரட்டிக் காட்சிப்படுத்துவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.5 நிலைத்த ஒளிப்படப் பிடிப்புத் துறையின் தொழில்சார் வேலையுலகினது தன்மையைத் தாம் பயன்படுத்தத்தக்க விதத்தையும் அதற்குரிய ஒழுக்கவியல் மற்றும் சட்டபூர்வ விடயங்களையும் எளிமையாக விவரிப்பார். | 6.5 நிலைத்த ஒளிப்பிடிப்புத் தொழில்<br>(1) பயிற்சி வாய்ப்புக்கள்<br>(2) சுயாதீன ஒளிப்படப் பிடிப்பாளர்<br>(3) ஒளிப்படப்பிடிப்புத் தொழில்<br>(4) ஒளிப்படப் பிடிப்புத்துறை ஒழுக்கங்களும் சட்டபூர்வமான விடயங்களும் | | 03 |

**தேர்ச்சி 1.0** :- வெவ்வேறு விதமான தொடர்பாடல் வகைகளை ஒப்பீட்டு ரீதியில் இனங்கண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில் சமயோசிதமாகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 1.1 தொடர்பாடல் முறைகளின் தன்மைகளை எளிய வரைவிலக் கணத்தினூடாகவும் மாதிரியினூடாகவும் விளக்குவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தொடர்பாடல் என்றால் என்ன என எளிமையான முறையில் விளக்குவார்.
2. தொடர்பாடல் என்பது ஓர் செயல்முறை என்பதைக் குறிப்பிடுக. அதன் மூலக்கூறுகள் தொடர்பான விளக்கத்தை வழங்குக.
   தொடர்பாடுபவர் → தகவல் செய்தி → ஊடகம் →
   பெறுநர் → பின்னூட்டம் → இடையூறு → அனுபவம் →
   பின்னணி → சந்தர்ப்பம் → தாக்கம்
3. தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணங்களைக் கூறுவார்.
4. தொடர்பாடல் பற்றிய லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தை இனங்காணுவார்.
5. தொடர்பாடல் பற்றிய ஷெனொன் மற்றும் வீவரின் சூத்திரத்தை இனங் காணுவார்.
6. பல்வேறு தொடர்பாடல் சம்பவங்களை லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் பரீட்சிப்பார்.
7. தொடர்பால் பற்றிய ஷெனொன் மற்றும் வீவரின் சூத்திரத்தை தொடர்பாடல் சம்பவங்களுக்கூடாகப் பரீட்சிப்பார்.
8. தொடர்பாடல் என்பது இருவழிச் செயன்முறை என்பதை உதாரணங்களுடன் விளக்குவார்.
9. தொடர்பாடலின் நோக்கங்களை விளக்குவார்.
10. தொடர்பாடல் செயன்முறையினை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்வதற்குரிய வழிமுறைகளைக் குறிப்பிடுவார்.
11. தொடர்பாடல் செயன்முறையின் போது வாயிற் காப்பாளர் செயற்படும் விதத்தினை இனங்காணுவார்.


## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- தொடர்பாடல் என்றால் என்ன? எனும் கருத்து உள்ளடங்கும் வகையிலே மாணவர்களை நடித்தற் செயற்பாடுகளை (Role play) செய்வித்தல். இங்கு மாணவர்கள் நகைச்சுவை உணர்வு வெளிப்படும் விதத்திலே தமது நடித்தற் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதனூடாக மற்ற மாணவர்கள் தொடர்பாடல் பற்றிய விளக்கம் பெற வேண்டும்.
- மேற்குறிப்பிட்ட நடித்தற் செயற்பாட்டை உதாரணம் காட்டி தொடர்பாடல் பற்றிய மாணவர்களது கருத்துக்களைக் கேட்டறிக. அக் கருத்துக்களை கரும்பலகையில் எழுதிக் காட்டுக.
- மாணவர்களது கருத்துக்களுக்கூடாக தொடர்பாடல் பற்றிய ஓர் எளிய விளக்கத்தை உருவாக்குக.
- தொடர்பாடல் பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்கு அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களை அறிமுகம் செய்க.
- பேராசிரியர் ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தை அறிமுகம் செய்க.

லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தின்படி,

''ஒரு நபர் ஏதாவதொரு தகவலை ஏதாவது ஒரு வழியில்/ அலை வரிசையில் யாரேனும் நபருக்கு ஏதேனுமொரு தாக்கம் ஏற்படுத்து வதற்காக முன்வைப்பது'' தொடர்பாடல் என அவர் குறிப்பிடுகின்றார்.


| | | |
|---|---|---|
| 1. Who | ஒருவர் | தொடர்பாடுபவர் |
| 2. Says What | ஒரு விடயம் | தகவல்/ செய்தி |
| 3. In which channel | ஏதாவது ஊடகம் | ஊடகம் |
| 4. To whom | மற்றொருவருக்கு | பெறுநர் |
| 5. With what effect | என்ன தாக்கம் | தாக்கம் |




மேற்குறிப்பிட்ட இரு மாதிரிகளும் ஒரே திசைக்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதோடு, இங்கு தொடர்படுபவருக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்பதை விளக்குக. மாதிரியை அறிமுகம் செய்க.

- மாணவர்கள் தாமறிந்த/ தம் வாழ்வில் நிகழ்ந்த தொடர்பாடற் சம்பவங்களை, லாஸ்வெல்லின் மாதிரிக்கேற்றாற்போல் விளக்கும்படி செய்க.
- தொடர்பாடல் பற்றிய ஷனொன் மற்றும் வீவரின் வரைவிலக்கணத்தை அறிமுகம் செய்க.
- வரைவிலக்கணம் - தொடர்பாடல் என்பது ஏதாவதொரு இடத்தில் உருவாகும் தெரிவு செய்யப்பட்ட ஓர் தகவலானது அவ்வாறே அல்லது அதற்குச் சமனான விதத்தில் மற்றொரு இடத்திலே மீள்நிர்மாணம் செய்யப்படுவதாகும்.

**ஷனொன் வீவரின் தொடர்பாடல் மாதிரி**




- கணிதம் மற்றும் மின்பொறியியல் நிபுணர்களான குளொட் ஷனொன் மற்றும் வொரன் வீவர் எனும் இரு நிபுணர்களால் இம்மாதிரியானது 1949 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடுக. இம் மாதிரியானது தொலைபேசியூடாக நிகழும் தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டதென்பதைக் குறிப்பிட்டு மாணவர்கள் இதுபற்றிய மேலதிக தகவல்களைத் திரட்டும்படி செய்க.
- இம்மாதிரிக்கிணங்க, தொடர்பாடலானது நேர்வழியில் நிகழும் என்பதையும் இங்கு தொடர்பாடல் செயற்பாட்டின் ஆரம்பம் தகவல் மூலாதாரம் என்பதையும் தொடர்பாடற் செயற்பாட்டின் போது தடைகள்/ இடையூறுகள் (Noise) ஏற்படலாம் என்பதையும் குறிப்பிட்டுக் காட்டுக.
- தொடர்பாடற் தடைகள்

கருத்துத் தடை - மொழி தொடர்பான தடைகள்

ஊடகத் தடை - தொழினுட்பத் தடைகள்

- மாணவர்கள் தம் வாழ்வில் நிகழ்ந்த தொடர்பாடற் சம்பவங்களை ஷெனொன்/ வீவரின் மாதிரியைக் கொண்டு விளக்கும்படி செய்க. படங்கள், உருவங்களை உபயோகிக்கும்படி செய்க.
- தொடர்பாடல் என்பது இருவழித் தொடர்பு என்பதை இனம் காட்டுக.
- தொடர்பாடற் செயற்பாடொன்றிலே தகவல் வழங்குநர் மற்றும் பெறுநரின் இடங்கள் மாறுபடும் தொடர்பாடல் நிகழ்வொன்றைத் தோல்வியுறச் செய்யும் காரணிகளை மாணவர்கள் மதிப்பிடுவதற்கு வழிகாட்டுக.
- நாம் தொடர்பாடலிலே ஈடுபடும் வெவ்வேறு சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடி அச் சந்தர்ப்பங்களிலே நிறைவேறும் தொடர்பாடலின் நோக்கங்களை மாணவர்களுக்கு எழுதிக் காட்டுக.

  உ-ம்: வகுப்பறையொன்றில் கற்பிக்கும் சந்தர்ப்பம்

  மேடை நாடகம் ஒன்றை ரசிக்கும் சந்தர்ப்பம்
- தொடர்பாடல் நிகழ்வொன்றை வினைத்திறன் மிக்கதாக்குவதற்குக் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- தொடர்பாடற் செயற்பாட்டைத் தோல்வியுறச் செய்யும் காரணிகளைக் காட்டும் படங்கள், உருவங்கள், வரைபடங்கள் முதலானவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- வாயிற் காப்பாளர் எண்ணக்கரு பற்றிய எளிய விளக்கத்தை மாணவர்கள் பெறும்படி செய்க.
- வாயிற் காப்பாளர் எண்ணக்கரு செயற்படும் விதத்தை உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

  உ-ம்: ஓர் குறிப்பிட்ட நிகழ்வொன்றின் அனைத்துச் சம்பவங்களையும் ஊடகம் அவ்வாறே வெளியிடாது.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- தொடர்பாடல் வரைவிலக்கணங்கள்
- இருவழித் தொடர்பாடல்
- பின்னூட்டல்
- தொடர்பாடல் பணிகள்
- வாயிற்காப்பாளர் எண்ணக்கரு

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேர்ச்சி மட்டத்திற்குரிய வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் உள்ளடக்கிய கோப்பு
- மாணவர்களது ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலே பயன்படுத்தக் கூடிய கற்பித்தல் கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

இங்கு கீழ் குறிப்பிட்ட காரணிகள் பற்றிக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

- தொடர்பாடலை இனங்காணுதல்
- லாஸ்வெல், ஷெனொன் மற்றும் வீவரின் மாதிரிகள் பற்றிய விளக்கம்
- தொடர்பாடல் செயற்பாட்டின் மூலக்கூறுகளை இனங்காணல்
- தொடர்பாடலின் முக்கிய நோக்கங்களை விளக்குதல்
- தொடர்பாடல் நிகழ்வின் வெற்றி/ தோல்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விபரித்தல்

**தேர்ச்சி 1.0** :- வெவ்வேறு விதமான தொடர்பாடல் வகைகளை ஒப்பீட்டு ரீதியில் இனங்கண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில் சமயோசிதமாகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 1.2 ஒருவரது எண்ணங்களின் நடத்தைகள் எவ்வாறு தொடர்பாடற் செயற்பாட்டோடு தொடர்புபடுகிறது என்பதை ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-


1. நபரொருவரினுள் ஆளுள் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றிய உயிரியல் விஞ்ஞானக் கருத்துக்களை ஆய்வு செய்வார்.
2. ஆளுள் தொடர்பாடல் ஒழுங்கான முறையில் நடைபெறுவதால் ஏற்படும் நன்மைகளை விளக்குவார்.
3. மனித நடத்தைகளை/ பழக்க வழக்கங்களைக் கட்டுப்படுத்து வதற்காக ஆளுள் தொடர்பாடல் பிரயோகிக்கப்படும் விதம் பற்றிக் கலந்துரையாடுவார்.
4. தொடர்பாடல் செயன்முறையின் ஆரம்பக் கட்டமாக விளங்கும் ஆளுள் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுவார்.
5. சிறப்பான வாழ்க்கை ஒன்றிற்காக ஆளுள் தொடர்பாடலை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை ஆராய்வார்.
6. ஆளுள் தொடர்பாடல் நிகழும் பல்வேறு சந்தர்ப்பங்களை இனங்காணுவார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- மனிதன் தன் மெய், வாய், கண், மூக்கு மற்றும் செவியினூடாக உள்வாங்கிக் கொள்கின்ற சமிக்ஞைகளை மனதால் விளங்கி, அவற்றிற்கான துலங்கல்களை வெளிப்படுத்தும் விதத்தினை வரைபடங்களுக்கூடாகக் காட்சிப்படுத்துக.

| தூண்டல் | → | சமிக்ஞை | → | மனதில் உருவாகும் உணர்வு | → | துலங்கல் |
|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ரோசா மலர் | கண் | ஒளிச்சமிக்ஞை | மகிழ்ச்சி, ஆசை | முகர்தல் |
| 2. | பாம்பு | கண் | ஒளிச்சமிக்ஞை | பயம், பதற்றம் | ஓடுதல் |
| 3. | இனிய பாடல் | காது | ஒலிச்சமிக்ஞை | மகிழ்ச்சி | ஆடல், பாடல் |



- மேற் காணப்படும் வரைபடத்தைப் பயன்படுத்தி, புலன் உறுப்புக்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் தகவலைத் தொடர்பாடலாக மாற்றும் விதம் பற்றி தூண்டல் - துலங்கல் செயற்பாட்டின் அடிப்படையில் விளக்குக.
- நபர் மற்றும் சந்தர்ப்பங்களிற்கேற்ப ஒரு பொருள்/ ஒரு சமிக்ஞை வெவ்வேறு அர்த்தங்களைப் பெறும் என்பதை விளக்குக.

  உ-ம்:

  - நாம் கடுமையான நித்திரை மயக்கத்தால் நித்திரைக்குச் செல்லத் தயாராகும் வேளை நண்பரொருவர் எம்மிடத்திற்கு வருதல் - நண்பரைத் தொந்தரவாக நினைத்தல்
  - நாம் தனியமையில் வாடும் போது நண்பரொருவர் எம்மிடத்திற்கு வருதல் - நண்பரைக் கண்டதும் மகிழச்சி ஏற்படல்
- ஆளுள் தொடர்பாடலின் அனுகூலங்கள் பற்றிக் கலந்துரையாடல்

  உ-ம்:

  - எல்லாவிதமான தொடர்பாடலின் ஆரம்ப கட்டமாக ஆளுள் தொடர்பாடல் காணப்படுதல்
- ஆளுள் தொடர்பாடற் செயற்பாட்டைச் சரிவரச் செய்வதற்குத் தாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை மாணவர்கள் தாமாகவே கண்டறியும்படி செய்க.

  உ-ம்:

  - சிந்தனையைக் கையாளும் பயிற்சி
    எண்ணங்களைக் கட்டுப்படுத்தல்
    நினைவு கூரும் திறனை விருத்தி செய்தல்
- ஒருவர் தன்னுடைய ஆளுள் தொடர்பாடல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைக் குறிப்பிடுக.
- ஆளுள் தொடர்பாடல் விருத்திக்குப் பங்களிக்கக் கூடிய காரணிகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் மாணவர்கள் தம் வாழ்வில் பின்பற்றக்கூடிய வழிமுறைகள் பற்றிக் கலந்துரையாடுக.
- மனதால் ஒரு விடயத்தைச் சரியாக இனங்கண்டு கொள்வதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
- மனதில் தோன்றும் விடயங்களை நன்கு ஆராய்ந்து நிதானமாக முடிவெடுக்க வேண்டும் எனக் குறிப்பிடுக.
- சிந்தனையை விருத்தி செய்வதற்கு, புத்தகங்கள் வாசித்தல், அறிவைப் பெற்றுக் கொள்ளல் (மற்றைய வழிகளில்), அனுபவ அறிவு, மன அமைதி முதலான பயிற்சிகளை மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிடுக.
- ஆளுள் தொடர்பாடல் எமது ஆக்கத்திறனைக் கட்டுப்படுத்தும் விதம் பற்றிக் குறிப்பிடுக.
- ஆளுள் தொடர்பாடல் நிகழும் பல்வேறு சந்தர்ப்பங்களை மாணவர்கள் கண்டறியச் செய்க.

  உ-ம்: தனிமையில் இருக்கும்போது
  கூட்டத்தின் மத்தியில் இருக்கும்போது
  ஏதாவதொரு வேலைக்கு ஆயத்தமாகும்போது
  முடிவுகள் எடுக்கும்போது

- ஆளுள் தொடர்பாடல் விருத்திக்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகளை மாணவர்கள் மதிப்பிடும்படி செய்க. இங்கு பின்வரும் விடயங்களை மாணவர்கள் கவனத்திற் கொண்டு வருக.
    - சரியான முடிவுகள் எடுத்தல்
    - ஆயத்தம் செய்தல்
    - சுய கட்டுப்பாடு
    - பேச்சாற்றல் பெறல்
    - ஆளுமை விருத்தி
    - தவறான எண்ணங்கள், சிந்தனைகளைப் புறக்கணித்தல்
    - எமது வாழ்வில் நிகழ்ந்த தவறுகள், தோல்விகளையும் அவற்றுக்கான காரணங்களையும் இனங்காணல்

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- ஆளுள் தொடர்பாடல் Intrapersonal communication
- சுய கட்டுப்பாடு Self control
- ஞாபகம் Memory

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வரைபடங்கள், வீடியோ காட்சிகள்
- தேர்ச்சி மட்டத்திற்கேற்ற நடித்தற் செயற்பாடுகள் (Role play)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- ஆளுள் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குதல்
- ஆளுள் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றிக் கூறல்
- சமகாலத்திலே ஆளுள் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி அவற்றால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய விவாதங்களை ஒழுங்கமைத்தல்

**தேர்ச்சி 1.0** :- வெவ்வேறு விதமான தொடர்பாடல் வகைகளை ஒப்பீட்டு ரீதியில் இனங்கண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில் சமயோசிதமாகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 1.3 வாய்மொழி, வாய்மொழியற்ற முறைகளைப் பயன்படுத்தி ஆட்களிடைத் தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. ஆட்களிடைத் தொடர்பாடல் (Inter-personal communication) என்றால் யாதென சரியாக விளக்குவார்.
2. ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழும் பல்வேறு சந்தர்ப்பங்களை இனங்காணுவார்.
3. ஆட்களிடைத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
4. ஆட்களிடைத் தொடர்பாடலின் வலிமையை மதிப்பிடுவார்.
5. ஆட்களிடைத் தொடர்பாடல் விருத்திக்குப் பின்பற்ற வேண்டிய வழிவகைகளைப் பரிசீலனை செய்வார்.
6. ஆட்களிடைத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தக்கூடிய தொழினுட்பச் சாதனங்களை இனங்காணுவார்.
7. சமூகத்தின் இருப்பிற்கு ஆட்களிடைத் தொடர்பாடல் உதவும் விதம் பற்றி விளக்குவார்.
8. ஆட்களிடைத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தக்கூடிய தொழினுட்பச் சாதனங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி ஆட்களிடைத் தொடர்பாடல் சம்பவங்களை நடித்துக் காட்டுவார்.
9. சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் விதமாக ஆட்களிடைத் தொடர்பாடல் பயன்படுவதை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- இருவரிடையே ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழும் விதத்தினை வெளிக்காட்டும் நடித்தற் செயற்பாடுகளை மாணவர்கள் மேற்கொள்ளச் செய்தல்.
- வீடியோ காட்சிகள், ஒளிப்படங்களைப் பயன்படுத்தல்.
- ஆட்களிடைத் தொடர்பாடல் என்றால் என்ன எனும் கருத்துக்களை மாணவர்களிடம் கேட்டறிக. இங்கு கீழ்வரும் விடயங்களை மாணவர்கள் அறியும்படி செய்க.
    - ஆட்களிடைத் தொடர்பாடல் என்பது இருவருக்கிடையே நேருக்கு நேராக நிகழ்வது
    - ஆட்களிடைத் தொடர்பாடலின்போது தகவல் வழங்குநர் மற்றும் பெறுனரின் வகிபாகங்கள் அடிக்கடி மாறுபடுதல்
- ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பின்னூட்டல்கள் கிடைக்காதென்பதைக் குறிப்பிடுக.
- பொதுவாக ஆட்களிடைத் தொடர்பாடல் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து நிகழ்வதாகும்.
- ஆட்களிடைத் தொடர்பாடலின் போது தொழினுட்பச் சாதனங்களின் பயன்பாடு பற்றிக் குறிப்பிடுக.
    - தொலைபேசியூடாக
    - Skype ஊடாக
    - மின்னஞ்சல் ஊடாக (E-mail)
    - தொலைநகல் ஊடாக (Fax)
- ஆட்களிடைத் தொடர்பாடலின்போது இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்துவதில் உள்ள வரையறைகள் பற்றி மாணவர்களுக்கு விளக்குவார்.

- ஆட்களிடைத் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி மாணவர்கள் தேடிக் கண்டறியச் செய்க.

  உ-ம்: உடனடி பின்னூட்டம் கிடைத்தல்

  ஒருமித்த கருத்துக்கள், முடிவுகள் பெறக் கூடியதாய் இருத்தல்
- ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழும் சம்பவங்கள் உள்ளடங்கும் வரைபடங்கள், சம்பாஷணைகள்
- ஆட்களிடைத் தொடர்பாடல் பற்றிய தகவல்கள் உள்ளடங்கிய செயலடைவுக் கோவையினை (Portfolio) மாணவர்கள் ஒவ்வொருவரும் உருவாக்கும்படி செய்க.
- ஆட்களிடைத் தொடர்பாடல் தோல்வியுறுவதற்கான காரணிகளை மாணவர்கள் கண்டறியும்படி செய்க.

  உ-ம்: - ஒருவர் கூறுவதை மற்றவர் செவிமடுக்காமை

  - மற்றவர் கருத்துக்கு மதிப்பளிக்காமை
- ஆட்களிடைத் தொடர்பாடலை வினைத்திறன் மிக்கவகையில் செயற்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய வழிவகைகளை அறிமுகம் செய்க.
- ஆட்களிடைத் தொடர்பாடல் எமது ஆக்கத்திறனைக் கட்டுப்படுத்தும் விதம் பற்றிக் குறிப்பிடுக.
- ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழும் பல்வேறு சந்தர்ப்பங்களை மாணவர்கள் கண்டறியச் செய்க.
  - ➢ நட்பு ரீதியான ஒழுக்க நெறிகள்
  - ➢ மற்றவர் கருத்துக்களைச் செவிமடுத்தல்
  - ➢ மற்றவரை உபசரித்தல்
  - ➢ மற்றவரை வரவேற்றல்
  - ➢ ஒத்துணர்வுடன் கலந்துரையாடல்
  - ➢ ஒருவரையொருவர் மதிப்பிடல்

- ஆட்களிடைத் தொடர்பாடலின் போது இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிய செய்முறைகளை மாணவர்கள் அடிக்கடி மேற்கொள்ளும்படி செய்க.
  - ➢ தொலைபேசியைச் சரியான முறையில் பயன்படுத்தல்
  - ➢ Facebook (முகப் புத்தகப்) பாவனை
  - ➢ மின்னஞ்சல் அனுப்புதல் (E-mail)

  இங்கு இலத்திரனியல் சாதனப் பாவனை மற்றும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் பற்றி விபரிக்குக.
- ஆட்களிடைத் தொடர்பாடல் சமூக நிலைப்பாட்டின் அத்தியாவசிய அங்கமாகத் திகழும் விதம் பற்றி விளக்குக.

  இங்கு பிரபலமான விரிவுரையாளர்களை/ பேச்சாளர்களை வரவழைத்து மாணவர்களுக்கான விளக்கங்களை வழங்கலாம்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- ஆட்களிடைத் தொடர்பாடல் Interpersonal communication

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேர்ச்சி மட்டத்திற்கேற்ற படங்கள்
- வரைபடங்கள், வீடியோ காட்சிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

கீழ் குறிப்பிட்ட கருத்துக்கள் பற்றிய அவதானத்தை ஏற்படுத்துக.

- ஆட்களிடைத் தொடர்பாடல் பற்றிய விளக்கம்
- ஆட்களிடைத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்தல்
- ஆட்களிடைத் தொடர்பாடலை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்ள உதவும் வழிவகைகளை இனங்காணல்
- தரப்படும் சம்பவங்களிலே ஆட்களிடைத் தொடர்பாடலைச் செம்மையாக நிகழ்த்தும் திறன்/ திறமை
- ஆட்களிடைத் தொடர்பாடலின் இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தும் அறிவு மற்றும் திறன்

**தேர்ச்சி 1.0** :- வெவ்வேறு விதமான தொடர்பாடல் வகைகளை ஒப்பீட்டு ரீதியில் இனங்கண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில் சமயோசிதமாகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 1.4 வாய்மொழி மூலம், தொழினுட்பக் கருவிகளுடனோ, கருவிகள் இன்றியோ ஒரு தொகுதி ஆட்களுடன் தொடர்பாடுந் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. குழு/ கூட்டுத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குவார்.
2. குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றி விளக்குவார்.
3. குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே தொடர்பாடற் செயற்பாடு நிகழும் விதத்தினை பரிசீலனை செய்வார்.
4. குழு/ கூட்டுத் தொடர்பாடல் தொடர்பாடலின் வெற்றிக்குப் பங்களிக்கும் காரணிகளைக் கண்டறிவார்.
5. குழு/ கூட்டுத் தொடர்பாடல் வெற்றிக்குக் காரணமாகும் உபாயங்களைப் பயன்படுத்துவார்.
6. குழு/ கூட்டுத் தொடர்பாடலின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கூறுவார்.
7. ஒவ்வொரு கூட்டுத்தொடர்பாடல் சந்தர்ப்பத்திலும் தொடர் பாடலின் வகிபாகம், நோக்கம் மாறுபடுவதைக் கண்டறிவார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழ்வுகளைக் காட்டும் படங்கள் அல்லது வீடியோ காட்சிகளை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துவதனூடாகப் பாடப்பிரவேசத்தினை ஆரம்பிக்கலாம்.

  அல்லது

  முன்னைய காலங்களிலே போதகர்களும் அறிஞர்களும் தங்களது கருத்துக்களை பொது மக்களுக்குத் தெரிவித்த விதம் பற்றிக் கலந்துரையாடுவதனூடாகப் பாடப்பிரவேசத்தினைச் செய்யலாம்.
- குழு/ கூட்டுத் தொடர்பாடல் பற்றிய மாணவர்களது கருத்துக்களைக் கேட்டறிக. அதனூடாக கூட்டுத் தொடர்பாடல் பற்றிய எளிய வரைவிலக்கணங்களைக் கட்டியெழுப்புக.

  இங்கு,
  - குழு/ கூட்டுத் தொடர்பாடல் என்பது ஓர் இலக்கை அடைவதற்காக அனைவரும் ஒன்று கூடி, ஒருவர் முகம் மற்றவர் பார்க்கும்படி நிகழ்வது என வரைவிலக்கணப் படுத்துக.
  - பலவிதப் படங்களினூடாக மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்தை மெருகூட்டுக.
  - திருமண வைபவம்/ மரணச் சடங்கின் போது சமூகத்தோடும் சிறு சிறு குழுக்களாகவும் தொடர்பாடலில் ஈடுபடுவர்.
  - சமூகத் தொடர்பாடல் - சிறு சிறு குழுக்கள்/ பல்வேறு நோக்கங்கள்
  - திருமண வைபவம்/ மரணச் சடங்கின்போது ஒருவர் உரையாற்றுகையிலே அதை அனைவரும் செவிமடுப்பவர்.
  - சமூகத் தொடர்பாடல் குழுக்கள்

    உ-ம்: வகுப்பறையொன்றிலே ஆசிரியர் கற்பிக்கும் போது குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழும்

- குழு/ கூட்டுத் தொடர்பாடலின்போது குழுக்களை சிறு குழுக்களாகவும் (குறைந்த அங்கத்தவர்கள்) பெரிய குழுக்களாகவும் (அதிக அங்கத்தவர்கள்) பிரிக்கலாம் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழும் விதத்தினை பொருத்தமான மாதிரிகள் வரைபடங்களினூடாக விபரிக்குக.
- குழு/ கூட்டுத் தொடர்பாடல் முறைசார் விதங்களிலும் முறைசாரா விதங்களிலும் இடம்பெறும் என்பதைக் குறிப்பிடுக.
  - முறைசார் தொடர்பாடல் உ-ம்: க.பொ.த. (சா.த) கருத்தரங்கு
  - முறைசாரா தொடர்பாடல் உ-ம்: பஸ் நிலையத்திலுள்ள கூட்டம்
- மாணவர்கள் கூட்டுத் தொடர்பாடலின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களைக் கண்டறியும்படி வழிப்படுத்துக.

  உ-ம்:
  - குழு அங்கத்தினர் அனைவரும் ஓர் இலக்கை அடையும் பொருட்டு செயற்படும் திறன் பெறுவர்.
  - குழுக்களாக செயற்படும் போது ஆளுமை விருத்தி ஏற்படும்.
- கூட்டுத் தொடர்பாடலின் வெற்றிக்குப் பங்களிக்கும் காரணிகளை ஆய்வு செய்யும்படி மாணவர்களை வழிப்படுத்துக.
  - தொழினுட்பம் சார் காரணிகள் - ஒலி, ஒளி சாதனப் பாவனை
  - தொழினுட்பம் சாராக் காரணிகள் - தலைமைத்துவத்தை மதித்தல்

  இதை ஓர் குழுச் செயற்பாடாகச் செய்விப்பது சாலச் சிறந்ததாகும்.
- கூட்டுத் தொடர்பாடல் நிகழ்வுகளைக் குறிப்பிட்டு மாணவர்கள் அதை நடித்துக் காட்டும் படி செய்க.
  - டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றி பாடசாலை சமூகத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல்
  - பாடசாலையில் நிகழவிருக்கும் மாணவர் சந்தை பற்றி பாடசாலைச் சமூகத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல்
  - மாணவர் ஒன்று கூடலின்போது சிறப்புரையாற்றல்

## முக்கியமான பதங்கள் (Key words) :
- குழு/ கூட்டுத் தொடர்பாடல் Group communication
- சிறு குழுத் தொடர்பாடல் Small group communication

## தரவிருத்தி உள்ளீடுகள் :
- சிறு குழுத் தொடர்பாடல், பெரிய குழுத் தொடர்பாடல்களை உள்ளடக்கும் படங்கள், வீடியோக் காட்சிகள்
- புத்தகங்கள், உசாத்துணை நூல்கள்
- குழு/ கூட்டுத் தொடர்பாடலின் வெற்றிக்குக் காரணமாகும் தொழினுட்பச் சாதனங்களை உள்ளடக்கும் படங்கள், வீடியோக் காட்சிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்
கீழ் குறிப்பிடப்பட்ட காரணிகளைக் கருத்திற் கொள்க.
- குழு/ கூட்டுத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்கும் திறன்
- குழு/ கூட்டுத் தொடர்பாடல் நிகழும் விதத்தைப் பொறுத்து அவற்றை வேறுபடுத்திக் காட்டும் திறன்
- குழு/ கூட்டுத் தொடர்பாடலின் சிறப்பம்சங்களை மதிப்பிடும் திறன்
- குழு/ கூட்டுத் தொடர்பாடலின் வெற்றிக்குக் காரணமாகும் உபாயங்களைக் கண்டறிதல்
- குழு/ கூட்டுத் தொடர்பாடலொன்றை வினைத்திறன் மிக்க வகையில் நடித்துக் காட்டுதல்

**தேர்ச்சி 1.0** :- வெவ்வேறு விதமான தொடர்பாடல் வகைகளை ஒப்பீட்டு ரீதியில் இனங்கண்டு அவற்றைத் தமது வாழ்க்கையில் சமயோசிதமாகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 1.5 தொழினுட்ப விருத்தியின் விளைவாக வெகுசனத் தொடர்பாடல் செயற்படும் விதத்தையும் அது சமூக வயப்பட்டுள்ள விதத்தையும் பகுத்தாய்வர்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. வெகுசனத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குவார்.
2. வெகுசனத் தொடர்பாடலை வகைப்படுத்துவார்.
3. வெகுசனத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவார்.
4. வெகுசன ஊடகங்களின் விசேட பண்புகளை இனங்காணுவார்.
5. வெகுசனத் தொடர்பாடலின் நோக்கங்களை இனங்காணுவார்.
6. வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் ஊடகங்களை இனங்காணுவார்.
7. வெகுசன ஊடகங்களின் பலம், பலவீனம் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
8. வெகுசன ஊடகப் பாவனையின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவார்.
9. புதிய ஊடகங்களின் வருகையால் ஊடகக் குவகை அல்லது ஊடக மையச் செயற்பாடு ஏற்பட்ட விதம் பற்றி பரிசீலிப்பார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-


- தொடர்பாடல் வகைகளை மாணவர்களுக்கு மீள நினைவுபடுத்துக.
  ஒளிப்படங்கள், வீடியோ காட்சிகளை இதற்காகப் பயன்படுத்துக.

  - ஆதிகாலம் முதல் தற்காலம் வரையிலான காலகட்டத்திலே சமூக பரிணாம வளர்ச்சியினூடாக ஏற்பட்ட தொழினுட்ப வளர்ச்சியால் தொடர்பாடல் வகைகள் விருத்தியடைந்தன என்பதைக் குறிப்பிடுக.

    நாகரீக மயமாதல் மற்றும் மக்களது தேவைகள் அதிகரித்தல் முதலானவற்றால் தொடர்பாடலிலும் மாற்றங்கள் ஏற்படுத்த நேர்ந்தது என்பதை தொடர்பாடல் வகைகளை விளக்குவதனூடாக விபரிக்குக.

- மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெகுசனத் தொடர்பாடல் தோன்றியது என்பதைக் குறிப்பிடுக.
- வெகுசனத் தொடர்பாடல் என்றால் என்ன எனும் மாணவர்களது கருத்துக்களைக் கேட்டறிக.
- மற்றைய தொடர்பாடல் வகைகளிலிருந்து வெகுசனத் தொடர்பாடல் வேறுபடும் விதத்தினை விளக்குக.
- வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படும் வெகுசன ஊடகங்கள் யாதென மாணவர்களைப் பெயரிட்டுக்காட்டும்படி செய்க.
- வெகுசன ஊடகங்களை,
  - இலத்திரனியல் ஊடகம்
  - அச்சு ஊடகம் என வகைப்படுத்தலாம்

- பின்வரும் ஊடகங்களை வெகுசன ஊடகங்கள் எனக் குறிப்பிடுவது சாலச் சிறந்தது.
  - பத்திரிகை
  - சஞ்சிகை
  - வானொலி
  - புதிய ஊடகம் (இணையம்)
  - தொலைக்காட்சி
  - கையடக்கத் தொலைபேசி/ செல்பேசி
- இவ் ஊடகங்களை பல்வேறு விதங்களிலே மேலும் வகைப்படுத்தலாம் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுக.




- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, மேற்குறிப்பிட்ட வெகுசன ஊடகங்களின் பலம் மற்றும் பலவீனம் பற்றிக் கண்டறியும்படி செய்க.
- வெகுசன ஊடகங்களின் இயல்புகளை மாணவர்களிடம் கேட்டறிக.

  உ-ம்: வெகுசன தொடர்பாடல் ஓர் முறைசார் நடைமுறையாகும்.<br>
  தொழில் சார் நிபுணர்கள் காணப்படுவர்<br>
  பெறுனர் மற்றும் வழங்குநருக்கிடையேயான இடைவெளி அதிகம்
- வெகுசனத் தொடர்பாடலின் நோக்கங்கள் யாதெனக் கூறுக.
- யாதேனும் ஓர் வெகுசன ஊடகத்தைக் குறிப்பிட்டு அதனூடாக இந்நோக்கங்கள் நிறைவேறும் விதம் பற்றி மாணவர்கள் ஆய்வு செய்யும்படி செய்க.
- சமகாலத்திலே ஏற்பட்ட தொழினுட்ப வளர்ச்சியால் வெகுசன ஊடகங்களின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுக.
  - இணையத்தில் பத்திரிகை வாசித்தல்
  - தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய நிகழ்ச்சியொன்றை மீளவும் கண்டுகளித்தல்
  - பத்திரிகையொன்று ஓர் நாளுக்கு பலதடவை அச்சிடப்படல்
- வெகுசனத் தொடர்பாடல் அவசியமா எனும் தலைப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- வெகுசனத் தொடர்பாடல் Mass communication
- வெகுசன ஊடகம் Mass media
- வெகுசன ஊடக நோக்கங்கள் Objectives of mass media

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தொடர்பாடல் வகைகளைக் காட்டும் ஒளிப்படங்கள், வீடியோ காட்சிகள்
- வெகுசன ஊடக நிறுவனங்களின் பெயர்கள், இலட்சினைகள் உள்ளடங்கிய ஒளிப்படங்கள்
- வெகுசன ஊடகங்கள் பற்றிய புத்தகங்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- வெகுசனத் தொடர்பாடல் என்றால் என்ன எனும் விளக்கம் பெற்றிருத்தல்
- வெகுசன ஊடகங்களை வகைப்படுத்தல்
- வெகுசன ஊடகங்களின் பலம் மற்றும் பலவீனம் பற்றி விமர்ச்சித்தல்
- வெகுசன ஊடகப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை மதிப்பிடல்
- வெகுசன ஊடகங்களின் நோக்கங்கள் மற்றும் அவற்றால் சமூகத்திற்கு ஆற்றப்படும் பணி பற்றிய விளக்கம் பெற்றிருத்தல்
- நவீன யுகத்திலே இணையத்தின் வருகையால் ஊடகங்கள் குவிகை பெற்றிருக்கும் விதத்தினை மதிப்பிடுதல்

**தேர்ச்சி 2.0** :- தொடர்பாடலின் வெவ்வேறு வடிவங்களை உரியவாறு பயன்படுத்தி வினைத்திறனான தொடர்பாடலில் ஈடுபடும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 2.1 வாய்மொழி மூல, வாய்மொழி மூலமல்லாத தொடர்பாடலை, நடைமுறையில் தமது வாழ்வில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக்கூடிய விதத்தை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. மனிதன் பல்வேறு வடிவங்களில் தொடர்பாடலில் ஈடுபடுவதை விளக்குவார்.
2. வாய்மொழி மூல மற்றும் வாய் மொழியற்ற தொடர்பாடல்களின் தன்மை, இயல்புகளை ஒப்பிட்டு இனங்காணுவார்.
3. ஆதி காலம் முதல் தற்காலம் வரை பயன்படுத்தி வரும் வாய் மொழியற்ற தொடர்பாடல் வடிவங்களை காலக்கிரமத்திற் கேற்ப பகுத்தாய்வார்.
4. வெகுசன ஊடகங்களின் விசேட பண்புகளை இனங்காணுவார்.
5. வாய்மொழியற்ற தொடர்பாடல் வடிவங்களை தகவல்கள் மூலம் விபரிப்பார்.
6. வாய்மொழித் தொடர்பாடலின் வெற்றிக்காகப் பயன்படும் உபாயங்களைப் பகுத்தாய்வார்.
7. வினைத்திறன் மிக்க ஓர் தொடர்பாளராகச் செயற்படுவதற்குத் தான் விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்களை இனங் காணுவார்.
8. சரியான முறையில் வாய்மொழி மூலம் மற்றும் வாய்மொழியற்ற தொடர்பாடலில் ஈடுபடும் திறனை வெளிக்காட்டுவார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- மனிதர்கள் பல்வேறு வடிவங்களிலே தொடர்பாடலில் ஈடுபடும் விதத்தினை வெளிப்படுத்தும் படங்கள்/ வீடியோக்களைக் காட்சிப்படுத்துவதனூடாகப் பாடப் பிரவேசத்தினை ஆரம்பிக்குக. அல்லது மாணவர்களை நடித்துக்காட்டச் செய்து/ அபிநயம் செய்து காட்டச் செய்து பாடப் பிரவேசத்தை ஆரம்பிக்கலாம். இங்கு வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய வார்த்தைப் பிரயோகமற்ற தொடர்பாடல் வடிவங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.
- மனிதர்கள் பல்வேறு வடிவங்களில் தொடர்பாடலில் ஈடுபடலாம் என்பதைக் கலந்துரையாடுக.
- தொடர்பாடல் பிரதானமாக இரண்டு வகைப்படும் எனக் குறிப்பிடுக.
    - வாய்மொழி மூலத் தொடர்பாடல்
    - வாய்மொழியற்ற தொடர்பாடல்
- மேற்குறிப்பிட்ட இரண்டு தொடர்பாடல் வடிவங்கள் பற்றிய போதிய விளக்கத்தை வழங்குக.
- வாய் மொழி மூலத் தொடர்பாடல் மொழிப் பாவனையை மையப்படுத்தியதென்பதைக் குறிப்பிடுக.
- அது பேச்சு, எழுத்து என இரண்டு வகைப்படும்.
- வாய் மொழியற்ற தொடர்பாடல் வசன/ மொழிப் பாவனையின்றி செயற்படும் என்பதைக் குறிப்பிடுக.

- ஆதிகாலங்களில் மனிதர்கள் பயன்படுத்திய குறியீடுகள், சமிக்ஞைகள் மற்றும் தற்காலத்தில் பயன்படுத்தும் குறியீடுகள், சமிக்ஞைகள் என்பவற்றை மாணவர்கள் தேடிக் கண்டறியும்படி செய்க.
- தொடர்பாடலில் ஈடுபடுபவர்களது பண்பாடு மற்றும் சந்தர்ப்பம், சூழல் என்பவற்றின் அடிப்படையில் செய்மொழியற்ற தொடர்பாடல் வடிவங்களான குறியீடுகள், சமிக்ஞைகள் என்பன மாறுபடும் என்பதைக் குறிப்பிடுக.
- வாய் மொழியற்ற தொடர்பாடலுக்கான உதாரணங்களைக் கலந்துரையாடுக.
- வாய்மொழி மூலத் தொடர்பாடலின்போது வாய்மொழியற்ற தொடர்பாடல் பயன்படும் விதத்தைக் கலந்துரையாடுக.

  உ-ம்:

  1. வாய்மொழி மூலத் தொடர்பாடலின்போது மாறுபடும் தொனி, உச்சரிப்பு, ஏற்ற இறக்கம் - குரல்
  2. எழுத்து மூலத் தொடர்பாடலின் போது நிறுத்தற் குறியீடுகளின் பாவனை
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வாய்மொழி மூல மற்றும் வாய் மொழியற்ற தொடர்பாடல் பற்றிய மேலதிக தகவல்களைத் திரட்டும்படி செய்க.

  இங்கு கீழ் குறிப்பிட்டுள்ள காரணிகளைக் கருத்திற் கொள்க.

  - மனித மொழி என்ற ஒன்றை உருவாக்க முன் வாய்மொழியற்ற தொடர்பாடலில் ஈடுபட்டதற்கான சான்றுகளைத் திரட்டுதல்.

  உ-ம்: ஓவியங்கள், சித்திரங்கள் மூலம் தகவல்களைத் தெரிவித்தல்
  அபிநயம் செய்து காட்டுதல்
- பாரம்பரிய சமூகத்தில் வாய்மொழியற்ற தொடர்பாடலின் பிரயோகம்
- சமகாலத்திலே வாய்மொழியற்ற தொடர்பாடல் பாவனை

  உ-ம்: வீதி சமிக்ஞை
  ஒலி சமிக்ஞை
- சமய, பண்பாட்டு வைபவங்களுடன் தொடர்புபடும் வாய் மொழியற்ற தொடர்பாடல் வடிவங்கள்

  உ-ம்: திருமண வைபவம்
  மரணச் சடங்கு

  மேலும் கீழ்க் குறிப்பிடப்படும் காரணிகளைக் கருத்திற் கொள்க.

  - மொழியின் அறிமுகத்தோடு வாய்மொழி மூலத் தொடர்பாடல் விருத்தி பெற்றமை
  - மொழியின் அறிமுகத்தின் பின் எழுத்து மூலத் தொடர்பாடலில் ஈடுபட்டமை
- வாய்மொழி மூல மற்றும் வாய் மொழியற்ற தொடர்பாடற் காரணிகளைப் பயன்படுத்தி தொடர்பாடலில் ஈடுபடும் சந்தர்ப்பங்களை மாணவர்கள் அவதானித்து அவற்றின் முக்கியத்துவத்தைக் கலந்தரையாடுக.

  உ-ம்: விருந்தோம்பல், சமூக ஒற்றுமை
- வாய்மொழி மூல மற்றும் வாய்மொழியற்ற தொடர்பாடல் வடிவங்களின் பயன்களை வேறுபடுத்தி இனங்காட்டுக.

  உ-ம்: ஒற்றுமை, உபசரித்தல்
- வாய்மொழி மூலத் தொடர்பாடலின் வெற்றிக்குப் பங்களிக்கும் மொழித்தேர்ச்சி பற்றிய தகவல்களை மாணவர்கள் கண்டறியும்படி செய்க.
- வாய்மொழி மூல மற்றும் வாய்மொழியற்ற தொடர்பாடற் தேர்ச்சிகளை வழங்கும் செயற்பாடுகளிலே மாணவர்களை ஈடுபடச் செய்க.

  இங்கு பிரதானமாக,

- வாய்மொழியற்ற தொடர்பாடல் தேர்ச்சிகளை வழங்கும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- வாய்மொழியற்ற தொடர்பாடற் தேர்ச்சிகளை வழங்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

  (விரிவுரை, களச் செயற்பாடுகள்)

  உ-ம்: உடல்மொழி, அங்க அசைவுகள் பாவனை
- வினைத்திறன்மிக்க வகையில் உரை ஒன்று ஆற்றுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளைத் தேடிக் கண்டறிவதில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- வினைத்திறன் மிக்க வகையில் உரையாற்றுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.
  1. பேச்சாளரின் தோற்றம் (Attire)

     கவரும் தன்மை

     முகத் தோற்றம்

     அங்க அசைவு
  2. பேச்சாளரின் குணாதிசயம் (நம்பகத் தன்மை)
  3. பேச்சாளரின் குரல், உச்சரிப்பு
  4. பேச்சாளரின் முன் ஆயத்தம்
  5. பேச்சாற்ற வேண்டிய முறைபற்றிய திட்டமிடல்

     நோக்கம்

     தகவல் பெறுனர்கள் பற்றிய போதிய அறிவு

     விடய உள்ளடக்கம்

     முக்கிய கருத்துக்களை (Main points) ஒழுங்கமைத்தல்
  6. கவர்ச்சிகரமான முறையில் உரையாற்றுதல்
- உரையாற்றும் சந்தர்ப்பத்திலே கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைத் தேடுவதில் மாணவர்களை ஈடுபடுத்துக. இங்கு குறிப்பிட்ட காரணிகளை விளக்குக.
  1. குரல் கட்டுப்பாடு
  2. கண் அசைவு - Eye contact
  3. தொனி - Tone
  4. அநாவசிய செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்
  5. பெறுனர்களது துலங்கல்களைப் பெற்றுக் கொள்ளுதல்
  6. நேரம் பற்றிய கவனம்
- நீண்ட ஓர் உரையாற்றும்போது, தம் முன்னனுபவங்களையும் தமது பேச்சாற்றும் பாணியையும் நன்கு உணர்ந்து பெறுனர்களுக்கேற்ப ஏற்ற இறக்கங்களுடன் கூடிய புதிய முறைகளை மாணவர்கள் பயிற்சி செய்யும்படி செய்க.
- பல்வேறு சந்தர்ப்பங்களைக் குறித்துக் காட்டி, மாணவர்கள் தம் பேச்சுத் திறனை விருத்தி செய்து கொள்ளளும்படியான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

  நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல்

  சிறப்பு விருந்தினர் ஒருவருடனான உரையாடல்
- வாய்மொழிமூலத் தொடர்பாடல் தேரச்சி அளிக்கும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- வாய்மொழி மூலத் தொடர்பாடல் - Verbal communication
- வாய்மொழியற்ற தொடர்பாடல் Non verbal communication
- தொடர்பாடல் வடிவங்கள் Varities of communication
- பொதுமக்கள் உரையாட்சி Public Addressing

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- தேர்ச்சி மட்டத்திற்கேற்ற வீடியோக் காட்சிகள், படங்கள்
- தேர்ச்சி மட்டத்திற்கேற்ற புத்தகங்கள், தரவுகள்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தொடர்பாடல் வடிவங்களைப் பெயரிடல்
- தொடர்பாடல் வடிவங்கள் ஒவ்வொன்றையும் விரிவாக விளக்குதல்
- வாய்மொழி மூலத் தொடர்பாடலில் வாய்மொழியற்ற தொடர்பாடல் பயன்படும் விதம்
- மனிதன் மொழியைப் பயன்படுத்த முன் வாய்மொழியற்ற தொடர்பாடலைப் பயன்படுத்திய விதம்
- சம காலத்திலே பயன்படுத்தப்படும் வாய்மொழியற்ற தொடர்பாடல் வடிவங்கள்
- பல்வேறு மக்கள் குழுவினர் பயன்படுத்தும் வெவ்வேறு வாய் மொழியற்ற தொடர்பாடல் முறைகள்
- வாய்மொழி, வாய்மொழியற்ற தொடர்பாடலின் போது பிரயோகிக்கப்படும் மொழித் தேர்ச்சிகளை அறிமுகம் செய்தல்
- வாய்மொழி மற்றும் வாய்மொழியற்ற தொடர்பாடல்களை அன்றாட வாழ்வில் பயன்படுத்தத் தேவையான தேர்ச்சிகளைக் கலந்துரையாடல்
- வகுப்பறைச் செயற்பாடுகள் - வினைத்திறன் மிக்க வகையில் பேச்சாற்றல்
- வாய்மொழி மூலத் தொடர்பாடல், வாய் மொழியற்ற தொடர்பாடல் தேர்ச்சிகளை மதிப்பிடல்

**தேர்ச்சி 2.0** :- தொடர்பாடலின் வெவ்வேறு வடிவங்களை உரியவாறு பயன்படுத்தி வினைத்திறனான தொடர்பாடலில் ஈடுபடும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 2.2 சரியாகவும் வினைத்திறனுடையதாகவும் மொழியைப் பயன்படுத்துவது தொடர்பான பரீட்சயத்தை விருத்தி செய்தவாறு வினைத்திறனான எழுத்து மூலத் தொடர்பாடலில் ஈடுபடுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. மனிதன் எழுத்துக்களை உருவாக்கிக் கொண்டதன் பின்னணியை விளக்குவார்.
2. மொழியின் இரு வடிவங்களை வேறுபடுத்தி இனங்காணுவார்.
3. பேச்சு மொழி, எழுத்து மொழிகளுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைக் கூறுவார்.
4. வினைத்திறன்மிக்க ஓர் ஆவணத்தின் இயல்புகளை இனங்காணுவார்.
5. ஆக்க ரீதியான பல்வேறு ஆவணங்களை உருவாக்கிக் காட்சிப்படுத்துவார்.
6. அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் ஆவணங்களைச் சரியான முறையில் தயார் செய்யும் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- ஆதிகாலம் முதல் தற்காலம் வரை பயன்படுத்தப்பட்டு வரும் பல்வேறு ஆவணங்களின் ஒளிப்படங்கள், வீடியோக்களைக் காட்சிப்படுத்துவதனூடாகப் பாடப் பிரவேசத்தினை ஆரம்பிக்குக. கல்வெட்டுக்கள், ஓலைச் சுவடுகள் முதலானவற்றைக் காட்சிப்படுத்துக.
- சமகாலத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- ஆதிகாலத்திலே எழுத்து மூலத் தொடர்பாடல் குறுகிய அளவில் இடம் பெற்றமை பற்றியும் மற்றும் சமகாலத்திலே நவீன தொழினுட்ப சாதனங்களைப் பற்றியும் குறிப்பிடுக.

  உ-ம்: கணினி
- ஆரம்பத்தில் பேச்சு மொழி உருவானதென்றும் பின்பு எழுத்து மொழி உருவானதென்றும் குறிப்பிடுக.
- மொழியின் இரு வடிவங்கள் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபடுக.
- பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழி வேறுபடும் விதத்தை இனங்காணச் செய்க.
- வினைத்திறன் மிக்க ஓர் ஆவணத்தின் இயல்புகளைக் குறிப்பிடுவதோடு ஆக்கரீதியான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளச் செய்க.

  அன்றாடம் பயன்படும் ஆவணங்களை மாணவக் குழுக்களிடம் வழங்கி, அவற்றின் குறைபாடுகளையும் அவற்றில் காணப்பட வேண்டிய பண்புகளையும் மாணவர்கள் இனங்கண்டு கொள்ளும்படி செய்க.

  உ-ம் : பத்திரிகை ஆக்கமொன்று
  வகுப்பறையில் உள்ள சுவரொட்டி
  குறிப்புப் புத்தகத்தின் ஓர் பக்கம்

- வினைத்திறன்மிக்க ஆவணங்களைத் தயாரிக்கும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
    - அலுவலகக் கடிதங்கள்
    - அறிக்கை எழுதுதல்
- மாணவர்களை தொடர்ந்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்துக. இதற்காக விசேட பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கமைக்குக.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- எழுத்துருக்கள் - Models of Alphabets
- கல்வெட்டுக்கள் - Stone inscriptions
- ஓலைச் சுவடி - Manuscript
- நவீன அச்சுத் தொழினுட்பம் (டிஜிட்டல்) - Digital Printing Technology
- அலுவலகக் கடிதங்கள் - Official Letters
- அறிக்கை எழுதுதல் - Report writing
- சுயவிபரக்கோவை - Curriculum Vitae (C.V.)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேர்ச்சி மட்டத்திற்கேற்ற ஒளிப்படங்கள், வீடியோக் காட்சிகள் கற்றலுக்குப் பயன்படுத்தக் கூடிய ஆவணங்கள், பதாதைகள், சுவரொட்டிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

இங்கு கீழ் குறிப்பிட்ட காரணிகள் பற்றிக் கருத்திற் கொள்க.

- எழுத்துத் தொடர்பாடலுக்காக ஆதிகாலத்தில் பயன்படுத்தப்பட்ட உபாயங்களைக் கண்டறிதல்.
- மொழியில் இரு வடிவங்களை விளக்குதல்
- எழுத்து மொழிப் பாவனையின் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்
- அன்றாடம் பயன்படும் ஆவணங்களைச் சரியாகத் தயாரிக்கும் திறனைப் பெறுதல்
- ஆக்கரீதியான ஆவணத் தயாரிப்பு - மதிப்பிடல்

**தேர்ச்சி 2.0** :- தொடர்பாடலின் வெவ்வேறு வடிவங்களை உரியவாறு பயன்படுத்தி வினைத்திறனான தொடர்பாடலில் ஈடுபடும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 2.3 கட்புல, செவிப்புலத் தொடர்பாடல் ஊடகங்களின் தன்மைகளையும் பேதங்களையும் இனங்கண்டு அவற்றை வினைத்திறனுடையவாறு பயன்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. கட்புல, செவிப்புல தொடர்பாடல் என்றால் யாதென இனங் காணுவார்.
2. கட்புல, செவிப்புலத் தொடர்பாடலுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுவார்.
3. கட்புல, செவிப்புலத் தொடர்பாடலை வேறுபடுத்திக் காட்டுவார்.
4. ஆதிகாலம் முதல் தற்காலம் வரை பயன்படுத்தப்பட்டு வரும் கட்புல, செவிப்புலத் தொடர்பாடல் வடிவங்களின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுவார்.
5. தொடர்பாடலொன்றுக்காக கட்புல, செவிப்புல ஊடகங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிக் குறிப்பிடுவார்.
6. கட்புல, செவிப்புல ஊடகங்கள் சமய, பண்பாட்டுத் தகவல்களுக்காகப் பயன்படுத்தப்படும் விதம் பற்றி ஆய்வு செய்வார்.
7. கட்புல, செவிப்புல ஊடகங்களைத் தொடர்பாடலுக்காக வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்துவார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- மாணவர்களின் செவிகளுக்கு எட்டக்கூடிய ஒலிகளை ஒலிபரப்புச் செய்து, அதன் பின் அவ்வொலிகள் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்களை இனங்காணச் செய்க.

  உ-ம்

  ஒலி: பறைச் சத்தம், வாகன ஒலி, புகையிரத ஒலி, மணி ஓசை, மங்கள நாதம், அம்புலன்ஸ் ஒலி (ஒலி)

  ஒளி: வீதிச் சமிக்ஞை, அமைதியாக இருக்கும்படி விரலை வாயில் வைத்து சமிக்ஞை செய்தல், மலசலகூட குறியீடுகள்
- மேற்குறிப்பிட்ட ஒலிகளை மாணவர்கள் இனம்காணுப்படி செய்க.
- கூக்குரலிடல் பற்றிய விளக்கங்களை மாணவர்களுடன் பகிர்க. கூக்குரலுக்கான பல்வேறு அர்த்தங்களை இனங்காணுக.
- பல்வேறு கட்புல, செவிப்புல ஊடகங்கள் தொடர்பாடலுக்காக பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிடுக.
- ஒலியை மையப்படுத்தி செவிப்புலத் தொடர்பாடலும் ஒளிச் சமிக்ஞைகளை மையப்படுத்திக் கட்புலத் தொடர்பாடலும் நிகழும் என்பதைக் குறிப்பிடுக.
- கட்புல, செவிப்புலத் தொடர்பாடல் ஊடகங்களை மாணவர்கள் தேடிக் கண்டறியும்படி செய்க.

- மனிதத் தொடர்பாடலின் ஆரம்பமாகக் கட்புலத் தொடர்பாடல் செயற்பட்ட விதம் பற்றிய கருத்துக்களை மாணவர்கள் ஆய்வு செய்யும்படி செய்க.
- அக்காலப்பகுதியில் பயன்படுத்திய செவிப்புல ஊடகங்களைக் கண்டறியும்படி செய்க.
- சம காலத்தில் கட்புல, செவிப்புலத் தொடர்பாடல் ஊடகப் பாவனை பற்றிய தகவல்களைத் திரட்டும் பணியில் மாணவர்களை ஈடுபடுத்துக.

  கட்புல ஊடகம் (உ-ம்) - வீதி சமிக்ஞைகள்

  மருத்துவ சேவை

  செவிப்புல ஊடகம் (உ-ம்) - வாகன ஒலி, அம்புலன்ஸ்
- கட்புல தொடர்பாடல் ஊடகங்களை மாணவர்கள் வகைபிரித்து அறியும்படி செய்க.
  - பாரம்பரிய கட்புல ஊடகம்
  - நவீன கட்புல ஊடகம்
- மேற்குறிப்பிட்ட ஊடக வகைப்படுத்தல்களுக்கான உதாரணங்களை மாணவர்களிடம் கேட்டறிக. இதற்காக மாணவர்களை புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் பயன்படுத்தும் படி வலியுறுத்துக.
- பல்வேறு சமய, பண்பாட்டு வைபவங்களின்போது பயன்படுத்தப்படும் கட்புல, செவிப்புல ஊடக வடிவங்களை மாணவர்கள் இனங்காணும்படி செய்க.

  உ-ம்:
  - மரணச் சடங்கு (அமங்கல நிகழ்வு)
  - மங்கள நிகழ்வு
  - தீபாவளிப்பண்டிகை
  - புது வருடப் பிறப்பு
- மாணவர்கள் கட்புல, செவிப்புலத் தொடர்பாடல் தேர்ச்சிகளைப் பெறும் வகுப்பறைச் செயற்பாடுகளை நடாத்துக. இதன்போது,
  - கட்புல செவிப்புல ஊடகங்களுக்குரிய வரவேற்பையும்
  - அதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுக.

    உ-ம்: வீதிச் சமிக்ஞைகள் பின்பற்ற வேண்டியதன் அவசியம்
- மாணவர்கள் அவசியம் அறிந்திருக்க வேண்டிய சமிக்ஞைகள், குறியீடுகளை இனங்காட்டுக.
- வீதி சமிக்ஞைகள், சுகாதார சேவை தொடர்பான குறியீடுகள், அவசர தேவைகளுக்கான ஒலிச் சமிக்ஞைகள்
- செவிப்புலத் தொடர்பாடல் திறன் விருத்திக்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுக.
- செவிமடுத்தல் செயற்பாட்டை எளிதில் விளக்குக. இங்கு,
  1. கேட்டல் செவிமடுத்தல்
  2. விளங்கிக் கொள்ளல்
  3. கிரகித்தல்
  4. நினைவுபடுத்தல்
  5. பின்னூட்டம் வழங்கல்
- செவிமடுத்தல் நிகழும் விதத்தைப் பொறுத்து அது பலவகைப்படும் என்பதைக் குறிப்பிடுக.
  1. செயற்படுதிறனுள்ள கிரகித்தல் செயற்பாடு
  2. தெரிவு செய்யப்பட்ட கிரகித்தல் செயற்பாடு
  3. செயற்படு திறனற்ற கிரகித்தல் செயற்பாடு
- மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு சந்தரப்பங்களுக்குமான உதாரணங்களை மாணவர்கள் தேடி அறியும்படி செய்க.

- செவிமடுத்தலின்போது செல்வாக்குச் செலுத்தும் தடைகளைக் கீழ்க் கண்டவாறு விளக்குக.
  - பௌதீகத் தடை

    உ-ம்: குறைவான ஒலி - பேச்சுத் தெளிவின்மை
  - மனிதத் தடை

    உ-ம்: உடல்சார் தடை, உளநிலை சார் தடை
- வினைத்திறன் மிக்க வகையில் செவிமடுக்கப் பின்பற்ற வேண்டிய விடயங்களை மாணவர்கள் கண்டறிவர்.
- பின்வரும் விடயங்கள் பற்றிய தகவல்களை மாணவர்கள் திரட்டும்படி செய்க. செவிமடுத்தலின்போது,
  1. நாம் முதலில் கதைத்தல்
  2. பேச்சாளரை ஓய்வாக வைத்திருத்தல்
  3. மன ஒருமைப்பாடு
  4. பொறுமை
  5. விமர்சனம், விவாதங்களை புறம் தள்ளுதல்
  6. உரிய சந்தர்ப்பத்திலே வினாக்களைக் கேட்டல், அடிக்கடி வினாக்களைக் கேட்காதிருத்தல்
- மாணவர்களை செவிமடுத்தற் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.

  உ-ம்: விரிவுரை/ பட்டிமன்றம்/ விவாதங்களைச் செவிமடுத்தல்

## முக்கியமான பதங்கள் (Key words) :

- செவிப்புல ஊடகம் - Audio media
- கட்புல ஊடகம் - Visual media
- பாரம்பரிய கட்புல ஊடகம் - Traditional visual media
- நவீன கட்புல ஊடகம் - Modern visual media
- எழுத்து மூலத் தொடர்பாடல் - Written communication
- செவிப்புலத் தொடர்பாடல் - Audio communication
- கட்புலத் தொடர்பாடல் - Visual communication

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேர்ச்சி மட்டத்திற்கேற்ற ஒளிப்படங்கள், வீடியோக் காட்சிகள், புத்தகங்கள், ஆவணங்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

இங்கு கீழ் குறிப்பிட்ட காரணிகளை அவதானிக்குக.

- கட்புல ஊடகத் தொடர்பாடல், செவிப்புல ஊடகத் தொடர்பாடல் என்பனவை இனங்காணுதல்
- செவிப்புல ஊடகத் தொடர்பாடலை வகைப்படுத்தல்
- ஆதிகாலத்தில் பயன்படுத்திய கட்புல, செவிப்புல ஊடகங்கள்
- செவிப்புல, கட்புலத் தொடர்பாடலின் பயன்கள்
- செவிப்புல, கட்புலத் தொடர்பாடற் தேர்ச்சி/ திறன்

**தேர்ச்சி 2.0** :- தொடர்பாடலின் வெவ்வேறு வடிவங்களை உரியவாறு பயன்படுத்தி வினைத்திறனான தொடர்பாடலில் ஈடுபடும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 2.4 அமைப்பொன்றின் இருப்புக்காக முறைசார்ந்த மற்றும் முறைசாரா தொடர்பாடலை வினைத்திறனுடையவாறு பயன்படுத்தக்கூடிய விதத்தைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. முறைசார், முறைசாரா தொடர்பாடலை இனங்காண்பார்.
2. முறைசார், முறைசாரா தொடர்பாடல்களுக்கிடையேயான வேறுபாட்டை விளக்குவார்.
3. முறைசார் தொடர்பாடலின் அவசியத்தை விளக்குவார்.
4. முறைசார் தொடர்பாடலின் போது பிரயோகிக்கப்படும் தொடர்பாடலின் மூலக்கூறுகளை இனங்காண்பார்.
5. முறைசாரா தொடர்பாடல் பற்றிய கருத்துக்களைக் கூறுவார்.
6. முறைசாரா தொடர்பாடல் நிகழும் விதம்பற்றி மாதிரிகளுக் கூடாக விளக்குவார்.
7. முறைசாரா தொடர்பாடல் நிகழும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடாக விளக்குவார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- முறைசார் தொடர்பாடல், முறைசாரா தொடர்பாடல் பற்றிய எளிய விளக்கங்களை மாணவக் கலந்துரையாடல்கள் மூலம் உருவாக்குக. இரண்டுக்குமிடையேயான வேறுபாட்டை ஒப்பு நோக்குக.
  - முறைசார் தொடர்பாடல்
  - முறைசாராத் தொடர்பாடல்
- முறைசார், முறைசாரா தொடர்பாடல் நிகழும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.
- முறைசார் தொடர்பாடலை விட முறைசாராத் தொடர்பாடல் பிரபலமானது/ பிரபலமற்றது.

  மேற்குறிப்பிட்டது போன்ற உரிய தொனிப்பொருளை மையப்படுத்தி விவாத நிகழ்வுகளை (15-20 நிமிடம்) ஒழுங்கமைக்குக. இதன் மூலம் மாணவர்களது சிந்தனா சக்தியை மேம்படுத்துக. இறுதியாக இவ்விரு தொடர்பாடல் வடிவங்களின் பயன்களை விஸ்தரிக்குக.
- முறைசார் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றி மாணவர்களுக்கு விளக்குக.
  1. மேலிருந்து கீழ்நோக்கிய தொடர்பாடல்
  2. கீழிருந்து மேல்நோக்கிய தொடர்பாடல்
  3. கிடைத் தொடர்பாடல்

  மேற்குறிப்பிட்ட சந்தரப்பங்களுக்கான உதாரணங்களை மாணவர்களிடம் கேட்டறிக.
- தொடர்பாடலின் போது பயன்படுத்தப்படும் வெவ்வேறு தொடர்பாடல் மாதிரிகளை வரைபடங்களுக்கூடாக விளக்குக.

  உ-ம்:

  (1) இம் மாதிரிகளை விளக்குவதற்காக, மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக. நடித்துக் காட்டல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.

(2) மாணவர்களை நேர்கோடு வடிவிலே நிற்கச் செய்து ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தகவல் பரிமாறும் விதத்தைக் கற்பிக்குக.

(3) மாணவர்களை வட்ட வடிவில் நிற்கச் செய்து, தகவல் பரிமாறும் விதத்தைக் கற்பிக்குக. தகவல் மீளவும், தகவல் வழங்குனரைச் சென்றடையும் என்பதைக் குறிப்பிடுக.

- முறைசாராத் தொடர்பாடல் நிகழும் சம்பவங்களுக்கான உதாரணங்களை மாணவர்களிடம் கேட்டறிக.
- முறைசார், முறைசாராத் தொடர்பாடல் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
  உ-ம்:
  1. தம்மைவிட உயர் பீடத்திலிருந்து வரும் தகவல் ஆணைக்குழு இசைவாக உரியவாறு, உரிய கால நேரங்களில் செயற்படல் ஆசிரியர் அதிபரின் உபதேசத்திற்கிணங்க இசைதல்
  2. உயர் பீடத்திற்கு வழங்குவதற்கு ஏதும் தகவல் இருப்பின் அதை உரியவாறு வெளிப்படுத்தல்
     மாதா/ பிதாவுக்கு தெரிவிக்க வேண்டிய தகவல்கள்

## முக்கியமான பதங்கள் (Key words) :

- முறைசார் தொடர்பாடல் - Formal Communication
- முறைசாராத் தொடர்பாடல் - Informal Communication
- தொடர்பாடல் மாதிரி - Communication model

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- பாடசாலையின் நிர்வாகக் கட்டமைப்பை வெளிப்படுத்தும் அட்டவணை
- தொடர்பாடல் மாதிரி தொடர்பான ஆசிரியர் ஆக்கங்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

இங்கு கீழ் குறிப்பிட்ட காரணிகளைக் கருத்திற் கொள்க.

- முறைசார், முறைசாராத் தொடர்பாடலை இனங்காணல்
- முறைசார் தொடர்பாடல் நிகழும் விதம்
- முறைசாராத் தொடர்பாடல் உபயோகிக்கப்படும் சந்தர்ப்பங்கள்
- முறைசார் தொடர்பாடலின்போது பயன்படும் தொடர்பாடல் மூலக் கூறுகள்
- முறைசார் தொடர்பாடல் மாதிரி
- முறைசார், முறைசாராத் தொடர்பாடலின் வெற்றிக்குத் துணையாகும் காரணிகள்

**தேர்ச்சி 3.0** :- கணினிசார் வெளிப்பாட்டுக்காகவும் அலுவலகத்திலும் தகவல் தொடர்பாடலின் போதும் வகுப்பறையிலும் பயன்படுத்தப்படும் ஊடக சாதனங்களை முறையாகப்பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 3.1 கணினி மூலம் அறிக்கையொன்றினைத் தயாரித்து முடிக்கும் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. சமகாலத்திலே கணினிசார் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் விருத்தி பெற்றமை பற்றி விளக்குவார்.
2. கணினி சார் வெளியீட்டு முறைகளை இனங்காண்பார்.
3. கணினி சார் வெளியீட்டு உபகரணப் பயன்பாட்டின் அவசியத்தை விளக்குவார்.
4. கணினிசார் வெளியீட்டு உபகரணங்கள் யாதென இனங் காண்பார்.
5. கணினிசார் வெளியீட்டு உபகரணங்களை முறையாக உபயோகிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- ஊடகத் தொழினுட்ப வளர்ச்சியின் பின்னணியைச் சுருக்கமாக நினைவுபடுத்துக.
- ஊடகத் தொழினுட்ப வளர்ச்சியின் படிமுறையை விளக்குக.
    - அச்சியந்திர உருவாக்கம்
    - சலனப்பட உருவாக்கம்
    - வானொலி கண்டுபிடித்தல்
    - தொலைபேசி உருவாக்கம்
    - தொலைக்காட்சி உருவாக்கம்
    - கணினி கண்டுபிடிக்கப்படல்
- தொடர்பாடல் தொழினுட்பம் பெற்ற புரட்சிகர வெற்றியாக தகவல் தொழினுட்பம், டிஜிட்டல் தொழினுட்பம் அமைவதைக் குறிப்பிடுக.
- தகவல் தொழினுட்பத்திறன் வளர்ச்சியால் தொடர்பாடல் தொழினுட்பத்தில் ஏற்பட்ட துரித வளர்ச்சியை மாணவர்களுடன் கலந்துரையாடுக.

  இணையத்தின் மூலம் உலகம் பூராகவும் துரித கதியில் தகவல் பரிமாற்றம் நிகழ்தல், செல்லிடத்தொலைபேசி (கையடக்கத் தொலைபேசி) மூலம் துரிதகதியல் தகவல் பரிமாற்றம் நிகழ்வதைக் குறிப்பிடுக.
- டிஜிட்டல் தொழினுட்ப வளர்ச்சியின் பயன்களைக் கலந்துரையாடுக. (இதற்காக வீடியோ, வரைபடங்களைப் பயன்படுத்துக.)
- கணினிசார் வெளியீட்டு உபகரணங்களை இனங்காண மாணவர்களை வழிப்படுத்துக.
    - Desk Top Publishing (DTP) அறிமுகஞ் செய்க. இங்கு,
    - ஆதிகாலத்திலே அச்சுப் பிரதி பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும்
    - அதிக கால நேரம் செலவாகியமை பற்றிக் குறிப்பிடுக.
- சமகாலத்திலே கணினிசார் வெளியீட்டு உபகரணங்களால் ஏற்பட்ட அனுகூலங்களைக் கலந்துரையாடுக.

- கணினிசார் வெளியீட்டு உபகரணங்கள் செயற்படும் விதம் பற்றிய பிரயோகச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
  - அடோப் பேஜ் மேக்கர் (Adobe Page Maker)
  - அடோப் இன் - டிசைன் (Adobe Indesign)
  - குவிக் எக்ஸ்பிரஸ் (Quick Express)
  - அடோப் போட்டோ ஷொப் (Adobe Photoshop)
  - திறந்த வளங்கள் - ஓப்பன் சோர்ஸ் (Open source)

  பற்றிக் குறிப்பிடுக.
- கணினியில் கையேடுகள் தயாரித்தல், பக்கத் தயாரிப்பு, பிரதியெடுத்தல் முதலானவை நிகழும் விதம் பற்றிக் குறிப்பிடுக.
- இதற்காக வகுப்பறைப் பயிற்சிகளை ஒழுங்கமைக்க.
- கணினி அச்சியந்திரங்கள் பற்றிய அறிமுகத்தை வழங்குக. இங்கு,
  - டொட் அச்சுப் பொறி (Dot Matrix Printer)
  - லேசர் அச்சுப் பொறி (Laser Printer)
- வெளியீடுகளை ஒன்றிணைப்பதற்குப் பயன்படும் உபகரணங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

  ஊடுகாட்டித் தாள் ஒப்பிடும் இயந்திரம்

  கட்டி இணைக்கும் இயந்திரம் (Binding Machine)

  தாள் வெட்டும் இயந்திரம் (Cutting Machine)
- மாணவர்கள் உருவாக்கும் கையேட்டில் எழுத்தமைப்பு, பக்க வடிவமைப்பு பற்றிக் கருத்திற் கொள்க.

  இங்கு, புத்தக வடிவமைப்பின் வரைமுறைகள் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

  உ-ம்:
  - கடதாசியின் நீள அகலம்

    பயன்படுத்தப்பட வேண்டிய எழுத்துத் தொகுதி உள்ளடக்கம்

## முக்கியமான பதங்கள் (Key words) :

- பக்க வடிவமைப்பு - Page Layout
- லேசர் அச்சுப்பதிவு - Laser Printing

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேரச்சி மட்டத்திற்கேற்ற உபகரணங்கள்
- ஒவ்வோர் உபகரணத்தினதும் பயன்பாட்டை வெளிப்படுத்தும் ஆவணங்கள்

  உ-ம்: லமினேட் செய்யப்பட்ட கடதாசி

  கட்டி இணைக்கப்பட்ட புத்தகம்

## கணிப்பீடும் மதிப்பீடும்

இங்கு கீழ் குறிப்பிட்ட காரணிகளைக் கருத்திற் கொள்க.

- கணினிசார் வெளியீட்டுச் செயன்முறையை இனங்காணல்
- கணினிசார் வெளியீட்டின் பயன்களை அறிதல்
- கணினிசார் வெளியீட்டு உபகரணங்களைப் பெயரிடல்
- கணினிசார் வெளியீட்டு உபகரணப் பயன்பாடு

**தேர்ச்சி 3.0** :- கணினிசார் வெளிப்பாட்டுக்காகவும் அலுவலகத்திலும் தகவல் தொடர்பாடலின் போதும், வகுப்பறையிலும் பயன்படுத்தப்படும் ஊடக சாதனங்களை முறையாகப்பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 3.2 வெவ்வேறு ஊடக சாதனங்களைப் பயன்படுத்தி அலுவலகத்தில் தொடர்பாடலை நடைமுறைப்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் ஊடக சாதனங்களை இனங் காண்பார்.
2. அலுவலகத்தில் தொழிற்படும் ஊடகச் செயற்பாட்டை விபரிப்பார்.
3. அலுவலகத்தில் ஊடகச் செயற்பாட்டின் அவசியத்தை உதாரணங்களுடன் விளக்குவார்.
4. அலுவலகத்தில் ஊடக சாதனங்களைச் சரியாகப் பயன்படுத் துவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- பாடசாலையின் அலுவலகத்தை மாணவர்கள் பார்வையிடும்படி செய்க. முறைசார்ந்த வகையில் இயங்கும் ஓர் அலுவலகத்தை மாணவர்கள் பார்வையிடுவதற்குரிய வழிவகைகளைச் செய்க. இங்கு, முறைசார் செயற்பாட்டின் பயன்களை எடுத்துரைக்க.
- அடுத்ததாக, ஊடக சாதனங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஏதேனுமோர் அலுவலகத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்க.
- அலுவலகச் செயற்பாடுகளில் ஊடக சாதனங்கள் பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிடுக. இங்கு,
  1. அலுவலகமொன்றில் முறைசார்ந்த விதத்தில் தகவல் திரட்டல்
  2. முறைசார் விதத்தில் தகவல் பெற்றுக்கொள்ளல்
  3. முறைசார் விதத்தில் ஒழுங்கமைத்தல், வரிசைப்படுத்தல்
  4. முறைசார் விதத்தில் வெளிப்படுத்தல்

  என்பவற்றை விளக்குக.
- அலுவலகத்தில் ஊடகங்கள் பயன்படும் விதத்தைக் கீழ்க்கண்ட அட்டவணையூடாக விளக்குக.

**அலுவலகத்தில் ஊடகப் பயன்பாடு**

| ஊடகச் சாதனம் | தொடர்பாடல் செயற்பாடு | வேறு சாதனங்கள் | அலுவலக ஊடகச் சாதனம் |
|---|---|---|---|
| 1. பதவி முத்திரை<br>2. திகதி முத்திரை<br>3. கணினி | தகவல் வழங்குதல்<br>தகவல் ஒழுங்கமைத்தல்<br>தகவல் வெளிப்படுத்தல்<br>தகவல் சேமித்தல் | | |

உ-ம்: அலுவலகத்திற்கு வரும் கடிதங்களுக்கு பதில் அனுப்புதல்
ஆசிரியர், மாணவர்களது வருகையை இடாப்பில் பதிவு செய்து அதை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தல், கணினியூடாக வெளிப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலே பயன்படும் அலுவலக ஊடக சாதனங்களை மாணவர்கள் இனங்கண்டு அவற்றைக் குறிப்புக்களாகத் தமது கற்றற் செயற்பாடுகளில் பயன்படுத்தத் தூண்டுக.

- முறைசார் விதத்திலே அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறும் தகவல்கள் யாவையெனக் கண்டறியச் செய்க.

  உ-ம்:

  - கடிதங்கள்
  - ஆசிரியர், மாணவர்களது வருகை
  - தொலைபேசி அழைப்புக்கள்
  - வாய்மொழிமூல அறிவித்தல்கள்

- தகவல்களை முறைசார் விதத்தில் ஒழுங்கமைக்கும் முறைகளை மாணவர்கள் பரீட்சிப்பதைக் கண்காணிக்க.
- கடிதங்களைத் திகதி முத்திரையிட்டு வேறுபடுத்தி உரிய நபர்களிடம் சேர்ப்பித்தல்
- வரவு இடாப்பின் உதவியுடன் மாணவர்களது வருகையை அன்றாடம் கணித்தல்
- அலுவலகத்தில் முறைசார் விதத்தில் ஊடக சாதனங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகளை மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:

  - கடிதங்கள் பெற்றுக் கொள்ளல்
  - கடிதங்களை முறையான விதத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும் அவற்றுக்குப் பதில் அனுப்ப வேண்டும்.
  - தொலைபேசி அழைப்புக்களுக்கும் சரியான முறையில் பதிலளிக்க வேண்டும்.

- முறைசார் விதத்தில் ஓர் செயற்பாட்டை செய்யாததால் ஏற்படும் தீங்குகளைக் கலந்துரையாடுக.

  உ-ம்:

  - கீழிருந்து மேல் நோக்கிய தொடர்பாடற் சந்தர்ப்பமொன்றின் போது பதில் அனுப்பாமல் இருக்கும் போது ஏற்படும் பாதிப்பு

- அலுவலகத்தில் பயன்படும் ஊடக சாதனங்களை மாணவர்கள் இனங்காணும்படி செய்க.
  - திகதி முத்திரையிடும் கருவி
  - பதவி முத்திரையிடும் கருவி
  - கணிப்பான்
  - கணினி
  - தொலைபேசி

  இவ்வொவ்வொன்றின் தொழிற்பாட்டையும் எடுத்துரைக்க. பாடசாலைச் செயற்பாடுகளில் முறைசார் விதத்தில் தகவல் சேகரித்தல், ஒழுங்கமைத்தல், வெளிப்படுத்தல் என்பன நிகழாதவிடத்து ஏற்படும் பாதிப்புக்களை விபரிக்குக.

### முக்கியமான பதங்கள் (Key words) :

- அலுவலக ஊடகச் சாதனங்கள் - Office Accessories
- பதவி முத்திரை - Official Stamp
- திகதி முத்திரை - Date Stamp

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- அலுவலக ஊடகச் சாதனங்கள், ஊடகங்களது ஒளிப்படங்கள், ஊடகங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாட்டை விபரிக்கும் வீடியோக் காட்சிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

இங்கு கீழ் குறிப்பிட்ட காரணிகளைக் கருத்திற் கொள்க.

- அலுவலக ஊடகச் சாதனங்களை இனங்காணுதல்
- அலுவலக ஊடகச் சாதனங்களைப் பயன்படுத்தும் தேர்ச்சி
- அலுவலகத்தில் நிகழும் ஊடகச் செயற்பாட்டை விளக்குதல்
- அலுவலகத்தில் ஊடகப் பயன்பாட்டின் அவசியத்தை அறிதல்

**தேர்ச்சி 3.0** :- கணினிசார் வெளிப்பாட்டுக்காகவும் அலுவலகத்திலும் தகவல் தொடர்பாடலின் போதும், வகுப்பறையிலும் பயன்படுத்தப்படும் ஊடக சாதனங்களை முறையாகப்பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 3.3 தகவல் பரிமாற்றச் செய்முறைக்காகப் பயன்படுத்தும் பல்வேறு ஊடக சாதனங்களைச் சரியாகவும் முறையாகவும் பயன்படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தொழினுட்ப வளர்ச்சியால் உலகில் துரிதகதியில் தகவல் பரிமாற்றம் நிகழ்வதை விளக்குவார்.
2. துரிதகதியில் தகவல் பரிமாற்றம் நிகழ்வதன் பயன்களை விளக்குவார்.
3. தகவல் பரிமாற்றத்திற்காகச் சமகாலத்தில் பயன்படுத்தப்படும் சாதனங்களைக் குறிப்பிடுவார்.
4. தகவல் பரிமாற்றத்திற்காகத் தொலைபேசியைச் சரியான முறையில் பயன்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- தகவல் பரிமாற்றத்திற்காக ஆதிகாலத்தில் பயன்படுத்தப்பட்ட சாதனங்களின் ஒளிப்படங்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- முந்தைய முறைகளுக்கும் சமகாலத்தில் பயன்படும் முறைகளுக்கும் இடையேயான வேறுபாட்டைக் கலந்துரையாடுக.
- சமகாலத்தில் தகவல் பரிமாற்றம் அதி துரிதகதியில் நிகழ்வதைக் கலந்துரையாடுக.
- சமகாலத்தில் தகவல் வழங்கல், தகவல் பரிமாற்றம் போலவே சிக்கல் நிறைந்த ஒன்றாய் இருப்பதைக் கலந்துரையாடுக.
- தகவல் பரிமாற்றத்துக்காகப் பயன்படும் பல்வேறு சாதனங்களை அறிமுகம் செய்க.

  உ-ம்:

  - தொலைபேசி அறிமுகம்
  - தொலைபேசி பயன்படுத்தும் முறை
  - தொலைப்பேசிப் பாவனையின் போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிமுறை
  - தொலைபேசித் தொடர்பாடல் ஒன்றின் போது சரியான முறையில் தகவல் அனுப்பும், பெறும் திறனைப் பெற்றுக் கொள்ளப் பல்வேறு வகுப்பறைத் தொழிற்பாடுகளை நடாத்துக.
  - தொலைபேசி தொடர்பாடல் நிகழ்த்தும் முறைகளை மாணவர்களிடம் கேட்டறிக.

  இங்கு,

  - தொலைபேசிக் கலந்துரையாடலின் எல்லை
  - தொலைபேசி அழைப்புக்கேற்ற சந்தர்ப்பம்
  - தொலைபேசித் தொடர்பாடலின்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள்

ஓரிடத்திருந்து இன்னுமொரு இடத்திற்குத் தகவலை எழுத்து வடிவில் அனுப்பும் பல்வேறு யுத்திகளை மாணவர்களிடம் கேட்டறிக.

- தொலைநகர் கருவி
- மின்னஞ்சல்
- செல்லிடத்தொலைபேசி பாவனை, குறுஞ்செய்திகள் அனுப்புதல்

மேற்குறிப்பிட்ட ஊடகப் பாவனையோடு எழுத்து மூலத் தொடர்பாடலில் மாணவர்களை ஈடுபடுத்துக.

- மேற்குறிப்பிட்ட ஊடகப் பாவனையின் எல்லைகள்
- பின்பற்ற வேண்டிய தகவல்களை மாணவர்களிடம் கேட்டறிக.

இணையப் பாவனையினூடாகத் தகவல் பரிமாற்றம் நிகழும் விதத்தை மாணவர்கள் இனங்காணும்படி செய்க.

இங்கு,

நபர்/ அமைப்பு/ நிறுவனம் ஒன்று தன்னைப்பற்றிய தகவல்களை மற்றோருக்குத் தெரியப்படுத்த இணைய வலையமைப்பைப் பயன்படுத்தும் முறையைக் குறிப்பிடுக.

- இணைய வலையமைப்பொன்றின் உள்ளடக்கங்களைக் கலந்தரையாடுக.
- இணைய வலையமைப்பின் நோக்கம்/ பயன்/ முக்கியம் பற்றிக் கலந்துரையாடுக.
- அதிபிரபலமான ஓரிரு அரச நிறவனங்களின் இணையத் தளங்களை மாணவர்ளிடம் காட்டுக.
- பொதுவாக அவ்வலையமைப்புக்களில் இடம்பெறும் தகவல்களை மாணவர்கள் பரீட்சிக்க இடமளிக்க.
- பயன்படும் சந்தர்ப்பங்கள்
- உங்கள் பாடசாலைக்கான இணையத்தளம் இல்லை எனில் மாணவர்களைக் கொண்டு ஓர் இணையத்தள வலையமைப்பை உருவாக்குக.
- அதி விசாலமான தகவல்களை இணைய வலையமைப்புக்கூடாக பரிமாற்றிக் கொள்வதன் நன்மை
- ஏதேனும் பரிசீலனைகளுக்காக நவீன ஊடகங்கள் பயன்படுவதைக் குறிப்பிடுக.
  - தொலைக்காட்சி
  - கணினி

## முக்கியமான பதங்கள் (Key words) :

- மூடிய சுற்று தொலைக்காட்சி - Closed Circuit Television (CCTV)
- வகிபாகமேற்று நடித்தல் - Role play

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேர்ச்சிக்கேற்ற சாதனங்களின் படங்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- செய்திகளை அனுப்புவதற்காகப் பயன்படுத்தத்தக்க பல்வேறு முறைகள் பற்றிய விளக்கம்
- தற்காலத்தில் செய்திப்பரிமாற்றம் நிகழும் முறை பற்றிய விளக்கம்
- உலகெங்கும் துரிதமாகத் தகவல் பரிமாற்றம் நிகழுவதால் ஏற்படும் செல்வாக்குகள் பற்றிய விளக்கம்
- தொலைபேசி சரியாகப் பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல்
- தகவல் பரிமாற்றத்துக்காக இணையத்தைப் பயன்படுத்துவது தொடர்பான அடிப்படை விளக்கம்

**தேர்ச்சி 3.0** :- கணினிசார் வெளிப்பாட்டுக்காகவும் அலுவலகத்திலும் தகவல் தொடர்பாடலின் போதும், வகுப்பறையிலும் பயன்படுத்தப்படும் ஊடக சாதனங்களை முறையாகப்பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 3.4 கற்றல் - கற்பித்தல் செய்முறைக்குத் தேவையான ஏறிகை வகையல்லாத ஊடக சாதனங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார்.

3.5 கற்றல் கற்பித்தல் செய்முறைக்குத் தேவையான எறிகை வகை ஊடக சாதனங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 06

**கற்றற்பேறுகள்** :-

1. வகுப்பறை ஊடக சாதனங்களின் அவசியத்தை விளக்குவார்.
2. வகுப்பறையில் தொடர்பாடலை எளிதாக்கப் பயன்படும் ஊடக சாதனங்களை இனங்காண்பார்.
3. வகுப்பறை ஊடக சாதனங்களை வகைபிரிப்பார்.
4. வகுப்பறை ஊடகப் பயன்பாட்டுத் தேர்ச்சி பெறுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- வகுப்பறையொன்றிலே கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை எளிதாக்க ஊடக சாதனங்களைப் பயன்படுத்தும் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துக. அல்லது அக் கருவிகளை மாணவர்கள் பார்வையிடும்படி செய்க.
- பின்பு இச் சாதனங்களை வகுப்பறையில் பயன்படுத்தும் விதங்களை மாணவர்கள் தேடிக் கண்டறிந்து அவற்றை வகுப்பறையில் நடித்துக்காட்டும்படி மாணவரைத் தூண்டுக.
- வகுப்பறைகளில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு ஊடக சாதனங்களை மாணவர்கள் பார்வையிடும்படி செய்க.
- இங்கு, ஒவ்வோர் ஊடகப் பயன்பாட்டின் போதும் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களையும் தொழினுட்ப உத்திகளையும் குறிப்பிட்டுக் காட்டி, அச்சாதனத்தை மாணவர்கள் பயன்படுத்துவதற்கரிய சந்தரப்பங்களையும் அமைக்குக.

  உ-ம்:

  - வெண் பலகையில் எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்
  - அவ்வுற்பத்திகளைக் கையாண்டு வெண்பலகையில் எழுதத் தூண்டுதல்

- மாணவர்கள் நன்கறிந்த எறிகை வகையல்லாத ஊடக சாதனங்களை இனங்கண்டு மிகவும் சிக்கலான ஓர் சாதனத்தை விபரிக்குக. இதற்காக உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான கையேடுகளைப் பெற்றுக் கொள்க.

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- வெண் பலகை - White Board
- காந்தப்பலகை - Magnatic Board or Magic Board
- மேந்தலை எறிவை - Overhead Projector (OHP)
- வழுக்கி எறிவை - Slide Projector
- பல்லூடக எறிவை - Multimedia Projector

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வகுப்பறை ஊடகச் சாதனங்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- வகுப்பறை ஊடகச் சாதனப் பயன்பாட்டின் அவசியத்தை விபரித்தல்
- வகுப்பறையில் பயன்படுத்தப்படும் ஊடகச் சாதனங்களை இனங்காணுதல்
- வகுப்பறை ஊடகச் சாதனங்களைப் பயன்படுத்தும் தேர்ச்சி பெறுதல்

**தேர்ச்சி 4.0** :- இலங்கையில் வெகுசன ஊடக நிறவனங்களது உரித்தின் தன்மையைத் தேடியாய்ந்து அது ஊடகப் பயன்பாட்டில் பிரதிநிதிதுவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 4.1 இலங்கையின் வெகுசன ஊடக நிறுவனங்களின் தோற்றம், உரித்து பற்றிய யதார்த்த நிலைமையைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. இலங்கையின் பிரதான ஊடக நிறுவனங்களை இனங்காண்பார்.
2. இலங்கையின் தற்போதைய ஊடக நிறுவனங்களது உரித்தை வகைப்படுத்திக் காட்டுவார்.
3. இலங்கையின் ஊடக நிறுவனங்களது தோற்றத்தை விபரிப்பார்.
4. செய்தித்தாள் நிறுவனமொன்றின் உள்வாரித் தொழிற்பாட்டை விமர்ச்சிப்பார்.
5. வானொலி நிறுவனமொன்றின் உள்வாரிச் செயற்பாட்டைப் பகுத்தாய்வார்.
6. தொலைக்காட்சி நிறுவனமொன்றின் உள்வாரிச் செயற்பாட்டை விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- பல்வேறு ஊடக நிறவனங்களது தனித்தன்மையைக் காட்டும் ஒளிப்படங்கள், இலச்சினைகள் போன்றவற்றைக் காட்டி மாணவர்கள் அறிந்த ஊடக நிறுவனங்கள் பற்றிக் கேட்டறிக. அவர்கள் கூறும் ஊடக நிறுவனங்களது பெயர்களைக் கரும்பலகையில் எழுதுக.
- இவ்வூடக நிறுவனங்களை ஏதேனுமொரு வரிசைக் கிரமத்திற்கு ஒழுங்கமைக்குக.

  இங்கு,

  செய்தித்தாள்

  வானொலி

  தொலைக்காட்சி எனும் வகைப்பாட்டை அறிமுகம் செய்க.
- மேலும் இந்நிறுவனங்களை வகைப்படுத்த மாணவர்களைத் தூண்டுக.

  ஊடகங்களின் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாட்டை மேற்கொள்ளத் தூண்டுக.

  உ-ம்:

  - எளிமையான, பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகள் அதிகமாகத் தயாரிக்கும் நிறுவனங்கள்
  - நம்பகத்தன்மை, பொறுப்பு பற்றி அதிக கவனம் செலுத்தாத நிறுவனங்கள்
  - சமூக சம்பிரதாயங்கள் அங்கீகாரம் பற்றிக் கருத்திற் கொள்ளாத ஊடகங்கள்
  - ஊடக இருப்பு இன்னமும் முறைசார் வகையில் அமையப் பெறாத ஊடகங்கள்
  - வணிக நோக்கை மையமாகக் கொண்ட ஊடகங்கள்
  - பாரம்பரிய நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கும் ஊடகங்கள்
  - நம்பகத்தன்மை, பொறுப்பு வாய்ந்த ஊடகங்கள்
  - சம்பிரதாய, பண்பாட்டை மையப்படுத்திய நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஊடகங்கள்

- முறைசார் விதத்திலே செயற்படும் ஊடகங்கள்
- வணிக நோக்கோடு, மக்கள் நலன் கருதித் தொழிற்படும் ஊடகங்கள்

- ஊடக உரிமையானது மேற் கூறப்பட்ட வேறுபாடுகளில் செல்வாக்கு செலுத்தும் விதம் பற்றிக் குறிப்பிட்டுப் பாடப் பிரவேசத்தை ஆரம்பிக்குக.
- இலங்கையின் ஊடக உரிமையைப் பின்வரும் வகைப்பாட்டில் அறிமுகம் செய்க.
  - அரச ஊடக நிறுவனங்கள்
  - தனியார் ஊடக நிறுவனங்கள்
- இலங்கையிலுள்ள ஊடக நிறுவனங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களைத் திரட்டத் தூண்டுக.

  (ஊடக நிறுவனத்தின் பெயர், உத்தியோகபூர்வ இலச்சினை)

  உ-ம்:

  நிறுவனத்தின் பெயர் : லேக் ஹவுஸ்
  முகவரி :
  இலச்சினை :
  ஆரம்பிக்கப்பட்ட வருடம் :
  பிரபல நிகழ்ச்சிகள்/ ஆக்கங்கள்:
  உரிமை :
- மாணவர்கள் சேகரித்த தகவல்களை மேற்குறிப்பிட்ட வகையில் ஒழுங்கமைத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் :-

- ஊடக நிறுவனங்களது வகைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட செயற்பாட்டை மேற்கொள்க.

  தேவைப்பாட்டினை வேறு விதத்திலே அட்டவணைப்படுத்துக. தகவல்களை அதிகரிக்குக.
- இங்கு, மிகவும் பிரபலமான ஊடக நிறுவனங்களது தகவல்களை மட்டும் காட்சிப்படுத்துவது உசிதமானது.
- இத்தகவல்கள் அடங்கிய கையேடொன்றை மாணவர்கள் உருவாக்கும்படி செய்க.
- மாணவர்கள் ஊடக நிறுவனங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டிய பின்னர், அரச/ தனியார் ஊடக உரிமை, உரிமையின் தன்மை என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கையொன்றைத் தயாரிக்கச் செய்க.
- பாடப்புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு தகவல் சேகரிப்பை மேற்கொள்ளச் செய்க.
- மற்றைய ஊடக நிறுவனங்கள் பற்றித் திட்டமிட்ட ஓர் வகையில் தகவல் ஆய்வை ஆரம்பிக்குக.
- ஊடக நிறுவனங்களது உள்ளகத் தொழிற்பாடுகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கச் செய்க.

  இங்கு,

  செய்தித்தாள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களது உள்ளகத் தொழிற்பாட்டைக் கற்பிப்பதற்கு ஓர் உசிதமான கற்றல் முறையைப் பயன்படுத்துக. இதற்காக வீடியோக் காட்சிகளைப் பயன்படுத்துக.
- வகிபாகமேற்று நடித்துக்காட்டற் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.

- உசிதமான ஓர் கற்றல் முறையைப் பயன்படுத்தி பல்வேறு ஊடக நிறுவனங்கள் பற்றிய கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகவ்களை மாணவர்கள் சேகரிக்கும்படி செய்க.

  உ-ம்:

  - நிறுவனத்தின் ஆளணி (Employees)
  - கடமை, செயற்பாடுகள் (Duties & Responsibilities)
  - நிறுவனத்தின் இலக்கும் பணியும் (Vission and Mission)
  - நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகள், அவற்றால் ஆற்றப்படும் பணிகள்

## முக்கியமான பதங்கள் (Key words) :

- உத்தியோகபூர்வ இலச்சினை - Official Logo
- மகுட வாசகம் - Motto
- நிறுவனத்தின் ஒழுங்கமைப்புக்கட்டமைப்பு - Organizational Structure of an Institution

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- இலங்கையின் ஊடக நிறுவனங்களின் தனித்துவத்தைக் காட்டும் படங்கள், படச்சட்டங்கள், வேறு கற்றல் சாதனங்கள்
- அந்தந்த ஊடக நிறுவனத்தின் ஒழுங்கமைப்புக்கட்டமைப்பை இனங்காண்பதற்குப் பொருத்தமான கற்றல் துணைச்சாதனங்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- இலங்கையின் ஊடக நிறவனங்களை இனங்காணுந்திறன்
- இலங்கையின் பிரதான ஊடக நிறவனங்களின் உரித்தாண்மையை இனங்காணல்
- செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு பற்றிய அடிப்படையான விளக்கம்
- ஊடக நிறுவனங்களின் வெவ்வேறு தொழில்கள் மற்றும் பணிகள் பற்றிய அடிப்படையிலான விளக்கம்.

**தேர்ச்சி 4.0** :- இலங்கையில் வெகுசன ஊடக நிறுவனங்களது உரித்தின் தன்மையைத் தேடியாய்ந்து அது ஊடகப் பயன்பாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 4.2 வெகுசன ஊடக நிறுவன உரித்தானது ஊடகவியலாளர்களின் மீதும் பெறுநர் மீதும் செல்வாக்குச் செலுத்தும் விதத்தைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. வெகுசன ஊடக நிறுவனங்களது உரித்தின் இயல்பை அறிவார்.
2. ஊடக நிறுவனங்களது உரித்தின் அடிப்படையில் ஊடகங்களது கொள்கைகள் வேறுபடுவதை விபரிப்பார்.
3. ஊடக நிறுவனங்களது நோக்கை/ இலக்கை அடிப்படையாகக் கொண்டு, அதன் ஆளணியால் நிறைவேற்றப்படும் பணிகளை விளக்குவார்.
4. ஊடக உரித்து, ஊடகவியலாளர் மற்றும் பெறுநர்களுக் கிடையேயான தொடர்பு பற்றிக் கூறுவார்.
5. ஊடக உரித்து பெறுநர்மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை ஆராய்வார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- வெகுசன ஊடகங்களின் உரித்து பல்வேறுபட்டதென்பதற்கான கருத்துக்களை மீளவலியுறுத்துக.

  கீழ்க்காணப்படும் அட்டவணையை இதற்காகப் பயன்படுத்துக.

**ஊடக நிறுவனங்கள்**

- **அரச உரிமம்**
  - முழுமையான அரச நிறுவனம்
  - பகுதியளவில் அரச நிறுவனம் (பங்கு உரித்து)
- **தனியார் உரிமம்**
  - தனியார் அமைப்புக்கு உரித்தானவை
  - தனியார் வணிகங்களுக்கு உரித்தானவை

- ஊடக நிறுவனத்தின் உரித்தின் அடிப்படையில் அதன் தொழிற்பாடுகள், கொள்கைகள் வேறுபடுவதைக் கலந்துரையாடுக.
- இலங்கையின் ஊடக நிறுவனங்களைப் பின்வரும் விதத்தில் ஒப்பிடுக.

  உ-ம்: தனியார் உரித்தின் கீழ்வரும் ஊடக நிறுவனம்

  - தனியார் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. தனியார் இலக்கை நோக்காகக் கொண்டது.
  - மட்டுப்படுத்தப்பட்ட நோக்கங்கள்
  - நிறுவனக் கட்டமைப்பு சிறியது

  மேலும் தகவல்களைச் சேர்க்குக.

- கல்விசார் செய்தித்தாள் தயாரிக்கும் தனியார் ஊடக நிறுவனமொன்றை உதாரணமாக எடுத்து மேற்குறிப்பிட்ட கருத்துக்களோடு ஒப்பிடுக.
- இவ்வாறாக ஏதேனுமொரு நிறுவனத்திற்கு உரித்தான ஓர் ஊடகத்தை உதாரணமாக எடுத்து அதன் கொள்கைகள் பற்றிக் கலந்துரையாடுக.

  உ-ம்: சமய நிறுவனமொன்றால் இயக்கப்படும் வானொலி

  - நிறுவனத்தின் கொள்கைகளையும், இலக்கையும் அடிப்படையாகக் கொண்டது
  - நிறுவனத்தின் இலக்கை எய்துவதைக் குறிக்கோளாகக் கொண்டது
  - மட்டுப்படுத்தப்பட்ட குறிக்கோள்
  - நிறுவனக் கட்டமைப்பு சிறியது
- தனியார் வியாபார உரித்தின் கீழ் இயங்கும் ஊடக நிறுவனம்
  - வியாபார உரிமையாளரின் கொள்கையின் அடிப்படையில் இயங்கும்.
  - வியாபார நோக்கை இலக்காகக் கொண்டது
  - நவீனமயமாக்கல் அதிகளவில் விரும்பப்படும்
  - நவீனரக நிகழ்ச்சிகளை விட பிரபல்யமான நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்
  - பல்வேறு வணிக நோக்கங்களை இலக்காகக் கொண்டு செயற்படும்
  - நிறுவனக் கட்டமைப்பு விசாலமானது
- இவ்வாறாக, தனியார் ஊடக நிறுவனங்களது கொள்கைகள் பற்றிய கருத்துக்களைச் சேகரிக்க மாணவர்களைத் தூண்டுக.
- அரச ஊடக நிறுவனங்களது தகவல்களையும் மேற்குறிப்பிட்டவாறு சேகரிக்க மாணவர்களைத் தூண்டுக.

  விவாதங்கள், கலந்துரையாடல்கள், குழு ஆய்வு, எண்ணங்களைத் தூண்டுதல் முதலான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

## கலந்துரையாட வேண்டிய கருத்துக்கள் :-

- அரச ஊடக நிறுவனங்கள் பண்பாடு, சம்பிரதாயம், விழுமியங்கள், தேசியத்துவம் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்காக வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுகின்றன.

  உ-ம்: செய்தி வாசிக்கும் முறை

  அறிவிப்பாளர்களின் ஆடையணிகள், ஆபரணங்கள்

  பேசும் விதம்
- வெகுசனத்தின் பொதுநலன் கருதிச் செயற்படுதல்

  உ-ம்: அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல்
- இலாபத்தை முக்கிய நோக்காகக் கொள்ளாது பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொண்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாதல் ஊடக நிறுவனங்களது இருப்பிற்குப் பணம் அவசியமாதலால் அரச ஊடக நிறவனங்களும் பணம் சம்பாதிக்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படல்
- ஊடக நிறவனங்களின் உரிமையாளர்கள் தமது நிறுவனத்தின் நோக்கம், மகுடவாசகம், இலக்கு என்பவற்றைத் தீர்மானித்தல்
- தமது நிறுவனத்தின் அடையாளம் யாதெனத் தீர்மானிக்கும் பணி
- ஊடக நிறுவன உரிமையளர்களின் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு ஊடகங்களின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல்

  உ-ம்:

  - தமது அடையாளம் யாதெனத் தீர்மானித்தல்
  - தமது நிறுவனம் எவ்வளவு தூரம் வணிக நோக்கிற்காக செயற்படும்

- நவீனமயமாக்கலை எவ்வளவு பின்பற்றுதல்?
- தமது நிறுவனத்தின் அரசியல் கருத்து யாது?

முதலான வகையில் உரித்து ஊடகச் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்தும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.

- ஊடகவியலாளர்கள் தாம் பணி புரியும் ஊடக நிறுவனத்தின் கருத்து/ கொள்கைகளுக்கு இசைவாக இயங்குதல்

  உ-ம்:

  - ஓர் ஊடகவியலாளன் தன் நிறுவனத்தின் நோக்கம், மகுட வாசகம் மற்றும் இலக்கைக் கருத்திற் கொண்டு செயற்படல்
  - தன் நிறுவனத்தின் கொள்கையைச் செயற்படுத்தும் கடப்பாடுடையவனாக ஊடகவியலாளன் காணப்படல்

- ஊடகவியலாளர்கள் தன் நிறுவனத்தின் கொள்கைகளுக்கு இசைவாக ஆக்கபூர்வமான முறையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தல்

  உ-ம்:

  - அரச ஊடக நிறுவனங்கள் தேசிய பண்பாட்டைப் பேணுவதை நோக்காகக் கொண்டுள்ளதால் அதன் கீழ் இயங்கும் ஓர் ஊடகவியலாளன் தமது ஆக்கங்களில் அதற்கு முன்னுரிமை வழங்குதல்.
  - தனியார் ஊடக நிறுவனங்கள் நன்மையமாக்கலுக்கு முன்னுரிமை வழங்குமானால் அத்தகைய கருத்துக்கள் ஆக்கங்களில் வெளிப்படல்

- ஊடக நிறுவனங்களின் கொள்கைகள் வேறுபட்ட போதும் அவை பெறுநரது நலன் கருதியே செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துக.
- ஊடகங்களின் இருப்பு நிலையாவது, அவ்வூடகத்திற்கான பெறுநரை மையப்படுத்தியே என்பதை உதாரணங்கள் கொண்டு கலந்துரையாடுக.
- ஊடக நிறுவனங்கள் தமது பெறுநர் யாரென அறிந்து நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்

  இங்கு, ஊடக நிறுவனங்கள் சிலவற்றை உதாரணமாக எடுத்து அதன் பெறுநர் பற்றிய விபரங்களை ஆய்வு செய்வதில் மாணவரை ஈடுபடுத்துக. அதன் போது வயது, தொழில், கல்வித் தகைமை, ஆண் மற்றும் பெண் அடிப்படையில் பெறுநர்களை வகைப்படுத்தல் பற்றி மாணவர்களுக்கு விபரிக்குக.

- ஒவ்வொரு ஊடகமும் தமது ஆக்கங்களை வெளிப்படுத்துவது எப் பெறுநர்கூட்டத்திற்கு என்பதை அறிமுகம் செய்க.

  உ-ம்:

  பௌத்த சேவை : இலக்குக்கொள்ளப்படும் பெறுநர் கூட்டம் (Target audience)

  தேசிய சேவை : இலக்குக் கொள்ளப்படும் பெறுநர் கூட்டம் (Target audience)

- (சிறுவர் நிகழ்ச்சிகள்/ பெண்கள் நிகழ்ச்சிகள்/ இளைஞர் நிகழ்ச்சிகள்/ விவசாயிகளுக்கான நிகழ்ச்சிகள்/ பாடசாலை மாணவர்களுக்கான நிகழ்ச்சிகள்)
- ஊடக நிறுவனங்களது கொள்கைகள், வணிக நோக்கை அடிப்படையாகக் கொண்டு பெறுநர் கூட்டம் யாவரென தீர்மானிக்கப்படும் என்பதைக் குறிப்பிடுக.

  உ-ம்:

  அதிக இலாபத்தைக் கருத்திற்கொண்டு செயற்படும் ஓர் நிறுவனம் அதற்கேற்ற பெறுநர் கூட்டத்தை இலக்காகக் கொள்ளும்

- அதேபோல் பெறுநரது ரசனை, கொள்கை மற்றும் விசேட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டும் பெறுநர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுப்பர் என்பதை விளக்குக. உ-ம்:
  - அழகுக்கலையில் ஆர்வமுள்ளவர்கள் அது தொடர்பான நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுப்பர்
  - தேசிய கலாசாரத்தை மதிப்பவர்கள் அது பற்றிய நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுப்பார்
  - சிறுவர்கள் கல்விசார் நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுப்பார்.
- சமூகத்திலே வேறுபட்ட பெறுநர்கள் உள்ளனர் என்பதை மாணவர் கருத்திற் கொண்டு வருக. (ரசனை, வயது, கருத்து, சிந்தனை ...)
- ஊடக நிறுவனங்கள் ஒவ்வொரு பெறுநரையும் கருத்திற் கொண்டு செயற்படுவது மிகவும் சிக்கலான ஒன்றாகும் என்பதைக் குறிப்பிடுக.
- ஒரு சில ஊடக நிறுவனங்கள் இதைக் கருத்திற்கொண்டு செயற்படுகின்றன என்பதைக் கூறுக.
- பல்வேறுபட்ட பெறுநர்களை மையப்படுத்தித் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளின் இடைநடுவே விளம்பரதாரர்கள் தம் விளம்பரங்களால் செல்வாக்குச் செலுத்தல் பற்றிய மாணவர் கலந்துரையாடல்களை ஊக்குவிக்க.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- ஊடகப் பண்பாடு - Media Culture
- ஊடக உரிமை - Ownership of Media

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- அந்தந்த ஊடக நிறுவனத்தின் தனித்துவத்தை நன்கு உறுதிப்படுத்தும் வெளியீடுகள் (நிகழ்ச்சிகள், கட்டுரை மாதிரிகள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- வெகுசன ஊடக நிறுவனங்களது உரித்தின் இயல்பை விளக்குதல்
- வெகுசன ஊடக நிறுவனங்களின் உரித்தின் அடிப்படையில் கொள்கைகள் வேறுபடுத்தல் பற்றிய ஆய்வு
- வெகுசன ஊடக நிறவனங்களது கொள்கையின் அடிப்படையில் அதன் வெளிப்பாடுகள் வேறுபடுதல் பற்றி விளக்குதல்
- ஊடக நிறுவனத்தின் இலக்கை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர்களின் கடமைகள், தொழிற்பாடுகள் வேறுபடுதல் பற்றிய தகவல்களைத் திரட்டல்
- பல்வேறு ஊடக நிறுவனங்கள் தமது இலக்கை அடிப்படையாகக் கொண்டு பெறுநர் கூட்டத்தைத் தெரிவு செய்தல்
- ஊடக உரித்து, ஊடகவியலாளன் மற்றும் பெறுநர் மீது செல்வாக்கு செலுத்தும் விதம் பற்றி விபரித்தல்

**தேர்ச்சி 4.0** :- இலங்கையில் வெகுசன ஊடக நிறவனங்களது உரித்தின் தன்மையைத் தேடியாய்ந்து அது ஊடகப் பயன்பாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 4.3 வெகுசன ஊடக நிறுவனங்களின் வணிக நோக்கங்கள் மற்றும் கொள்கைகளையும் வெகுசன ஊடக நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையில் காணப்படும் பல்வேறு விதமான தொடர்புகளையும் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. வெகுசன ஊடகங்கள் அவற்றுக்கே உரித்தான கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுவன என்பதை இனங்காண்பார்.
2. ஓர் பெறுநர் எனும் அடிப்படையில் பல்வேறு ஊடக நிறுவனங்களது கொள்கைகளை இனங்காண்பார்.
3. ஊடக நிறுவனங்கள் தம் வணிக நோக்கை வெளிப்படுத்தும் விதத்தைப் பகுத்தாய்வார்.
4. ஊடக நிறுவனங்கள் அரச நோக்கங்களை வெளிப்படுத்தும் விதத்தைப் பகுத்தாய்வார்.
5. வெகுசன ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசு தலையிடும் விதத்தினை இனங்காண்பார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- வெகுசன ஊடகங்களுக்கும் அரசுக்கும் இடையேயான தொடர்பை விளக்குக.
- இங்கு அரசு தம் கொள்கைகள், செயற்பாடுகள் பற்றிய அறிவினை மக்களுக்கு வழங்க அரச ஊடகங்களைப் பயன்படுத்துவதோடு அரச ஊடகங்கள் இதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்பதையும் மாணவரோடு கலந்துரையாடுக.
- மாற்று ஊடகங்கள் தாம் ஏற்றுக் கொண்ட அரசியல் கட்சிகள் தொடர்பான சேவையில் ஈடுபடுவதை விளக்குக.
- பல்வேறு ஊடகங்களையும் நுகரும் ஓர் பெறுனர் அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் பல்வேறு விதமான தகவல்களையும் உள்வாங்கி ஓர் செய்தியை பெற்றுக் கொள்வதை விளக்குக.
- பெறுனர் ஒருவர் ஏதேனும் தகவல் ஒன்றைப் பெற்றுக் கொள்ளப் பல விதமான ஊடகங்களையும் அணுக வேண்டியதன் அவசியத்தைக் கலந்துரையாடுக.
- ஒவ்வோர் ஊடகத்துக்கும் உரித்தான கொள்கைகளின் வேறுபாட்டினைக் கண்டறிய மாணவரைத் தூண்டுக.

  உ-ம்:

  - தேசியத்தை மதிக்கும் கொள்கை
  - நவீனத்துவத்தைத் தழுவி தேசியத்துவத்தைப் புறக்கணித்தல்

  பிரதான ஊடகங்கள் பற்றிய கற்கை போதுமானது.
- ஊடகங்கள் எவ்வளவு தூரம் வணிக நோக்கத்திற்காகச் செயற்படுகின்றன என்பதைக் கண்டறியும் பணியில் மாணவரை ஈடுபடுத்துக. இங்கு,

  - செய்தி ஒளிபரப்பொன்றின்போது எத்தனை தடவைகள் விளம்பரம் ஒளிபரப்படுகின்றது என்பது,

  பற்றிய தகவல்களைத் திரட்ட மாணவரை ஊக்குவிக்குக.

- அரச நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கான அரசின் ஊடகப் பயன்பாட்டின் அவசியத்தை விளக்குக.

  உ-ம்:

  - அரசு தனது இருப்பைத் தக்க வைக்க.
  - அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட மற்றும் செயற்படுத்த
  - மக்களது அபிப்பிராயத்தை எப்போதும் தம் பக்கம் வைத்துக் கொள்ள

- இவ்வாறாக, அரச நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக வெவ்வேறு ஊடகங்கள் வெவ்வேறு கொள்கைகளின் ஊடாகச் செயற்படுவதை விளக்குக.

  உ-ம்:

  சில ஊடகங்கள் அரசுக்கு சார்ப்பாகச் செயற்படும் சில ஊடகங்கள் மாற்றுக் கருத்துக்களை வெளியிடும்.

- ஊடகங்களின் மூலம் வெளியிடப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெறுநர் தமக்கான செய்தியை வடிவமைக்கும் விதத்தைக் கலந்துரையாடுக.
- பெறுனர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப அவர்கள் நுகரும் ஊடகங்களின் எண்ணிக்கை மாறும் என்பதை விளக்குக.
- ஊடக செயற்பாடுகளில் அரசின் தலையீடுகள் பற்றிய அடிப்படை விளக்கத்தினை வழங்குக.

  இங்கு, அரசின் நேரடி மற்றும் மறைமுகத் தலையீடுகள் பற்றிய தகவல்களைத் திரட்ட மாணவரை ஊக்குவிக்க.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- ஊடகப் பண்பாடு - Media Culture
- ஊடகக் கொள்கைகள் - Media Policies

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- அந்தந்த ஊடக நிறுவனத்தின் தனித்துவத்தை நன்கு உறுதிப்படுத்தும் வெளியீடுகள்/ தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களை முன்வைப்பதற்குப் பயன்படுத்துவதற்கேற்ற ஊடக நிறுவன வெளியீடுகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- வெகுசன ஊடக நிறுவனங்களுக்கேயுரிய சிறப்பான, நிறுவனக் கொள்கைகள் சிலவற்றை விளக்கும் திறன்
- வெகுசன ஊடக நிறுவனங்களுக்கு தனித்துவமான விசேடமான வேலைத்திட்டங்களை இனங்காணல்
- வெவ்வேறு வெகுசன ஊடக நிறுவனங்கள் தமது வணிக நோக்கங்களை வெளியிடும் விதத்தை விளக்குதல்
- வெகுசன ஊடகங்களின் அரசின் குறிக்கோள்களை வெளியிடும் விதத்தை விமர்சன ரீதியில் முன்வைத்தல்
- வெகுசன ஊடக நிறுவனங்களின் தொழிற்பாடு குறித்து, அரசு தலையிடும் விதம் பற்றிய விளக்கம்

**தேர்ச்சி 5.0** :- வெகுசன ஊடகத்தின் வெவ்வேறு விதமான பிரதிநிதித்துவத்தின் யதார்த்தத்தையும் சமூகத்தின் செல்வாக்கையும் வியாக்கியானஞ் செய்து காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 5.1 வெகுசன ஊடகங்களில் பல்வேறு விதமான வெளியீடுகளில் சமூகத்தின் தன்மை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. ஊடகங்களின் மூலம் சமூகம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை விபரிப்பார்.
2. ஊடகங்களில் சமூகப் பிரதிநிதித்துவம் அதிகளவில் நிகழும் நிகழ்ச்சிகளை இனங்காண்பார்.
3. ஓர் சிறந்த குடும்ப அமைப்பில் காணப்பட வேண்டிய அம்சங்களை இனங்காண்பார்.
4. சிறந்ததொரு குடும்பக்கட்டமைப்பினைத் தக்க வைக்க வெகுசன ஊடகங்கள் ஆற்ற வேண்டிய பணியை விளக்குவார்.
5. ஏதேனுமொரு ஊடக நிகழ்ச்சியொன்றை உதாரணமாக எடுத்து அதன்மூலம் குடும்ப நலனுக்காக ஆற்றப்படும் சேவையைப் பகுத்தாய்வார்.
6. ஊடகப் படைப்புக்களில் ஆண் - பெண் கட்டமைக்கப்படும் வேறுபாட்டை இனங்காண்பார்.
7. இலங்கைக்குப் பொருத்தமான ஆண் - பெண் சமூகத் தன்மை பற்றிய கருத்துக்களை வெளியிட தொலைக்காட்சி ஆற்றும் சேவையை ஆராய்வார்.
8. இன ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்க ஊடகம் செயற்படும் விதத்தை ஆராய்வார்.
9. சிறந்ததொரு குடியுரிமையுடன் கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்ப ஊடகங்கள் எவ்வாறான பிரசாரங்களில் ஈடுபடுகின்றன என்பதை ஆராய்வார்.
10. ஊடகங்கள் மனித உரிமை பேணப்படும், மனிதக் கடமைகள் நிறைவேற்றப்படும் ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்ப ஆற்றும் வெளியீடுகளை இனங்காண்பார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- பத்திரிகையில் பிரசுரமாகிய சமூக நிகழ்வுகள் பற்றிய கோப்பு

  உ-ம்:
  - சமய நிகழ்வு
  - பண்பாட்டு நிகழ்வு
  - அரசியல் நிகழ்வு
  - சமூக விரோதச் செயல்
- நாடகம், பாடற் காட்சி, அரசியல் கலந்துரையாடல்கள் முதலான, தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நிகழ்ச்சிகளின் ஒளிப்படங்கள்

  1, 2 இல் குறிப்பிடப்பட்டவை உள்ளடங்கிய வீடியோக் காட்சிகளும் பாவனைக்கு எடுக்கலாம்.

இவைகளைப் பயன்படுத்தி ஊடகங்கள் சமூகத்தின் பல்வேறு பக்கங்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பதை விளக்குவதற்காகக் கலந்தரையாடல்களில் மாணவரை ஈடுபடுத்துக.

மாணவர்கள் தாமாக உதாரணங்களை வெளிப்படுத்த அறிவுறுத்துக.

கீழ்க்குறிப்பிடப்படும் காரணிகள் பற்றிய மாணவர் அவதானத்தைப் பெறுக.

- சமூகத்தில் நல்ல செயற்பாடுகள் போலத் தீய செயற்பாடுகளும் நிகழ்கின்றன.
- சமூகத்தை நல்வழிப்படுத்துவது ஊடகத்தின் கடமையாகும்.
- சமூகத்தில் காணப்படும் சீரற்ற நிலைமைகளைச் சுட்டிக் காட்டுவதன் ஊடாக சமூக விரோத செயல்களைக் குறைப்பதும் ஊடகத்தின் கடமையாகும்.
- ஊடகத்தினால் நிகழ்த்தப்படும் ஊடகப் பிரதிநிதித்துவம் பற்றிய அறிவுடன் ஊடகத் தகவல்களை உள்வாங்கும் போது அதன் தீய விளைவுகள் மட்டுப்படுத்தப்படும்.
- ஊடகத்தினால் குடும்பம் பிரதிநிதித்துவம் செய்யப்படும் விதம் பற்றி மாணவரைத் தகவல் திரட்டச் செய்க. இங்கு,
  - மிகவும் சிறிய சமூகக் கட்டமைப்பு குடும்பமாகும்
  - நீடித்த விரிந்த குடும்பக் கட்டமைப்பு (Extended family)

    மற்றும் குறுகிய வட்ட (கருக்) குடும்பக் கட்டமைப்பு (Nuclear family) பற்றிய விளக்கத்தை வழங்குவதோடு உள்நாட்டுக் குடும்பக் கட்டமைப்பே மிகவும் சிறந்ததென விபரிக்க.
- குடும்பத்தினால் நிறைவேற்றப்படும் கடமைகளை ஆராய மாணவர்களை ஊக்குவிக்குக, குடும்பத்தினால் மனிதனது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை விளக்குக.

  உ-ம்: பாதுகாப்பு, போஷணை, அன்பு
- குடும்பக் கட்டமைப்பை நலமுடையதாகப் பேணிப் பாதுகாக்க நிகழ்த்தப்பட வேண்டிய தொடர்பாடல் செயற்பாடுகளை அறிந்து கொள்ள மாணவர்களை வழிப்படுத்துக.

  உ-ம்: அன்பு, தயவு, கருணை, நம்பிக்கை, விசுவாசம் முதலியவை கட்டியெழுப்பப்படும் வாய்மொழி மூல, வாய்மொழியற்ற தொடர்பாடல்

  மேலும் இது பற்றிய உதாரணங்களைக் கலந்துரையாடுக.
  - சடங்கு, சம்பிரதாயங்கள் பற்றி குடும்பத்தின் புதிய அங்கத்தினருக்கு அறிவூட்டல்
  - குடும்பத்தின் தனித்தன்மை பேணப்படும் தொடர்பாடல்
  - வீட்டின் தோற்றம்
  - சமூகத்தவரது ஆடை அணிகலன்
  - கதைக்கும்/ பேசும் முறை
  - அயலவர் மற்றும் நண்பர்களுடன் ஒற்றுமையாகப் பழகும் விதம்
- சிறந்த குடும்பக் கட்டமைப்பை உருவாக்க ஊடகத்தினால் ஆற்றப்பட வேண்டிய பணிகளை மாணவர்கள் தேடியறியும் படி செய்க.

  உ-ம்:
  - குடும்ப ஒற்றுமையைத் தக்க வைத்தல்
  - சிறந்த குடும்பங்களின் நன்மதிப்பை சீர்தூக்கிக் காட்டல்
  - குடும்பத்தில் பெரியோருக்கு மூத்தோருக்குக் காட்டப்பட வேண்டிய கௌரவத்தை குறிப்பிட்டுக் காட்டல்
  - குடும்பத்தில் காணப்பட வேண்டிய வேறு சிறந்த நடத்தைகளை இனங்காணச் செய்தல்
  - சடங்கு, சம்பிரதாயங்கள் என்பவற்றை அடுத்த தலைமுறையினருக்கு விளக்குவதற்கு ஊடகம் செலுத்தும் ஈடுபாடு யாதெனக் கண்டறிதல்

- ஏதேனுமொரு ஊடகத்தின் மூலம் குடும்ப நலனுக்காக ஆற்றப்படும் சேவைகள் பற்றி மாணவரை ஆய்வு செய்யும்படி கூறுக.

  உ-ம்: நாடகம், செய்திக் கட்டுரைகள், தொலைக்காட்சிக் கலந்துரையாடல், வானொலிப் பாடல்கள், விளம்பரங்கள்

- இலங்கைக்குப் பொருத்தமான ஆண் - பெண் சமூகத் தன்மையைக் கட்டியெழுப்ப ஊடகம் ஆற்றும் சேவையைத் தேடியறியும்படி மாணவரை வழிப்படுத்துக. இங்கு,
  - ஆண் - பெண் சமூக நிலைப்பாடு பற்றிய எளிய விளக்கத்தை வழங்குக.
  - பெண்களுக்கு சமூகத்தில் சம உரிமை வழங்கப்பட வேண்டும் எனும் தொனிப் பொருளில் மாணவக் கலந்துரையாடல்களை ஊக்குவிக்க.

  உ-ம்:
  - பெண்களுக்குரிய கௌரவத்தையும் பாதுகாப்பையும் வழங்கல்
  - வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு சம உரிமை வழங்கல்

- ஊடகங்கள்,
  - இனத்துவத்தைத் தக்க வைக்க எவ்வாறான வெளியீடுகளைச் செய்கின்றன. மற்றும் இன ஒற்றுமை பற்றிய கருத்துக்கள் வெளிப்படும் கலந்துரையாடல்களில் மாணவரை ஈடுபடுத்துக.

    இன வேறுபாடு இல்லாத ஓர் பொது உணர்வு ஏற்படுவதன் அவசியத்தைக் கலந்துரையாடுக.

- இன ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதத்தில் ஊடகங்கள் தம் வெளிப்படுத்தல்களை எவ்வாறு செய்கின்றன என்பது பற்றி மாணவரோடு கலந்துரையாடுக.

  உ-ம்:
  - இவ்வாறான நிகழ்ச்சிகளை இனங்காணுதல்

  மும்மொழிப் பாவனையோடு ஒவ்வோர் இனத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் நிகழ்ச்சி

- ஓர் சிறந்த பிரசையை உருவாக்க ஊடகங்கள் எவ்வாறான வெளிப்படுத்தல்களில் ஈடுபடுகின்றன என்பது பற்றிய தேடல்களை ஊக்குவிக்குக.

  இங்கு, சிறந்த பிரசையை உருவாக்கக் காரணமாகும் நிகழச்சிகள், ஆக்கங்கள் யாதெனப் பட்டியல்படுத்த மாணவரைத் தூண்டுக.

- மனித உரிமை, மனிதக் கடமைகள் பற்றி ஊடகங்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை தேடும்படி மாணவரை வலியுறுத்துக.

  இங்கு,
  - மனித உரிமை, மனித கடமை பற்றி விளக்குக.
  - மனித உரிமை மற்றும் மனிதக் கடமை நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தை விபரிக்குக.
  - மனித உரிமை, மனிதக் கடமைகளை வலியுறுத்தும் ஊடக வெளிப்படுத்தல்களை ஆராய மாணவரைத் தூண்டுக.

  இங்கு, மாணவர்கள் ஊடக நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவது போதுமானது.

மேற்குறிப்பிட்ட பணிகளில் (ஊடகப் பிரதிநிதித்துவம் பற்றிய ஆய்வு) மாணவரை ஈடுபடுத்தும் போது, அதிகளவில் தனியாள் ஒப்படை, குழு ஒப்படை என்பவற்றை வழங்குவதனூடாக ஆய்வு, கலந்துரையாடல், விவாதம் - பேச்சு முதலான பல்வேறு கற்றல் செயற்பாடுகளையும் செய்க.

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- விரி குடும்ப/ கருக் குடும்பக் கட்டமைப்பு - Extender Family/ Nucear Family Structure
- இனத்துவம் - Ethnicity
- குடியுரிமை - Citizenship
- மனித உரிமைகள் - Human Rights
- கருத்துக்கள் - Opinions

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கருப்பொருளுக்குப் பொருத்தமான செய்தித்தாள் கட்டுரைகள்/ வீடியோ காட்சிகள்/ படச் சட்டகங்கள்/ ஊடக வெளியீடுகள்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

கீழ்க் குறிப்பிடப்படும் காரணிகள் பற்றி நோக்குக.

- ஊடக நிறுவனங்கள் மூலம் தயாரிக்கப்படும் நிகழச்சிகள் சமூக அபிவிருத்திக்குச் சார்பாக செயற்பட வேண்டியமை
- குடும்பக் கட்டமைப்பை வகைப்படுத்தல்
- சிறந்த குடும்பக் கட்டமைப்பைத் தக்க வைக்க, குடும்பம் ஆற்ற வேண்டிய பணிகள்
- ஆண் - பெண் சமூகத்தன்மையை அறிந்து கொள்ளல்
- இலங்கைக்குப் பொருத்தமான ஆண் - பெண் சமூக நிலைப்பாடு அபிவிருத்தியடைதல்.
- வெகுசன ஊடகங்களால் ஆண் - பெண் சமூகத்தன்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதம்
- வெகுசன ஊடகங்களால் இனத்துவம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதம்
- வெகுசன ஊடகங்கள் மனித உரிமை - கடமைகள் பற்றி மக்களுக்கு அறிவூட்டும் விதம்
- வெகுசன ஊடகங்கள் தமது தகவல்கள் செய்தி ஊடாக சிறந்த குடிமகனை/ பிரசையை உருவாக்கக் காட்டும் முயற்சி

**தேர்ச்சி 5.0** :- வெகுசன ஊடகத்தின் வெவ்வேறு விதமான பிரதிநிதித்துவத்தின் யதார்த்தத்தையும் சமூகத்தின் செல்வாக்கையும் வியாக்கியானஞ் செய்து காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 5.2 வெகுசன ஊடகங்களில் பல்வேறு விதமான வெளியீடுகளில் பொருளாதாரத் தன்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. வெகுசன ஊடகங்களின் பல்வேறு வெளியீடுகள் தகவல்/ செய்திகளுடாக தொழில் உலகம் மற்றும் பல்வேறு தொழில்கள் இனங்காட்டப்படும் விதத்தைப் பகுத்தாய்வார்.
2. வெகுசன ஊடகத் தகவல்கள்/ செய்திகள், சந்தை பற்றிய அறிமுகத்தினை வழங்கும் விதத்தை விமர்சிப்பார்.
3. வெகுசன ஊடகத் தகவல்கள்/ செய்திகளின் ஊடாக அபிவிருத்திச் சிந்தனைகள் கட்டியெழுப்படும் முறையை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்** :-

- பழைய சுயதேவைப் பொருளாதார முறையில் மனிதர்களின் சீவனோபாயச் செயற்பாடுகளைக் கலந்துரையாடுக. வரைபடங்கள்/ வீடியோக் காட்சிகளைப் பயன்படுத்தி பண்டைய சமூகத்தில் காணப்பட்ட தொழில் உலகம் பற்றிய அறிமுகத்தினை வழங்குக.
- இதன் மூலமாக,
  - விவசாய நிலங்களை அண்மித்த பகுதிகளில் அதிகளவு வேலை வாய்ப்புகளைப் பெற்றமை
  - தொழினுட்பம் சார் தொழில்கள் குறைவாகக் காணப்பட்டமையால், விவசாயத்தின் போது பயன்படுத்தப்படும் கருவிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டமை
  - அன்றைய தொழில் உலகம் சமூகத் தேவைக்குப் போதுமானதாக இருந்தமை
  - கல்வி, தொழில் உலகம் ஒப்பிடப்பட வேண்டிய முறையைக் கலந்துரையாடுக.
  - சமகால சமூகத்திலே தொழில் உலகம் மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளமை பற்றிக் கலந்துரையாடுக.
    - அதிகளவான வேலைவாய்ப்புகள் உருவாகியமை
    - தொழில் உலகிற்குத் தேவைப்படும் தொழிலாளர்களை வழங்கமுடியாதுள்ளமை
    - கல்வி - தொழில் உலகத்திற்கிடையேயான இடைவெளி நீண்டமை பற்றிக் கூறுக.
- வெகுசன ஊடகங்கள் பொது சனத்திற்கு தொழில் உலகம் பற்றிய தகவல்களை எவ்வளவு தூரம் சாதகமாக வழங்குகின்றன என்பது பற்றிய தகவல்களைக் கண்டறிய மாணவரை வழிப்படுத்துக.
- வெகுசன ஊடகங்கள், பொது சனத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகவல்களை முன்வைக்கும் விதம் பற்றி மாணவரைத் தேடியறியும்படிச் செய்க.
  1. தொழில் உலகத்தின் சுபாவத்தைச் சித்திரித்தல்
  2. நவீன தொழில் உலகத்தில் காணப்படும் வேலை வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனவா?
  3. தொழில் உலகினுள் பிரவேசிக்கத் தேவையான அறிவினை வழங்குகின்றனவா?

- வெகுசன ஊடகங்கள் சமகால தொழில் உலகம் பற்றிய அறிவினை மக்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை மாணவரோடு கலந்துரையாடுக.

  இங்கு,

  - பண்டைய தொழில் உலகில் காணப்பட்ட வேலைவாய்ப்புகள்
  - சமகாலத்திலே பல்வேறு தொழில் துறைகளில் காணப்படும் தொழில் வாய்ப்புகள்
- சமகால தொழில் உலகில் காணப்படும் பலவித வேலைவாய்ப்புகள் பற்றி ஊடகங்கள் மக்களுக்கு அறிவூட்டம் செய்ய வேண்டிய செயற்பாடுகளைக் கண்டறிய மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

  உ-ம்: பல்வேறு வேலைவாய்ப்புகள் பற்றி விழிப்புணர்வூட்டல் சம்பிரதாய பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேலைவாய்ப்புகளை ஏற்றுக் கொள்ளும் கருத்து மாற்றத்தை உருவாக்கல். (வைத்தியர், பொறியியலாளர் முதலான தொழில்களை மட்டும் உயரிய தொழில்கள் எனக் கொள்ளாது சமகாலத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறும் பல உயர் தொழில் வாய்ப்புகள் உள்ளனவெனக் குறிப்பிடுக.)
- சமகாலச் சந்தைப் பொருளாதாரம் பற்றிய அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொள்ள மாணவரை வழிப்படுத்துக. இங்கு, சந்தையானது கைத்தொழில் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியமைக்கப்பட்டது என்பதையும், தேசிய சந்தை, சர்வதேச சந்தை எனும் வகைப்பாட்டையும் விபரிக்குக.
- தேசிய சந்தையின் அபிவிருத்திக்காக வெகுசன ஊடகங்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள்/ வெளியிடும் தகவல்கள் பற்றி ஆராய மாணவரைத் தூண்டுக.

  இதற்காக,

  ஆய்வு, தனியாள்/ குழு ஒப்படை, கலந்துரையாடல் என்பவற்றைப் பயன்படுத்துக.
- வெகுசன ஊடகங்கள் மக்கள் மத்தியில் அபிவிருத்திச் சாதனைகளைக் கட்டியெழுப்பும் முறையைத் தேடியறிய மாணவரை நெறிப்படுத்துக.

  வெகுசன ஊடகத் தகவல்கள் செய்திகளைத் தெரிவு செய்க.

  (உ-ம்: பாடல்கள், தொலைக்காட்சி நாடகங்கள், செய்திக் கட்டுரைகள், விளம்பரங்கள்) இவற்றின் வினைத்திறனை ... செய்யும் பணியில் மாணவரை ஈடுபடுத்துக.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- தொழில் உலகம் - World of work
- சந்தை - Market
- அபிவிருத்திச் சிந்தனை - Development Thinking

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேர்ச்சி மட்டத்திற்கேற்ற தெரிவு செய்யப்பட்ட செய்திக் கட்டுரைகள், விளம்பரங்கள், பாடல்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

கீழ்க் குறிப்பிடப்படும் காரணிகள் பற்றிக் கருத்திற் கொள்க.

- இலங்கையின் பண்டைய தொழில் உலகத்தை விபரித்தல்
- சமகால தொழில் உலகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளமை, இங்கு காணப்படும் பலவித தொழில் வாய்ப்புகள் பற்றி விபரித்தல்
- வெகுசன ஊடகங்ள் சமகால தொழில் உலகம் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள்/ செய்திகளை விமர்ச்சித்தல்
- வெகுசன ஊடகங்கள் சமகால சந்தைப் பொருாளதாரம் பற்றிய விளக்கத்தை மக்களுக்கு வழங்கும் விதம் பற்றிய விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைத்தல்
- வெகுசன ஊடகங்கள் பொதுமக்களுக்கு அபிவிருத்திச் சிந்தனைகளை வழங்கும் விதம் பற்றிய தகவல் திரட்டல்

**தேர்ச்சி 5.0** :- வெகுசன ஊடகத்தின் வெவ்வேறு விதமான பிரதிநிதித்துவத்தின் யதார்த்தத்தையும் சமூகத்தின் செல்வாக்கையும் வியாக்கியானஞ் செய்து காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 5.3 வெகுசன ஊடகங்களின் பல்வேறு விதமான வெளியீடுகளில் சமய, ஒழுக்க விழுமியத் தன்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. நாட்டின் சமய நலனுக்காக ஊடக வெளிப்படுத்தல்கள் மூலம் கிடைக்கப்பெறும் அனுசரணையை மதிப்பார்.
2. ஒழுக்க, விழுமிய மற்றும் மானுடப் பண்புகளின் அபிவிருத்திக்கு ஊடகம் ஆற்றும் சேவை யாதென தீர்மானிப்பார்.
3. நாட்டின் நலனில் அக்கறை செலுத்தும் சமூகப் படிமங்களை கட்டியெழுப்ப ஊடகங்கள் ஆற்றும் பணியை விபரிப்பார்.
4. முரண்பாட்டைத் தகர்க்கவும் சமாதானத்தை பாதுகாக்கவும் வெகுசன ஊடகங்கள் தம் வெளிப்படுத்தல்களை நிகழ்த்தும் விதத்தை ஆராய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- சமய நலனை வலியுறுத்தும் ஒளிப்படங்கள், வீடியோ காட்சிகள் நடித்தற் செயற்பாடுகள், பாடல்கள் அல்லது வேறு பொருத்தமான ஓர் உத்தியைக் கையாண்டு சமய நலனின் அவசியத்தை மாணவரோடு கலந்துரையாடுக.
- சமய நலனை வலியுறுத்துவதற்காக ஊடகம் ஆற்றும் செயற்பாடுகளை அறிய மாணவரை வழிப்படுத்துக. இங்கு, சமய நலனை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளைக் கற்பதற்கு மாணவரை நெறிப்படுத்துக.

  உ-ம்:

  - பல்வேறு சமய நிகழ்வுகள் அதன் அவசியம், சமயம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பாங்கு, பண்பாட்டு நிகழ்வுகள், பல்வேறு சமயத்தவரும் பங்கு பற்றும் விதம்
  - பல்வேறு சமயத் தலைவர்களும் ஒன்றுகூடி கலந்துரையாடும் நிகழ்ச்சிகள்
  - பல்வேறு சமயப் பிரதிநிதிகள் ஒன்றாகத் தோன்றும் நிகழ்ச்சிகள்
  - தொலைக்காட்சி நாடகம், வானொலி நாடகம் மூலமாக சமய ஒற்றுமை வலியுறுத்தப்படும் விதத்தை ஆராய்தல்
- சமய ஒற்றுமைக்காக ஊடகத்தினால் ஆற்றப்படக்கூடிய பணிகள் பற்றிய எதிர்வுகூறல்களை மாணவரிடம் கேட்டறிக.
- ஒழுக்க, விழுமியம், மானுடப் பண்புகளின் அவசியத்தைக் கண்டறிய மாணவரை வழிப்படுத்துக.
- மானுட சமுகத்தில் இப்பண்புகள் அபிவிருத்தியடைவதற்காக ஊடகம் ஆற்றும் சேவையினை விமர்சனரீதியாக மதிப்பிட மாணவரை நெறிப்படுத்துக.

  உ-ம்:

  வானொலி நாடகம்/ தொலைக்காட்சி நாடகம் என்பவற்றில் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் மனித ஒழுக்க விழுமியங்கள், பண்புகள் சிறந்தனையா எனக் கண்டறிதல்.

- வானொலிப் பாடல்கள்/ தொலைக்காட்சிப்பாடல்களில் மேற்குறிப்பிட்ட அம்சம் எவ்வாறு உள்ளதெனக் கண்டறிதல்.
- சமூகத்திற்கு முன்னுதாரணமாக விளங்கும் சமூகப் படிமங்களை இனங்காண, கட்டியெழுப்ப ஊடகம் ஆற்றும் சேவை சரிவர நிகழ்கிறதா என்பதைக் கண்டறிய மாணவரை வழிப்படுத்துக. இங்கு,
  - குழந்தைகள், இளம் சமுதாயத்தினர் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடிய சமூகப் படிமங்களைக் கட்டியெழுப்புவது எவ்வாறு,
  - முதியோர் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமூகப் படிமங்களைக் கட்டியெழப்புவது எவ்வாறு என்பது பற்றிய மாணவர் கருத்துக்களை அறிதல்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- சமய சகவாழ்வு - Religious co-existence
- விழுமியங்கள் - Values

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- சமய சகவாழ்வை உறுதிப்படுத்தும் பல்வேறு ஊடக வெளியீடுகளின் மாதிரிகள்
- நல்லொழுக்கம், விழுமியங்கள், மனிதப்பண்புகளை மதிக்கும் கற்றல் சாதனங்கள்/ ஊடக வெளியீடுகள், மாதிரிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் கவனம் செலுத்துக.

- வெகுசன ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் சமய ஒற்றுமையை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளை இனங்காணல்
- வெகுசன ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் சமய சுதந்திரத்தைக் காக்கும் நிகழ்ச்சிகளின் நிலைப்பாடு யாதெனக் கண்டறிதல்
- வெகுசன ஊடகங்களில் நாடடின் ஒற்றுமை, அபிவிருத்தி என்பவற்றை வலியுறுத்தும் நிகழ்சசிகள் யாதென இனங்காணல்.

**தேர்ச்சி 5.0** :- வெகுசன ஊடகத்தின் வெவ்வேறு விதமான பிரதிநிதித்துவத்தின் யதார்த்தத்தையும் சமூகத்தின் செல்வாக்கையும் வியாக்கியானஞ் செய்து காட்சிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 5.4 வெகுசன ஊடகங்களின் பல்வேறு விதமான வெளியீடுகளில் அழகியல் தன்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தை யதார்த்தபூர்வமாக வியாக்கியானஞ் செய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. வெகுசன ஊடகங்களின் மூலம் களிப்பூட்டற்பணி/பொழுதுபோக்கு இடம்பெற வேண்டியதன் அவசியத்தை விளக்குவார்.
2. வெகுசன ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் களிப்பூட்டல் நிகழ்ச்சிகளை வகைப்படுத்திக் காட்டுவார்.
3. வெகுசன ஊடகங்கள் மூலம் களிப்பூட்டற் பணி இடம்பெற வேண்டிய முறைபற்றிய தீர்மானங்களை மேற்கொள்வார்.
4. வெகுசன ஊடகங்கள் களிப்பூட்டற் பணியை நிகழ்த்தும் முறையின் அழகியல் சார் தரத்தை விமர்சிப்பார்.
5. இரசனை பற்றிய எளிய விளக்கத்தைக் கூறுவார்.
6. உயர் இரசனை இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கூறுவார்.
7. உயர் இரசனையுடைய ஏதேனுமொரு ஊடக நிகழ்ச்சியொன்றை உதாரணமாக எடுத்து அதன் பண்பை மதிப்பிடுவார்.
8. உயர் இரசனையுடைய நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பார்.
9. வெகுசன ஊடகங்கள் மத்தியில் ஓர் குறிப்பிட்ட நிகழ்ச்சியை உதாரணமாக எடுத்து அதன் ஆக்கச் சிந்தனையை ஆராய்வார்.
10. சமூக பிரக்ஞை பற்றிய எளிய விளக்கத்தை வழங்குவார்.
11. ஏதேனுமொரு ஊடகத்தை தெரிவு செய்து அதன் நிகழ்ச்சிகளில் சித்தரிக்கப்படும் சமூகப் பிரக்ஞையை விபரிப்பார்.


**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- தொலைக்காட்சி அலைவரிசைகள் சிலவற்றில் ஒலிபரப்பாகும் பல்வேறு நிகழ்ச்சிகளின் ஒளிப்படங்கள், வீடியோ காட்சிகளை உபயோகிக்க. தொலைக்காட்சி நாடகம், பாடல்கள் என்பவற்றைப் பயன்படுத்துக.

  இங்கு அதி உயர் இரசனையுடைய நிகழ்ச்சிகள், உயர் இரசனையுடைய நிகழ்ச்சிகள் என அனைத்தையும் பயன்படுத்தலாம்.
- மேற்குறிப்பிட்ட ஒளிப்படங்கள் மற்றும் வீடியோக் காட்சிகளை மாணவர்கள் இரசிக்கும்படி செய்து அவற்றுள் மாணவர்கள் அதிகம் விரும்பும் நிகழ்ச்சிகளைப் பட்டியற்படுத்துக.
- பெரும்பாலான மாணவர்கள் விரும்பும், தொலைக்காட்சி நாடகம், பாடல்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைப் பட்டியற்படுத்துக.
- மாணவர்கள் தேர்ந்தெடுத்த நிகழ்ச்சிகளின் பிரபல்யத்திற்கான காரணிகளை வினவுக.
- இந்த நிகழ்ச்சிகளை ரசிப்பவர்கள் யார்? அவர்களது இரசனைக்குரிய காரணிகளை வினவுவதனூடாக ஆரம்ப கட்ட கலந்துரையாடலை ஏற்படுத்துக.

- மாணவர்கள் முன்வைக்கும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, அழகியல் சார் நிகழ்ச்சிகளை இரசிப்பதன் ஊடாக மனிதர்கள்,
  - மகிழ்ச்சி பெறல் (Enjoy)
  - களைப்பு/ சோர்வு நீங்கப் பெறல்
  - இரசனை விருத்தி பெறல்
  - அழகியல் சிந்தனை தூண்டப்படல்
  - சமூகப் பிரக்ஞை தோன்றல்

  முதலிய நன்மைகளை பெற்றுக் கொள்கின்றனர்.
- வெகுசன ஊடகங்கள் பொழுதுபோக்கு வழங்குவதில் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகின்றன என்பது பற்றிய மாணவர் கருத்துக்களை ஊக்கவிக்குக.
- இதற்காக, மாணவர்களுக்கு குழு ஒப்படை தனியாள் ஒப்படை என்பவற்றை வழங்கி வெவ்வேறு வெகுசன ஊடகங்கள் களிப்பூட்டற் பணியை மேற்கொள்வதற்காக வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை ஆராயும் பணியில் மாணவரை ஈடுபடுத்துக. மாணவர்களது தகவல்களை உரிய முறையில் காட்சிப்படுத்துக.
- கீழ்க்குறிப்பிடப்படும் வரைபடத்தினையும் உதாரணமாக எடுக்கலாம்.




- பத்திரிகை, வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களையும் மேற்குறிப்பிட்ட விதத்தில் ஆய்வு செய்ய மாணவரைத் தூண்டுக.
- இந் நிகழ்ச்சிகளில் மிகவும் பிரபலமான நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்ய எளிய ஆய்வொன்றினை மேற்கொள்ளும்படி மாணவரைத் தூண்டுக.
- ஒவ்வோர் நிகழ்ச்சிகளுக்கும் அதிக விருப்பத்தினை தெரிவிப்பது எத்தகைய பெறுனர்கள், அதற்கான காரணம் என்ன என்பது பற்றிய ஆய்வினை மேற்கொள்ள மாணவரைத் தூண்டுக.
- மாணவர்களது ஆய்வறிக்கையைக் கலந்துரையாடுக.
- வெகுசன ஊடகங்கள் பொது மக்களுக்கு உயர் தரமான பொழுது போக்கினை வழங்க மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் பற்றி மாணவரோடு கலந்துரையாடுக.
- இலங்கையின் வெகுசன ஊடகங்கள் பொதுமக்களுக்கு உயர் பொழுதுபோக்கினை வழங்குகின்றன/ வழங்குவதில்லை எனும் தொனிப்பொருளில் விவாத நிகழ்வொன்றை ஒழுங்கமைக்குக.

- பல்வேறு ஆக்கங்களின் மூலம் கிடைக்கப்பெறும் இரசனை பலவகைப்படும் எனவும் ஓர் ஆக்கத்தினுள் பலவிதமான இரசனைகளும் காணப்படலாம் என்பதையும் இரசனை என்பது தனிநபர் சார்ந்தது என்பதையும் விளக்குக.
- மனிதன் ஐம்புலன்களால் இரசனையைப் பெற்றுக் கொள்வதைக் குறிப்பிடுக.
- இரசனை பற்றிய விளக்கத்தை வழங்குக. ஐம்புலன்களால் பெற்றுக்கொள்ளப்படும் புலன் உணர்வுகளை இரசிப்பதே இரசனை எனக் குறிப்பிடுக.
- பல்வேறு ஆக்கங்களை எடுத்து நோக்கும்போது சில ஆக்கங்கள் உயர் இரசனையையும் வேறுசில ஆக்கங்கள் குறைவான இரசனையையம் கொண்டுள்ளன என்பதைக் குறிப்பிடுவதோடு சமூகத்தில் உயர் இரசனையுடைய மனிதர்கள் இருப்பதன் அவசியத்தைக் கலந்துரையாடுக.
- வெகுசன ஊடக நிகழ்ச்சிகள் எவ்வளவு தூரம் உயர் இரசனைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை விமர்ச்சிக்கும் கலந்துரையாடல்களை மேற்கொள்க.
- அல்லாவிடின், புத்திஜீவிகளை அழைத்து அவர்களது கலந்துரையாடலினூடாக இது பற்றிய போதிய விளக்கத்தை மாணவருக்கு வழங்குக.
- உயர் இரசனையுடைய நிகழ்சிகளை நுகர மாணவரை நெறிப்படுத்துக.

  இதற்காக, உயர் தரத்திலுள்ள பாடல்கள்/ சிறந்த பாடல்களை, மாணவர்கள் செவிமடுக்கச் செய்க.
- ஏதேனுமொரு ஆக்கச் செயற்பாடிற்காகக் கட்டுருவாக்கச் சிந்தனையைக் கட்டியெழுப்ப வேண்டிய முறை பற்றி மாணவரோடு கலந்துரையாடுக.
- வினைத்திறன் மிக்கதொரு ஆக்கத்தினை மேற்கொள்ள கவனிக்க வேண்டிய காரணிகளை மாணவர்கள் கண்டறியும் படி செய்க.

  உ-ம்:

  - அனுபவத்தைத் தெரிவு செய்தல்
  - நம்பகத்தன்மையைப் பேணிக் காத்தல்
  - கதாபாத்திர/ சம்பவ/ சந்தர்ப்ப சித்திரிப்பு
  - சம்பிரதாயங்களை மதித்தல்
  - அந்நியர்களால் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியதாயிருத்தல்
- ஏதேனுமொரு ஊடக நிகழ்ச்சியொன்றை உதாரணமாக எடுத்து அதன் கட்டுருவாக்கச் சிந்தனையை மதிப்பிட மாணவரை வழிப்படுத்துக.
- ஏதேனுமொரு ஆக்கம், அதியுயர் குணாதிசயங்களைப் பெற்றுக் கொள்ள அதன் அழகியலும் சமூகப் பிரக்ஞையும் காரணமாகும் எனக் குறிப்பிடுக.

  இங்கு, சமூகப் பிரக்ஞை பற்றிய எளிய விளக்கத்தை வழங்குக.
- சமூகத்தைப் பற்றிய அறிவு சமூகப் பிரக்ஞையாகும்.
- சமூகத்தில் உள்ள பல்வேறு பிணைப்புக்கள், சம்மதங்கள், சடங்கு, சம்பிரதாயம், பண்பாடு, நீதி, கலை, அரசியல் முதலானவை பற்றிய பரந்த அறிவினால் சமூகப் பிரக்ஞை கட்டியெழுப்பப்படும்.
- வெகுசன ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்கள்/ செய்திகள் எவ்வளவு தூரம் சமூகப் பிரக்ஞையை அதிகரிக்கின்றன என்பது பற்றிய மாணவ ஆய்வை ஊக்குவிக்க.

  இங்கு, சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் தகவல் செய்தி தயாரிக்கப்படும் முறை பற்றி மாணவரை ஆய்வு செய்யும்படி வழிப்படுத்துக.

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- இரசனை - Appreciation
- ஆக்கச்சிந்தனை - Creative thinking
- சமூகப் பிரக்ஞை - Social consciousness

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- களிப்பூட்டல் பணியை உறுதிப்படுத்தும் பல்வேறு ஊடக வெளியீடுகள்
- பொழுதுபோக்கு தொடர்பான அழகியலை பிரதிநிதித்துவப்படுத்தும் கற்றல் சாதனங்கள் ஊடக வெளியீடுகள் மாதிரிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- வெகுசன ஊடகங்களால் வெளியிடப்படும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வகைப்படுத்திக் காட்டுவார்.
- வெகுசன ஊடகங்கள் களிப்பூட்டலை மேற்கொள்ளும் முறை பற்றிய தகவல்களை முன்வைத்தல்
- ஏதேனுமொரு வெகுசன ஊடகத்தினூடாக களிப்பூட்டல் வழங்கப்படுத்துவதற்காக ஆற்றப்படும் சேவையினை விமர்சித்தல்
- இரசனை பற்றிய விளக்கத்தை வழங்குதல், உயர் இரசனையுடைய ஓர் நிகழ்ச்சியில் காணப்பட வேண்டிய பண்புகள்
- வெகுசன ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் நிகழ்ச்சிகளின் அழகியல் தரத்தை மதிப்பிடல்
- வெகுசன ஊடகங்களின் மூலம் வெளியிடப்படும் தகவல்/ செய்திகளினூடாக சமூகப் பிரக்ஞை கட்டியெழுப்பப்படும் விதத்தைப் பகுத்தாய்தல்

**தேர்ச்சி 6.0** :- நிலைத்த புகைப்படக் கருவித் தொழினுட்பத்தை சரியாகப் பயன்படுத்தி ஆக்க ரீதியான/ வெற்றிகரமான நிலைத்த புகைப்படமொன்றை ஆக்கும் தேர்ச்சியை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 6.1 வெவ்வேறு குறிக்கோள்களை அடைவதற்காகத் தொடர்பாடல் ஊடகத் துறையிலும் சமூகத்திலும் நிலைத்த புகைப்படக் கலை பயன்படுத்தப்படும் விதத்தையும் அந்தந்த ஒளிப்படங்களின் சிறப்புக்களையும் ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. நிலைத்த புகைப்படக்கலை அல்லது ஒளிப்படக் கலை யாதென எளிமையாக விளக்குவார்.
2. வாய்மொழியற்ற தொடர்பாடல் ஊடகமாக நிலைத்த புகைப் படக்கலை பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மதிப்பிடுவார்.
3. நினைவுச் சின்னமாகப் புகைப்படப் பாவனை காணப்படுவதன் அவசியத்தை விபரிப்பார்.
4. அச்சு ஊடகங்களில் நிலைத்த புகைப்படப் பாவனை இடம்பெறும் விதத்தை விபரிப்பார்.
5. சினிமா மற்றும் தொலைக்காட்சி ஊடகத்தில் நிலைத்த புகைப் படப்பாவனை பற்றி விபரிப்பார்.
6. நிலைத்த புகைப்படங்களின் சிறப்பம்சங்களை இனங்காண்பார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- நினைவுச் சின்னமாகப் பெற்றுக்கொண்ட அழகிய நிலைத்த புகைப்படங்கள் சிலவற்றை மாணவர் அவதானத்திற்கு காட்சிப்படுத்துக. அல்லது, பத்திரிகைகளில் பிரசுரமாகிய அழகிய நிலைத்த புகைப்படங்கள் சிலவற்றை மாணவர்க்குக் காட்சிப்படுத்துக. மேற்குறிப்பிட்ட புகைப்படங்கள் மூலம் வாய்மொழியற்ற தொடர்பாடல் நிகழும் விதத்தை மாணவரோடு கலந்துரையாடுக.
- அன்றாட வாழ்வில் நிலைத்த புகைப்படங்களைக் காணக்கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்களிடம் கேட்டறிக.
- அவற்றைக் காட்சிப்பலகையில் எழுதிக் காட்டுக.
- வெற்றிகரமான புகைப்படங்கள் சிலவற்றை மீண்டும் மாணவரிடம் காட்சிப்படுத்தி அதன் வெற்றிக்குக் காரணமாகும் அம்சங்களைக் கலந்துரையாடுக. அதன்போது,
  1. புகைப்படக் கருவி பயன்படுத்தப்பட்ட விதம்
  2. படச்சட்டகம் அமைக்கப்பட்ட விதம்
  3. ஒளி (வெளிச்சம்) பயன்படுத்தப்பட்ட விதம்
  4. புகைப்படப் பிடிப்பில் ஈடுபட்ட முறை
  5. புகைப்படக் கலைஞரின் திறமை
- நிலைத்த புகைப்படப் பாவனையின் அவசியத்தை மாணவருடன் கலந்துரையாடுக. இதன்போது,
  - நிலைத்த புகைப்படமொன்றிலே பிரசுரிக்கப்பட்ட தகவல் நிலையானது
  - தனிப்பட்ட நினைவுச் சின்னமாக, பல்வேறு நிகழ்வுகள் புகைப்படமாக எடுக்கப்படுவது

- தனிப்பட்ட நினைவுச் சின்னமாக, யதார்த்தத்தை வெளிப்படுத்தும் அம்சங்கள் பிரபல்யமடைந்திருப்பது
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் புகைப்படங்களாகப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றமை
- பெறுனர் எவ்வளவு நேரமும் புகைப்படத்தைப் பார்த்து ரசிக்கலாம் என்பது
- புகைப்படத்தை அடிப்படையாகக் கொண்டு வேறு உருவங்களைக் கற்பனை செய்யலாம் என்பது
- தனிப்பட்ட நினைவுச்சின்னமாகப் பெறப்படும் புகைப்படங்கள் கூடப் பிற்காலத்தில் விலைமதிப்பற்ற பொக்கிஷமாகத் திகழ்வதை உதாரணங்களுடன் விளக்குக.

- அச்சு ஊடகத்தில் நிலைத்த புகைப்படக்கலை பயன்படுத்தப்படுவதன் அவசியத்தை மாணவர் ஆராயும்படி செய்க.

  உ-ம்:

  பத்திரிகையில் உள்ள பல்வேறு ஒளிப்படங்களைத் திரட்டிவர மாணவரை நெறிப்படுத்துக.

- அப்புகைப்படங்களை பலவிதமாக வகைப்படுத்திக் காட்ட அறிவுரை வழங்குக.

  உ-ம்:
  - வர்ண/ கறுப்பு, வெள்ளை
  - நபர்சார்/ சம்பவம் சார்/ சூழல் சார்
  - விவரணம்/ அழகியல் சார்
  - உள்/ வெளி
  - பகல்/ இரவு
  - அண்மித்த/ தூர

- பத்திரிகையில் புகைப்படப்பாவனை பற்றிய தகவல்களை விளக்குக.
  - அச்சு ஊடகத்தில் புகைப்படம் பிரசுரித்தல் புகைப்பட ஊடகவியல் (Photo Journal-ism) எனப்படும். இது தொழில்சார் ஓர் பயன்பாடாகும்.
  - செய்தி/ விசேட கட்டுரைகள்/ விளம்பரங்களுக்காகப் புகைப்படங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை
  - செய்திக்காகப் பெறப்படும் புகைப்படங்கள் குறைந்தளவு ஆக்கத்திறனைக் கொண்டு காணப்படுகின்றமை
  - இதில் பொழுதுபோக்கை விட தகவல் வழங்குதல் அதிகளவு வரவேற்கப்படுகின்றமை
  - அச்சு ஊடகங்களின் புகைப்படங்கள் அத்தியாவசியமாயிருத்தல்

- சினிமா மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் நிலைத்த புகைப்படப்பாவனையின் அவசியத்தை விளக்குக.

  படப்பிடிப்புத் தளத்தை தெரிவு செய்ய,

  உ-ம்: ஒளிப்பதிவின் போது

  பரப்புரை நடவடிக்கைகளின்போது

  துறையில் உள்ள நிபுணர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக

  கற்றல் நடவடிக்கைகளுக்காக

- நிலைத்த புகைப்படத்தின் விசேட பண்புகளை அறிமுகம் செய்க. இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் காரணிகள் பற்றிய மாணவர் அவதானத்தைப் பெறுக.
- நிலைத்த புகைப்படங்களில் உள்ளடங்குவது ஏதேனுமொரு தருணம் என்பது
- நிலைத்த புகைப்படங்களின் மூலம் ஏதேனுமொரு பௌதிக நோக்கம் யதார்த்த பூர்வமாக அல்லது ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தப்படும் என்பது

- ஒளி மற்றும் இருள் பாவனையின் மூலம் நிலைத்த புகைப்படத்தின் தன்மை மாறுபடும் என்பது
- பயன்படுத்தும் புகைப்படக்கருவியின் தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு புகைப்படத்தின் தன்மை மாறுபடும் என்பது

## முக்கியமான பதங்கள் (Key words) :

- ஒளிப்பட ஊடகவியல் - Photo Journalism
- நிலைத்த புகைப்படக்கலை - Still photography
- காட்சித்தளம் - location
- ஒளியூட்டம் - lighting

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- நிலைத்த புகைப்படங்கள்
- கருப்பு வெள்ளைப் புகைப்படங்கள்
- கலர் புகைப்படங்கள்
- நினைவுச் சின்னமாகப் பெறப்பட்ட புகைப்படங்கள்
- பத்திரிகைப் புகைப்படங்கள்
- வேறு அச்சூடகப் புகைப்படங்கள்
- புகைப்படக் கருவிகளின் வகைகள்
- புகைப்படக் கருவியினை இயக்கும் விதம் பற்றிக் கூறும் கையேடு

## கணிப்பீடும் மதிப்பீடும்

- நிலைத்த புகைப்படம் பற்றி விளக்குதல்
- நினைவுச் சின்னமாக நிலைத்த புகைப்படம் பெற்றுக் கொள்ளப்படும் செயற்பாடு
- அச்சு ஊடகத்தில் நிலைத்த புகைப்படம் பயன்படும் விதம்
- சினிமா மற்றும் தொலைக்காட்சி ஊடகத்தில் நிலைத்த புகைப்படப் பாவனையின் அவசியம்
- நிலைத்த புகைப்படங்களின் விசேட பண்புகள்

**தேர்ச்சி 6.0** :- நிலைத்த புகைப்படக் கருவித் தொழினுட்பத்தை சரியாகப் பயன்படுத்தி ஆக்க ரீதியான/ வெற்றிகரமான நிலைத்த புகைப்படமொன்றை ஆக்கும் தேர்ச்சியை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 6.2 நிலைத்த புகைப்படக்கலையின் எளிய தொழினுட்ப அறிவை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. நிலைத்த புகைப்படக் கருவியின் தொழினுட்பச் செயற்பாடுகளை விபரிப்பார்.
2. படச்சுருள் ஒன்றைப் பரீட்சித்து அதன் தன்மையைக் கூறுவார்.
3. படக்களஞ்சிய ஊடகங்கள், நினைவாக அட்டைகளை பரீட்சித்து அதன் தன்மையினை இனங்காணுவார்.
4. இலக்கப் புகைப்படத் தொழினுட்பத்தின் விசேடத்தை விளக்குவார்.
5. புகைப்படம் மற்றும் எதிர்ப்படலத்துக்கு இடையேயான வேறுபாட்டைக் கூறுவார்.
6. புகைப்படக்கருவியின் மூலம் சரியாக நிலைத்த புகைப் படங்களைப் பெற்றுக் கொள்வார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- பல்வேறு தருணங்களின் போது எடுக்கப்பட்ட, வெற்றியீட்டிய தோல்வியடைந்த நிலைத்த புகைப்படங்கள் சிலவற்றை மாணவருக்குக் காட்சிப்படுத்துக.
- புகைப்படத்தின் இறுதியானது ஓர் ஆக்கச் செயற்பாடு என்பதை மாணவருடன் கலந்துரையாடுக.
- ஓர் சிறந்த புகைப்படத்திற்கான போதிய விளக்கத்தை மாணவர்களுக்கு வழங்குக. இதற்காக,

  புகைப்படக்கலை பற்றிய ஓர் பயிற்சிப்பட்டறையை ஏற்பாடு செய்து மாணவர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும்படி செய்க.

  1. புகைப்படக்கலை பற்றிய போதிய உயர் அறிவுடைய ஓர் புகைப்படக்கலைஞர் விரிவுரையாளரை அழைத்து புகைப்படக் கருவியின் செயற்பாடுகளை விளக்குக.
  2. படச்சுருள் மற்றும் இலக்க (Digital) புகைப்படக் கருவி தொழிற்படும் முறையினை விபரிக்குக.
  3. இலக்க புகைப்படத் தொழினுட்பத்தின் அடிப்படையை விளக்குக.
  4. கணினி மற்றும் இலக்கப் புகைப்படக் கருவிக்கிடையேயான தொடர்பினை விபரிக்குக.
  5. எடுக்கப்பட்ட ஓர் புகைப்படத்தை கணினியில் தரவேற்றி அதனைக் கணினித் திரையில் பார்வையிட ஏற்பாடு செய்க.
- தனிவில்லை எதிர்விம்பப் புகைப்படக்கருவியின் மூலமோ அல்லது வேறு ஏதும் புகைப் படக் கருவிகளின் மூலமோ புகைப்படம் ஒன்றை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும்படியான பிரயோக வகுப்பறைச் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.

### முக்கியமான பதங்கள் (Key words) :

- நிலைத்த புகைப்படக்கருவி - Still camera
- படச்சுருள் - Film role
- நினைவக அட்டைகள் - Memory card
- பலவசதிகள் உள்ளிடப்பட்ட புகைப்படக் கருவி - Compact camera

### தரவிருத்தி உள்ளீடுகள் :

- தேர்ச்சிக்கேற்ற ஒளிப்படங்கள்/ வரைபடங்கள்
- புகைப்படங்கள்
- வீடியோ காட்சிகள்
- புகைப்படக் கருவி
- படச்சுருள்
- நினைவக அட்டைகள்

### கணிப்பீடும் மதிப்பீடும்

- நிலைத்த புகைப்படக்கருவியின் செயற்பாடு பற்றிய போதிய விளக்கம்
- படச்சுருளின் தன்மையை இனங்கண்டு கொள்ளும் திறமை
- இலக்கத் தரவுகள் களஞ்சியப் படுத்தப்படும் முறை பற்றிய விளக்கம்
- தனிவில்லை எதிர்விம்பப் புகைப்படக் கருவியின் மூலம் சரியான முறையில் புகைப்படம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் திறமை

**தேர்ச்சி 6.0** :- நிலைத்த புகைப்படக் கருவித் தொழினுட்பத்தை சரியாகப் பயன்படுத்தி ஆக்க ரீதியான/ வெற்றிகரமான நிலைத்த புகைப்படமொன்றை ஆக்கும் தேர்ச்சியை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 6.3 தொழினுட்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் நிலைத்த புகைப்படம் பிடிக்கும் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. புகைப்படக்கருவியின் அங்கங்கள் அவற்றின் செயற்பாடுகளை வேறு வேறாக விபரிப்பார்.
2. புகைப்படமொன்றை எடுப்பதற்காகப் புகைப்படக்கருவியை பல்வேறு கோணங்களிலும் பரிமாணங்களிலும் வைப்பார்.
3. புகைப்படமொன்றிற்குத் தேவைப்படும் ஒளியை வெற்றிகரமாக வழங்குவார்.
4. சரியான தொழினுட்ப உத்திகளைக் கையாண்டு ஒளிப்படம் பிடிப்பார்.
5. அதி உயர் வெளிப்பாடுடைய ஓர் புகைப்படத்தை உருவாக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- இப்பகுதி பிரயோகச் செயற்பாடுகள் மூலம் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.
- மேற்குறிப்பிட்ட பாட நோக்கங்களை அடைவதற்கு உசிதமான பயிற்சிப்பட்டறைகள் ஏற்பாடு செய்வது சாலச் சிறந்தது. இதன்போது, புகைப்படக் கலைஞர்/ விரிவுரையாளர் ஒருவரை அழைத்துத் தகவல்களை வழங்குவது நன்று. அதன் மூலமாக மாணவர்கள் தனியாக/ குழுவாகக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும்படி அவர்களை வழிநடத்துக.

  இங்கு,

  1. ஆக்கத்திறனை வெளிப்படுத்தலின் முக்கியத்துவம் உள்ளடங்கலானதான நேரடி/ மறைமுக இலக்குகளை இனங்காணல்
  2. காட்சித் தளத்தில் முறையாக எமது நோக்கத்தைச் செயற்படுத்தல்
  3. உரிய புகைப்படக் கோணங்களைத் தெரிவு செய்தல்
  4. சரியான முறையில் ஒளி/ வெளிச்சம் வழங்கல்
  5. புகைப்படக் கருவியின் தொழினுட்பச் செயற்பாடுகளைச் சரியான முறையில் செய்தல்
  6. படம்பிடிக்கப்பட்ட ஓர் புகைப்படத்தை முறையான விதத்திலே கணினியில் தரவேற்றம் செய்தல்

  முதலான விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.
- வெளியீட்டு ரீதியாக வெற்றியீட்டிய ஓர் புகைப்படத்தின் முக்கிய குணங்குறிகளை மாணவருக்கு விளக்குக. இங்கு,

  புகைப்படத்தின் நுட்பம்

  வெளிச்சத்திற்கும் இருளுக்குமான இடைவெளி

  கள ஆழம்

  புகைப்படக் கருவியின் கோணம் முதலானவற்றை விபரிக்குக.

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- காட்சித்தளம் - Location
- இலக்கு வைத்தல் - Aiming
- குவியப்படுத்துதல் - Focusing
- ஒளி புகும் அளவு - Exposure
- புகைப்படக் கருவியின் துவாரப் படலை - Shutter
- ஒளி புகும் அளவுச்சுட்டி - Aperture
- படச்சட்டகம் - Frame
- புகைப்படக் கருவிக் கோணம் - Camera Angle
- கள ஆழம் - Depth of field
- கையால் இயங்கும் - Manual

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கையாலியங்கும் புகைப்படக்கருவி
- தானியங்கும் தனிவில்லை எதிர்விம்பப் புகைப்படக்கருவி
- புகைப்படக் கருவியின் அங்கங்களின் வரைபடங்கள்
- பிரயோகச் செயற்பாடுகளின்போது அவசியமாகும் வேறு உள்ளீடுகள்

**மதிப்பீடும் கணிப்பீடும்**

- புகைப்படக் கருவியின் அங்கங்களை விபரித்தல்
- புகைப்படப் பிடிப்பிற்காக போதிய ஒளிப்பிரவாகத்தை வழங்குதல்
- புகைப்படமொன்றை எடுப்பதற்காகப் புகைப்படக் கருவியை முறையான கோணத்தில் வைப்பதற்கான அடிப்படை அறிவைப் பெறல்
- புகைப்படப்பிடிப்பின் போது பின்பற்ற வேண்டிய தொழினுட்பச் செயற்பாடுகள் பற்றிய விளக்கம்
- சரியான தொழினுட்ப முறையினைப் பயன்படுத்தி புகைப்படம் எடுக்கும் திறனை மதிப்பிடல்

**தேர்ச்சி 6.0** :- நிலைத்த புகைப்படக் கருவித் தொழினுட்பத்தை சரியாகப் பயன்படுத்தி ஆக்க ரீதியான/ வெற்றிகரமான நிலைத்த புகைப்படமொன்றை ஆக்கும் தேர்ச்சியை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 6.4 நிலைத்த புகைப்படக்கலையின் ஆக்கபூர்வ விதிமுறைகள் உத்திகளைக் கையாண்டு பார்த்து விவரண மற்றும் ஆக்க ரீதியான புகைப்படங்களை ஆக்கும் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. விவரணப் புகைப்படமொன்றின் அம்சங்களை விளக்குவார்.
2. ஆக்க ரீதியான புகைப்படமொன்றுக்கும் விவரணப் புகைப்படம் ஒன்றுக்கும் இடையான வேறுபாட்டை ஒப்பிடுவார்.
3. ஆக்கரீதியான, விவரணப் புகைப்படங்களின் பிரயோகப் பெறுமானத்தை விளக்குவார்.
4. பல்வேறு ஆக்கபூர்வமான ஒளிப்படங்களைத் திரட்டுவார்.
5. விவரண, ஆக்கரீதியான புகைப்படப்பிடிப்பில் ஈடுபடுவார்.
6. விவரண, ஆக்கரீதியான புகைப்படங்களைக் காட்சிப்படுத்துவார்.
7. விவரண, ஆக்கபூர்வமான ஒளிப்படங்களைத் திரட்டிக் காட்சிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- ஆக்க ரீதியான மற்றும் விவரணப் புகைப்படங்களை மாணவருக்கு காட்சிப்படுத்தி/ வீடியோக் காட்சிகள் மூலம் மாணவர்கள் கிரகிப்பதற்குரிய சந்தர்ப்பத்தினை வழங்கி, அதன் பின் பாடப் பிரவேசத்தினை ஆரம்பிக்குக.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரு வகைப்பாட்டிலும் உள்ளடங்கும் புகைப்படங்களின் அவசியத்தைக் கலந்துரையாடுக.

  உ-ம்:

  நினைவுச் சின்னமாகப் பாதுகாத்தல்

  தகவல் வழங்குதல்

  சாட்சி வழங்குதல்

  பொழுதுபோக்கு வழங்குதல்

  ஆக்கத்திறன் வெளிப்படுத்தல்
- விவரண மற்றும் ஆக்கரீதியான புகைப்படங்கள் பற்றிய ஒப்பீட்டுத் தகவல் உள்ளடங்கும் பட்டியலை மாணவர் தயாரிக்கும்படி செய்க.
- மாணவர்களைக் குழுக்களாப் பிரித்து, பின்வரும் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.
  - ஆக்கரீதியான புகைப்படமொன்றின் நன்மதிப்பைப் பற்றிய சுருக்கமான விளக்கம் வழங்குதல்
  - ஆக்கரீதியான புகைப்படப்பிடிப்பின்போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை ஆய்வு செய்தல்
  - ஆக்கரீதியான மற்றும் விவரணப் புகைப்படக் கோவையினைத் தயாரித்தல்

- மாணவர்களை ஆக்க ரீதயிான மற்றும் விவரணப் புகைப்படங்களை ஆக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக. இதன்போது அவற்றின் நோக்கங்களையும் மாணவர் தேடியறியும் படி செய்க.
- இறுதியாகத் தாம் எடுத்த புகைப்படங்களை மற்றவர்களுக்குக் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்க.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- புகைப்படக் கண்காட்சி - Photographic exhibition
- விவரணப் புகைப்படங்கள் - Documentary photographs
- ஆக்கரீதியான புகைப்படங்கள் - Creative photographs

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- விவரணப் புகைப்படங்கள்
- ஆக்க ரீதியான புகைப்படங்கள்
- சுவரேடுகள்

## மதிப்பீடும் கணிப்பீடும்

கீழ்க்குறிப்பிடப்படும் காரணிகள் பற்றிக் கருத்திற் கொள்க.

- விவரணப் புகைப்படத்திற்கும் ஆக்க ரீதியான புகைப்படத்திற்கும் இடையேயான வேறுபாட்டை ஒப்பிடல்
- விவரண, ஆக்க ரீதியான புகைப்படக்கலையின் அவசியத்தை விளக்குதல்
- ஆக்க ரீதியான புகைப்படக் கலையின் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்
- விவரண, ஆக்க ரீதியான புகைப்படக் கண்காட்சியை மதிப்பிடல்